
GOKULAM ஜூலை '96 ரூ. 5/-



INDIA'S LARGEST SELLING COMICS

DIAMOND COMICS



JOIN THE DIAMOND BOOK CLUB

AND FILL YOUR LIFE WITH FUN, THRILL & LAUGHTER

Just fill in the coupon given below and send it to us along with a Money Order or Postage Stamps worth Rs. 10/—

We shall be offering five books every month. To get a rebate of **Rs. 4/-and Free postage (approx. Rs. 7/—)** you'll have to order five to six books at a time in a month. In case these books are not of your choice then you are free to select any six books from the list of 'Diamond Comics' titles and we shall send you the same. But to get these benefits you'll have to order six books at a time.

We'll send you a Choice Card every month. If you like the books offered by us in the Choice Card then you need not send us the card back. In case you do not like the books then you send us the names of atleast 7 books of your choice so that we can send you 5 books of your choice available with us at that time.

Under this scheme, we shall be sending you a V.P. Packet by the 20th of every month.

Yes I would like to become a member of 'DIAMOND BOOK CLUB' and take advantage of the benefits. I have read all your rules and shall abide by these. I promise to accept the V.P. every month.

NAME ____________________

ADDRESS ____________________

____

POST OFFICE __________ PIN CODE __________

I am sending Rs. 10/- by M.O./enclosing Postage Stamps worth Rs. 10/-

My Birth date ____________________

Note : We shall not enrol you as a member till we receive the membership fee.

NEW AMAR CHITRA KATHA Price Rs. 20/-

• Padmini • Rani Durgavati • Rama • A Bag of Gold Conis • The Gita • Shiva Parvati

DIAMOND COMICS PVT. LTD. X-30, OKHLA INDUSTRIAL AREA, PHASE-2, NEW DELHI-110020

DISTRIBUTORS : Madras : Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road • New Century Book House (P) Ltd. (Branches Madurai & Coimbato **Hyderabad :** • Shailendra Agencies, Bashir Bagh •Neel Kamal Book Distributors, Sultan Bazar **Bangalore :** Sapna Book Stall, Gandhi Nagar, •A K. Agencies, Rajaji Nagar •The Nav Karnataka Publications (P) Ltd., Crescent Road. **Calicut :** Remami Agencies P.O. Arakinar Calicut •Amity International Book House Arfa Bldg., East Kattaparamba, Calicut



கோகுலம்

1996

ஜூலை

மலர் : 14

இதழ் : 5

உயிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேணும் - பாரதியார்.

அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம்.

எல்லோரும் தேர்ச்சி பெற்று புது வகுப்புகளுக்குப் போயிருப்பீர்களே? சிலருக்குப் புதிய ஊர், புதிய பள்ளி, புதிய நண்பர்கள், புதிய ஆசிரியர்கள் என்று எல்லாமே புதிதாக இருக்கும். இதைப் பற்றியெல்லாம் கோகுலத்திற்கு எழுதி அனுப்பலாமே?

வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியை கோடை விடுமுறையில் வைத்தது நல்ல பயனைத் தந்துள்ளது. ஏராளமானவர்கள் தங்கள் படைப்புகளை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் பள்ளி மாணவராக இருந்தால், நீங்களும் இப்பொழுது கூடக் கலந்து கொள்ளலாம். உங்களுக்காகவே, இந்த இதழில் கூட இது பற்றிய மறு அறிவிப்பு வெளியாகிறது.

மதிஒளியின் 'புவனா தேடிய புதையல்' அடுத்த இதழில் முடிவடைகிறது. விறுவிறுப்புக் குறையாமல் இதுவரை இது உயிரோட்டமாகச் சென்று கொண்டிருக்கிறது.

சிறுவர்களிடையே படிக்கும் வழக்கம் குறைந்து வருவதை சர்வதேச அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. இது கவலை தரும் உண்மைதான். கல்வியறிவில்லாதவர்கள் கூட தொலைக்காட்சியையும் விடியோ படங்களையும் கண்டு களிக்கலாம். ஆனால், படிப்பதில் உள்ள மகிழ்ச்சியை அனுபவிக்க கற்றவர்களால் மட்டுமே உணர இயலும். இது சான்றோர் காட்டிய வழி.


இடம் இல்லாத காரணத்தால் இந்த இதழில் உங்கள் நூலகம், இடம்பெறவில்லை.

அடுத்த இதழில் சந்திப்போம்.


அன்புடன்,

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)



கோகுலம்





"சிறுவர்கள் எல்லாம் சேர்ந்து பட்டிமண்டபம் நடத்தறாங்களா! என்ன தலைப்பு?"

"பிள்ளையாருக்குப் பிடிச்சது கொழுக்கட்டையா, பாலா என்று தான்."

— அ.சு. கிருஷ்ணன்



"ஏண்டா, செருப்பைக் கையில் எடுத்துட்டு வரே?"


"கால்ல போட்டா தேஞ்சுடுமேப்பா?


- பா. ஜெயக்குமார்

ஜூலை – 1996

இந்த இதழில்.....








"மாடிப்படியிலேந்து பையன் கீழே விழுந்துட்டான். ஊமைக் காயமா இருக்குமோன்னு கவலையா இருக்கு டாக்டர்."

"அதான் நல்லா பேசறானே, ஏன் கவலைப்படறீங்க?"

- சீர்காழி. வி. ரேவதி





திட்டம் போட்டால் உண்டு வெற்றி!

உழைப்பும் வெற்றியும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவை. வெற்றிக்கு அடிப்படைக் காரணமாக உழைப்பு இருக்கும்; உழைப்புக்குப் பரிசாக வெற்றி இருக்கும். உழைப்பு இல்லாத வெற்றி கிடையாது. வெற்றி கிடைக்காத உழைப்பும் இல்லை.

'அப்படியானால், லாட்டரிச் சீட்டில் இலட்சம் ரூபாய் பரிசு விழுகிறதே. இது வெற்றி ஆகாதா?' என்று கேட்கலாம். இது உழைப்புக்குக் கிடைத்த வெற்றி அல்ல. குருட்டாம்போக்கு அதிர்ஷ்டத்தின் விளைவு. லாட்டரிச் சீட்டு வாங்கிய எத்தனையோ லட்சக்கணக்கானவர்களுக்குப் பரிசு விழவில்லையே, ஏன்? இந்தப் பரிசு உழைப்பினால் கிடைத்தது அல்ல. உழைப்பினால் கிடைக்கக்கூடியது என்றால், அது உறுதியாகக் கிடைக்கும் என்று நிச்சயம் செய்து கொள்ளலாம். உழைப்பு, நிச்சயமான வெற்றியைத் தரக்கூடியது.

உழைப்பின் பயனாகக் கிடைக்கக்கூடிய முழு வெற்றியையும் பெற வேண்டும் என்றால், திட்டமிடவும் தெரிந்திருக்க வேண்டும்.

நெப்போலியன் பெற்ற மாபெரும் வெற்றிகளுக்குக் காரணமாக அமைந்தவை சீரான திட்டமிடல்தான். சரியானத் திட்டமின்றி வெற்றிக் களிப்பில் சந்தித்த "வாட்டர்லூ" போர், நெப்போலியனின் தலைவிதியையே மாற்றி அழிவுக்கு வழிசெய்தது.

வீட்டில் அம்மா உப்புமா செய்யும் போது கவனித்திருக்கிறீர்களா? தேவையான அளவு ரவையை எடுத்து, கல் புழு இல்லாது பொறுக்கி வைத்துக் கொள்ளுவாள். பச்சை மிளகாய், இஞ்சியை நறுக்கி வைத்துக் கொள்ளுவாள். பிறகு தான் அடுப்பைப் பற்றவைப்பாள். இதுதான் திட்டமிடல்.

ஆபரேஷன் செய்யப் போகும் டாக்டர், அதற்குத் தேவையான பல்துறை நிபுணர்களை வரவழைக்கிறார். கருவிகளை எண்ணி, சேகரித்து வைக்கிறார். அவசரத் தேவைக்கு, இரத்தம் கொடுக்கவும் ஏற்பாடு செய்து வைத்து, பிறகே ஆபரேஷனுக்குத் தேதி, நேரம் தருகிறார்.

டீவியைப் பார்த்து ரசிக்கிறோம். ஒவ்வொரு நிகழ்ச்சியையும் சரியாக குறிப்பிட்ட மணித்துளிகளில் முடிவடைய வைத்து, அடுத்த நிகழ்ச்சிக்கு வழிவிட்டு, சரியாக அமைக்கிறார்களே! இது எப்படி? எல்லாம் திட்டமிடல்தான்.



பள்ளியில் முதல் இடம்பெறும் மாணவர்களைக் கேட்டுப் பாருங்கள். தங்களது சிறப்பான வெற்றிக்கு திட்டமிட்டுப் படிப்பதுதான் காரணம் என்பதை விளக்குவார்கள்.

நேரம், பொன்னை விட அருமையானது. உங்களிடம் உழைப்பும், திறமையும், ஊக்கமும் இருக்கலாம். இவைகளோடு திட்டமிடலும் இருந்து விட்டால், மிகச் சிறப்பான வெற்றி உங்களுடையதுதான். அதிலும் நேரத்தைக் கவர்ந்து கொள்ள எத்தனையோ பொழுது போக்கு சாதனங்கள் வந்து விட்ட இக் காலத்தில் திட்டமிடல் என்பது வளரும் மாணவர்களுக்கு மிக மிக அவசியம்.


பத்து நிமிஷங்களுக்கு மேல் டீ.வி. பார்க்கக் கூடாது என்று உட்காருவீர்கள். ஆனால், உங்களை அறியாது முக்கால் மணி நேரம் ஓடியே போய் விடும்!

இதற்கெல்லாம், அருகேயே யாராவது நமக்கு வேண்டியவர்கள் கூடவே இருந்து, நம் திட்டம் உடைவதை அவ்வப்பொழுது உணர்த்தினால் எத்தனை உதவியாக இருக்கும் என்று எண்ணுகிறீர்கள் இல்லையா? இப்படி ஓர் உற்ற நண்பனாக ஏற்கெனவே ஒருவர் இருக்கிறார்! அவர்தான் அலாரம் கடிகாரம்! அதிகாலையில் குறிப்பிட்ட நேரத்தில் எழுந்திருக்க வேண்டுமா, குறிப்பிட்ட நேரத்தில் தூங்கப் போக வேண்டுமா, பள்ளிக்குக் கிளம்பும் நேரம் வந்து விட்டதா, பொழுதுபோக்க ஒதுக்கிய நேரம் முடிந்து விட்டதா என்பதை எல்லாம் அறிவித்து உங்களை வழிநடத்தும் உற்ற நண்பன் அலாரம் கடிகாரம்தான். கை கடிகாரங்களில் கூட இப்பொழுது அலாரம் உள்ளவை வருகின்றன. அலாரப்படி பழகிக் கொண்டு விட்டால், சில நாட்களுக்குப் பிறகு அலாரத்தின் உதவி இன்றியே உங்களுக்கே ஓர் உள்ளுணர்வு தோன்றி, குறிப்பிட்ட நேரத்தில் அந்தப் பணியைச் செய்ய ஆரம்பித்து விடுவீர்கள்.

திட்டம் போட்டு நடக்கப் பழகிக் கொண்டு விட்டால் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைத்து விட்டீர்கள் என்பது பொருள். காலத்தை மட்டும் திட்டமிடாது, செய்ய வேண்டிய பணிகளுக்கு என்னென்ன தேவைப்படும் என்பதையும் உங்களை அறியாமல் சிந்திக்கத் தோன்றும். இதைத்தான் திருவள்ளுவர்,

''பொருள் கருவி காலம் வினை இடனொடு ஐந்தும்
இருள் தீர எண்ணிச் செயல்''

என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எழுதி வைத்தார்.



அட்டையில் அலாரம் கடிகாரத்தைப் பெறுவது சிறுவன் **அருண்**
அளிப்பவர் திருமதி **ஜீவா ராணி**
வண்ணப்படம் : **ஸ்ரீஹரி**

சின்னப்பட்டம்



சின்னச் சின்னப்பட்டம்
சிவப்புநிறப் பட்டம்
அண்ணன் தந்த பட்டம்
அன்பாய் போற்றும் பட்டம்!
நூலால் பறக்கும் பட்டம்
நூறடி உயரும் பட்டம்
வாலைத் தூக்கிப் பறக்கும்
வந்து தரையில் இறங்கும்!
காற்றடித்தால் உயரும்
காந்தம்போல பாயும்.
போட்டி வந்தால் இறக்கி
பத்திரமாய் காப்பேன்!

— தேனி முருகேசன், தேனி.

நல்லபிள்ளை



நல்லபிள்ளை என்பவன்
நன்கு பாடம் படிப்பவன்
தொல்லை ஏதும் தந்திடான்
துன்பம் கண்டு துவண்டிடான்.
உண்மை தன்னைப் பேசுவான்!
உயர்ந்த நெறிகள் பேணுவான்.
நன்மை எல்லாம் செய்குவான்
நல்லோர் மதிக்க விளங்குவான்!

— டி. தென்றலரசு, அனந்தபுரம்.

முறுக்கு



சின்ன சின்ன முறுக்கு
சிறிய நல்ல முறுக்கு
அடுப்பங்கரையில் இருக்கு
அடுக்கு நிறைய இருக்கு
ஆசையுடன் நொறுக்கு
அனைவருக்கும் கொடுத்து
ஆனந்தமாய் தின்ன
அதிக ஆசை இருக்கு!

— ஆ. சங்கரசுப்ரமணியன், முறப்பநாடு.



காந்தித் தாத்தா



காந்தி தாத்தா வந்தாரு
கருணை பொங்கப் பார்த்தாரு...
நான்கு முழத் துண்டுடன்
நடந்து தாத்தா வந்தாரு.
அடிமைத் தளையை உடைக்கவே
அல்லும் பகலும் முயன்றாரு.
அகிம்சை வழியில் நின்றாரு
அகிலம் வியக்க வென்றாரு.

— ஆர். பாலு பிரகாஷ், நாலுவேதபதி.

அம்மா



அம்மா நல்ல அம்மா - சோறு
ஆக்கிப் போடும் அம்மா
அன்பு காட்டும் அம்மா - என்றும்
அறிவு சொல்லும் அம்மா!
காய்ச்சல் நமக்கு வந்தால் - மனம்
கவலை கொள்ளும் அம்மா
கஷ்டப் நிறையப்பட்டு - நம்மைக்
காக்கும் தாயே அம்மா!
அம்மா கூறும் வார்த்தை - நல்ல
அமுதமாகும் கேட்போம்
அடக்கமாக வாழ்வோம் - அம்மா
அனைவருக்கும் தெய்வம்!


— அவை - எழிலன், மேலச்சாலை.

ஏன்



ஒவ்வொரு வீட்டிலும் இருந்திருவேன்!
ஒவ்வொரு உறுப்பிலும் பயன்தருவேன்!
மாந்தர் மகிழ மலர் தருவேன்!
மாசு ஒழிந்திட உதவிடுவேன்!
மழையும் பெய்திட உதவிடுவேன்!
மண்ணரிப்பினையும் தடுத்திடுவேன்!
சுவாசிக்கக் காற்றினைத் தந்திடுவேன்!
சாப்பிடக் காய்கனி தந்திடுவேன்!
இத்தனை நன்மை செய்கின்றேன்!
இருந்தும் என்னை அழிப்பது ஏன்?
எத்தனை நிபுணர் எச்சரிக்கை!
எதையும் ஏனோ ஏற்பதில்லை!

— கே.பி. ஜவஹர் சசிகுமார் ஈரோடு.



போண்டா பார்!

போண்டா பார்! போண்டா பார்
பொன்னிற உருண்டை போண்டா பார்!
உண்ணத் தூண்டும் போண்டா பார்.
உளுத்தம் மாவு போண்டா பார்!
தங்கை விரும்பும் போண்டா பார்!
தட்டில் அடுக்கிய போண்டா பார்.
எங்கும் புகழும் போண்டா பார்!
எவரும் கேட்கும் போண்டா பார்.

— எம். முன்சிப்ஷா (கத்திரி),
சென்னை - 2.





வணங்கு!


எறும்பு போல உழைக்கணும்!
இரும்பைப் போல இருக்கணும்!
அரும்பு போல மலரணும்
அடிக் கரும்பாய் இனிக்கணும்!
நிலவு போல ஒளிரணும்
நதியைப் போல உருளணும்!
மலையைப் போல உயரணும்
மணியைப் போல ஒலிக்கணும்!
வில்லைப் போல வளையணும்
வண்டி போல விரையணும்!
முல்லை போல சிரிக்கணும்!
நல்லோரை வணங்கணும்!


— க. கலீபத்துல்லா, குணமங்கலம்.

கோடை காலம்

கோடை காலம் வந்தது
கொளுத்தும் வெயில் தகிக்குது!
வாடிச் செடிகள் கருகுது
வறண்டு பூமி வெடிக்குது!
செருப்பில்லாமல் காலிலே
நடந்து போக முடியலே!
தண்ணீர் குடிச்சுத் தீரலே
தாகம் மட்டும் அடங்கலே!
கோடை எப்போ முடியுமோ?
கொல்லும் வெயில் குறையுமோ?

— தக்கோலம் அ. முஸ்தபா, தக்கோலம்.





தேங்காய்

தென்னை தரும் தேங்காய்
திரண்டு உருண்ட தேங்காய்
சிரட்டை உள்ளே தேங்காய்
சிறந்த பெரிய தேங்காய்
நீரும் உள்ள தேங்காய்
நிறைந்த பயன் தேங்காய்
கறிக்கு உதவும் தேங்காய்
கடவுள் விரும்பும் தேங்காய்!

— எம். சேக் உசேன், வடகரை.

கதி என்ன?

இலை விழுந்தால் உரமாகும்
மலர் விழுந்தால் மாலையாகும்
கனி விழுந்தால் உணவாகும்
விதை விழுந்தால் மரமாகும்
மரம் விழுந்தால் விறகாகும்
மரநிழல் விழுந்தால் களைப்பாற்றும்
மனிதன் விழுந்தால் கதிஎன்ன?
மனதில் கேட்டு உதவிடுவாய்?

— ர.சி. கஜேந்திரன், பனைமலை.



சட்டை!

நாம் அணியும் சட்டை
நல்ல வண்ணச் சட்டை
கழுத்து உள்ள சட்டை
கை இருக்கும் சட்டை
பை வைத்த சட்டை
பார்க்க அழகுச் சட்டை
போட்டு மகிழச் சட்டை
பல வண்ணச் சட்டை
உடலைப் பேணும் சட்டை
உறுதி மிக்க சட்டை!

— எம். சேக் உசேன், வடகரை.






கோடை நிறைவாகக் கழித்தேன்!

உதவும் வேலை!

“எங்கள் வீட்டு எதிரில் தையற் கடை ஒன்று உள்ளது. நான் கோடை விடுமுறையில் அங்கு சென்று தையற்காரரிடம் காஜா எடுப்பது, எம்மிங் செய்வது பட்டன் கட்டுவது போன்ற சில்லறை வேலைகளைக் கற்றுத் தருமாறு கேட்டேன். அவரும் வேலைபளு அதிகம் இல்லாத காரணத்தால் ஆர்வத்துடன் கற்றுத் தந்தார். இப்பொழுது இவ்வேலைகள் எல்லாம் எனக்கு அத்துப்படி. சிறுசிறு



தையல்வேலைகளைக் கூடச் செய்வேன்.” இது கண்டிப்பாக எதிர்காலத்தில் எனக்கு உதவும். நீங்கள்கூட நேரத்தை வீணாக்காது இப்படி ஏதாவது வேலையைப் பழகிக் கொள்ளலாமே?

கோ. ஆனந்தன், சோழன்மாளிகை.

அடுத்த ஆண்டுப் பாடம்!

நான் விடுமுறையில் அடுத்த ஆண்டுக்கான பாடங்களைப் படிக்கிறேன். சமயம் கிடைக்கும் போது




அம்மாவுடன் சமையலுக்கு உதவுவது, வீடு சுத்தம் செய்வது தோட்ட வேலை எல்லாம் செய்கிறேன்.

செல்வி, நெய்யூர் அஞ்சல்.

தட்டச்சு பயின்றேன்!

எத்தனை வருடம்தான் வீட்டிலும்.



வெளியூரிலும் விடுமுறையைக் கழிப்பது? நமக்கென்று பயன்படக் கூடிய, அதே சமயம் பிற்காலத்தில் வழிகாட்டக்கூடிய ஏதாவது ஒன்றைக் கற்று, விடுமுறையை பயனுள்ள முறையில் கழிக்கலாம் என்று திட்டமிட்டேன். அதன்படி இவ்விடுமுறையில் தட்டச்சுக் கல்வி பயின்று பயனுள்ள தொழில் ஒன்றைக் கற்று கொண்டு வருகிறேன். மற்ற மாணவர்களும் என்னைப்போலவே விடுமுறையை தட்டச்சு கற்கப் பயன்படுத்திக் கொள்ளலாமே?

வி. பிரபாகர், விருத்தாசலம்

விடுமுறையைக் கழித்தேன்

ஊரில் ஒரு சிறிய பன்ரொட்டி செய்யும் கடை உள்ளது. அதில் வேலை செய்தேன். பன்ரொட்டி உற்பத்தி செய்யும் தொழிலை நன்கு கற்றுக் கொண்டேன். அது அவர்களுக்கு உதவியாகவும் இருந்தது. ஒரு மாதம் கழித்து அங்கு வேலை செய்ததற்காக எனக்கு நூறு ரூபாய் கிடைத்தது. இந்த நூறு ரூபாயை எனது பள்ளிப் படிப்புக்காகச் செலவு



செய்தேன். விடுமுறையைப் பயனுள்ள முறையில் கழித்தேன். இது போலவே நீங்களும் பயனுள்ள முறையில் கழிக்கலாமே? இதையும் தவிர பல ஓவியங்கள் வரையப் ப .க்க கொண்டேன்.

மு. செந்தில்ராஜா, மல்லசமுத்திரம்.

தன்னம்பிக்கை

விடுமுறையில் நான் கம்யூட்டர் கோர்ஸ் படித்தேன். எனது தந்தை தட்டச்சுப் பயிலகம் வைத்துள்ளார். நான் எனது தந்தைக்கு உதவியாகத் தட்டச்சு வேலை



களைச் செய்து கொடுத்தேன். ஒரு சில மாணவிகளுக்கும் தட்டச்சு பயிற்சி கொடுத்தேன். என் தந்தை வெளியில் சென்றிருந்த போது பயிலகத்தை கவனித்துக் கொண்டேன். அப்பாவுக்கு உதவியாக என்னால் பயிலகத்தைக் கவனித்துக் கொள்ள முடியும் என்ற தன்னம்பிக்கை எழுந்துள்ளது.

பி.பி. சங்கீதா, பெரியகுளம்.

இலாபம்!

பத்தாம் வகுப்புத் தேர்வு எழுதி இருக்கிறேன். தேர்வு முடிவு தெரியும் வரை எங்கும் செல்லவும் மனமில்லை. அதனால் வீட்டுக்கு எதிரில் இருக்கும் சைக்கிள் கம்பெனியில் அமர்ந்து அங்கு அவர்கள் செய்யும் பணிகளைப் பார்த்து வந்தேன். இப்போது எனக்கும் சைக்கிளுக்குப் பஞ்சர் ஓட்டத் தெரியும்! சில உறுப்புகளை சேர்க்கத் தெரியும்! என் வீட்டில்




உள்ள சைக்கிளுக்கு நானே பஞ்சர் ஒட்டி விடுவேன். அதற்குத் தேவைப்படும் சாமான்களைத் தயாராக வாங்கி வைத்துக் கொண்டிருக்கிறேன். அந்தக் கடை இல்லாத போது எல்லோரும் என்னைத்தான் தேடி வருகிறார்கள். எனக்குப் பணமும் கிடைக்கிறது. அதோடு மற்றவர்களிடம் எப்படி மரியாதையாகப் பழக வேண்டும் என்பதையும் தெரிந்து கொள்கிறேன். இது எத்தனை பெரிய இலாபம்! நன்மை!

பூ. இரத்தின பிரகாஷ், மன்னை.

சைக்கிள் கற்றுக் கொடுத்தேன்

எனக்கு நன்றாக சைக்கிள் விடத் தெரியும். இந்த விடுமுறையில் சைக்கிள் விடத் தெரியாத சில சிறுவர்களை எங்கள் பள்ளி மைதானத்துக்கு அழைத்துச் சென்று, வாடகை சைக்கிளை எடுத்து



அவர்களுக்கு சைக்கிள் விடக் கற்றுக் கொடுத்து விட்டேன். இப்போது அவர்கள் நன்றாக சைக்கிள் விடுகிறார்கள். என்னை அவர்களின் பெற்றோர்கள் பாராட்டி நன்றி கூறினர். விடுமுறையைப் பயனுள்ளதாகக் கழித்ததால், மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருக்கிறது.

பா. ஜெயக்குமார், வந்தவாசி,

உதவி புரிந்தோம்

கோட்டையூர் என்னும் எங்கள் கிராமம் செட்டிநாட்டின் முக்கியப் பகுதி. இங்கு அமைதியும், அழகும் கொஞ்சும் எழிலான சூழ்நிலை. பலவித மக்கள் வாழும் இப்பகுதியில் சமீப காலமாக ஜாதிப் பிரச்னை நிலவி வருகிறது. அதற்காக எழுந்த கலவரங்களால் பல்வேறு




ஏழைகள் துன்பப்பட்டனர். இதை அறிந்த நானும், என் தோழிகள் சசி, ராஜேஸ்வரி, நாகம்மை மற்றும் சசியின் அண்ணன் முரளி ஆகிய அனைவரும் சேர்ந்து ஒரு திட்டம் வகுத்தோம். அதன்படி எங்களுக்குப் பெற்றோரிடம் இருந்து கிடைத்த பாக்கெட் மணியையும், உறவினர்கள் பரிசளித்த பணத்தையும் கொண்டு ஒரு சிறிய தொகையைத் திரட்டினோம். அதோடு எங்களுக்குத் தெரிந்த பலரிடம் காரணத்தைக் கூறி நன்கொடை பெற்று கணிசமான ஒரு தொகையைச் சேர்த்து வைத்தோம். ஏழை மக்களின் வீடுகளுக்குச் சென்று விசாரித்து அவர்கள் குறைகளைக் கேட்டுத் தெரிந்து கொண்டோம். நோயால் வாடுபவர்களை மருத்துவ மனைக்கே கொண்டு சென்றோம். சிறு குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போடவும் உதவினோம். மேலும் தீ விபத்தில் குடிசைகளை இழந்தவர்களுக்கு எங்களிடமிருந்த பணத்தைக் கொண்டு முடிந்த அளவுக்குக் கட்டிக் கொடுத்தோம். எங்கள் ஊக்கத்தைக் கண்டு எங்களூரைச் சேர்ந்த இளைஞரும், பெரியோரும் பாராட்டி உதவிகளையும் செய்து உற்சாகப்படுத்தினர். விடுமுறையில் நாங்கள் செய்த

நற்பணிகளைப் போல் செய்ய நீங்களும் செய்யலாமே?
ஜூலி லிஷா, கோட்டையூர்.

தொழில் கற்றேன்!

கோடை விடுமுறையில் வெளியூருக்குப் போகவில்லை. எங்களுக்குத் தெரிந்த ஒருவரது அச்சுக் கூடத்தில் வேலை கற்கப் போனேன். தினமும் பத்து ரூபாய் சம்பளம் தந்தார்கள். அதோடு அச்சுக் கோக்கவும் கற்றுக் கொண்டேன். அச்சு மிஷின்களைப் பற்றி ஓரளவு தெரிந்து கொண்டேன். விடுமுறை கழிந்து, பள்ளியும் திறந்தது. இந்தப் பணம் தற்போது எனது பள்ளிச் செலவிற்காகப் பயன்படுகிறது. அம்மா அப்பாவுக்கு அதிகச் சுமை இல்லை. பெற்றோருக்கு ஒரே



மகிழ்ச்சி. எனக்கும் பெருமை. விடுமுறையை வீணாக்காமல் நீங்களும் ஏதாவது ஒரு தொழிலைக் கற்றுக் கொள்வது மிகவும் பயனுள்ளதாகும்!
எஸ். வினோத்பாபு, கபித்தலம்.

சபாஷ் வாங்கினேன்

நான் பத்தாம் வகுப்பை இந்த ஆண்டு முடித்துள்ளேன். எங்களுக்குக் கொடுக்கப்பட்ட 'கேள்வித் தாள்கள் (ஜூலை மாதத் தேர்வு முதல் முழு ஆண்டு தேர்வு வரை) அனைத்தையும் சேகரித்து வைத்துள்ளேன். அதை யாராவது இந்த வருஷம் 10-ம் வகுப்பு படிக்கிறவர்களுக்கு கொடுக்க திட்டமிட்டுள்



ளேன். மேலும்; புதுசா இரண்டு மரக் கன்றுகளை வீட்டின் முன்புறம் நட்டுள்ளேன். எங்க அம்மாவிடமிருந்து சமையல் செய்யவும் கொஞ்சம் கற்றுக் கொண்டிருக்கிறேன்.

எங்க வீட்டில் எல்லோரும் புத்தகத்தைப் படிச்சுட்டு குப்பை போல கண்ட கண்ட இடத்தில் போட்டு விடுவார்கள். அதை எல்லாம் அடுக்கி வச்சி அப்பா, அம்மாகிட்ட "சபாஷ்!" வாங்கியிருக்கேன்.
ம. இராஜ்குமார், அருப்புக்கோட்டை.

குட்டிநாய் வந்தது

இந்த வருடம் பத்தாம் வகுப்புப் படிக்கிறேன். இந்த விடுமுறையில் என்னால் முடிந்தவரை என் வயதுள்ள மாணவர்களை நண்பர்களாக்கிக் கொண்டேன்.

அறிவு பூர்வமான பலவிஷயங்களை அவர்களுடன் பகிர்ந்து கொண்டேன். என் தாயாருக்கு சிறுசிறு உதவிகள் செய்தேன். அதனால் அவர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. எனக்கு நாய் என்றால் ரொம்ப ஆசை. இந்த லீவில் ஒரு குட்டி நாயை எங்கள் வீட்டில் வளர்த்து வருகிறோம். இப்பொழுதெல்லாம் மாலையில் பள்ளி முடிந்து வீட்டிற்கு வந்து



குட்டி நாயுடன் விளையாடுவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது.

ஜெயராமன், சென்னை.

பெருமகிழ்ச்சி

எட்டாம் வகுப்புக்குத் தேர்ச்சி பெற்றுள்ளேன். சென்ற ஆண்டு விடுமுறையின்போது வெளியூரில் உள்ள உறவினர் வீடுகளுக்குச் சென்று மாதக் கணக்கில் தங்கிவிட்டோம். அதனால் இவ்வாண்டு வெளியூருக்குப் போகபோவதில்லை என்



றும், விடுமுறை நாட்களைப் பயனுள்ளதாகக் கழிக்கும் படியும் தந்தை கூறிவிட்டார். அதற்கு ஏற்றபடி தினசரி ஐந்து புதிய ஆங்கில வார்த்தைகளை அகராதியின் துணைகொண்டு தெரிந்து கொண்டு வந்தேன். எங்களுக்குத் தெரிந்த சைக்கிள் ரிப்பேர் கடைக்குச் சென்று, பஞ்சர் ஒட்டும் முறையை கவனித்துத் தெரிந்து வந்தேன். பசையை வாங்கி பழைய டயர் டியூப்களில் ஒட்டிப் பார்த்தேன். சரியாக வந்தது. பிறகு நானே என் சைக்கிள்களுக்கும் தந்தையின் உதவியுடன் பழைய துணிகளைத் தைக்கவும் கற்றுக் கொண்டேன். கோடை விடுமுறை மிகவும் பயனுள்ளதாக அமைந்ததில் மனதில் பெருமகிழ்ச்சி!

த. வரதன், திருவாரூர்.

செஸ் கற்றேன்!

நான் மூன்றாம் வகுப்புக்குத் தேர்ச்சி பெற்றேன். இந்த விடுமுறைக்கு சில காரணங்களால் இவ்வாண்டு வெளியூர் போகவில்லை. பேப்பரில் வந்த குற்




றாலீஸ்வரன்., அருண்பாலாஜி போன்றவர்களின் சாதனை என் மனத்தில் ஏதாவது கற்க வேண்டும் என்ற துடிப்பை ஏற்படுத்தியது. எங்கள் குடியிருப்பில் உள்ள ஓர் அண்ணனிடம் தினசரி ஓய்வு கிடைக்கும் போது புத்தகங்களில் வரும் படங்களைப் பார்த்து வரைவதுண்டு. என் தந்தை எனக்கு செஸ் பற்றிய புத்தகம் வாங்கித் தருவதாகவும் அடுத்த ஆண்டு விடுமுறைக்கு ஓவியம் வரைய தனியாக பயிற்சிக்கு ஆசிரியரிடம் அனுப்புவதாகவும் கூறியுள்ளார். கோடை விடுமுறை என்னைப் பொருத்தவரை பயனுள்ளதாகவே கழிந்திருக்கிறது.

த. பரதன், திருவாரூர்.

நல்லது செய்தோம்!

சென்ற ஆண்டு கோடை விடுமுறையைப் பயனுள்ளதாகக் கழிக்க நானும் எனது நண்பர்களும் முடிவெடுத்தோம். எங்களுக்குக் கைத் தொழில் கற்றுக் கொடுக்கும் ஆசிரியையை அணுகிக் கேட்டோம். அவர் "நம் ஊரில் இருக்கும் குளத்தில், மழை பெய்தால் குளம் உடைந்து



ஊருக்குள் தண்ணீர் புகுந்து விடுகிறது. இதனால் சில குடிசைகள் கூட இடிந்து விழும் வாய்ப்பு உள்ளது. அதனால் குளத்து நீரைக் காட்டனுள் வெட்டி விடுங்கள். ஏதாவது உதவி தேவையெனில் என்னை நாடுங்கள்" என்றார். நாங்கள் ஐந்தாம் வகுப்பு ஆசிரியையிடம் வாய்க்கால் வெட்டத் தேவையான கருவி களைப் பெற்றுக் கொண்டோம். பதினேழு நாட்கள் முயன்று வாய்க்காலை வெட்டிக் காட்டினுள் திருப்பி விட்டோம். அதைப் பாராட்டி, ஐந்தாம் வகுப்பு ஆசிரியர், மற்றும் ஆறாம் வகுப்பு ஆசிரியர் உட்பட எல்லா ஆசிரியர்களும் எங்களை மிகவும் பாராட்டினார்கள். அப்பொழுது நாங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. இப்பொழுது குளத்து நீர் ஊருக் குள் வருவதுமில்லை.

க. சங்கரநாராயணன், பொட்டலூரணி.

உடலைத் தேற்றினேன்!

எங்கள் ஊர் கிராமமும், நகரமும் கலந்த ஓர் ஊர். இங்கு உள்ள பள்ளியில் பத்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக் கிறேன். என்னுடைய வகுப்பிலேயே நான்தான் மிகவும் ஒல்லியான மாணவன். எனவே மற்ற மாணவர்களின் கேலிப்பேச் சுக்கு ஆளானேன். இந்த விடுமுறையில் நானும் மற்றவர்களைப் போல பலசாலி யாக பயிற்சிகளைச் செய்யவேண்டும் என்று உறுதி எடுத்துக் கொண்டேன். தினமும் காலையில் ஒரு மணி நேரமும் மாலையில் ஒரு மணிநேரமும் தொடர்ந்து உடற்பயிற்சி செய்தேன். எளிதாகக் கிடைக்கும் சத்துள்ள உணவுவகைகள் என்ன என்பதைத் தெரிந்து கொண்டு அவைகளையே உண்டு வருகிறேன். மேலும் உடலுக்கு உறுதி தரக்கூடிய தோட்ட வேலைகள், கடின வேலைகள் போன்ற வேலைகளையும் செய்தேன். இப்பொழுது என்னைப் பார்க்கும் என் நண்பர்கள் "இவன் பழைய பத்மநாபன் தானா!" என்று வியக்கிறார்கள். எனக்கே கூட நான்தானா என்று வியப்பாக உள்ளது!

மோ. பத்மநாபன்,
காட்டு மன்னார்கோயில்.



ஆட்டுக்குட்டி

ஆட்டுக் குட்டி! ஆட்டுக் குட்டி!
அம்மா வளர்த்த ஆட்டுக் குட்டி!
வீட்டில் துள்ளும் ஆட்டுக் குட்டி!
வேலை இல்லா ஆட்டுக் குட்டி!

பாட்டி வளர்த்த பழைய செடியைப்
பசியில் தின்ற ஆட்டுக் குட்டி!
பூட்டி வைக்க மறந்து போனேன்
புதிய செடியும் போன தெங்கே?

வாயைத் திறந்து கொஞ்சம் காட்டு
மறைந்த செடியைப் பார்க்க வேண்டும்!
வாயும் வயிறும் பார்த்தால் அங்கே
மலர்ந்த பூக்கள் பறிக்கத் தோன்றும்!

கடித்துக் கடித்துத் தோட்ட மெல்லாம்
காலி யாகிப் போன தையோ!
இடித்துச் சொல்ல இயல வில்லை
இரக்கம் உள்ள நெஞ்சம் எனக்கு!

இனியும் செடியைக் கடித்துக் கொண்டே
இருக்க வேண்டாம் ஆட்டுக் குட்டி!
கனிகள் கொடுக்கும் மரங்கள் வேண்டும்
கருணை செய்வாய் ஆட்டுக் குட்டி!

— ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

பைலைப் பார்த்துக்க!

ஒரு செல்வந்தரின் வீட்டில் ஒரு நாயும் பூனையும் வளர்ந்து வந்தன. அந்த வீட்டில் ஓர் எலியும் இருந்தது. மூன்றும் இணை பிரியாத நண்பர்கள். செல்வந்தர் தன்னுடைய கம்பெனியின் முக்கியமான ஃபைல்களை மேஜைமேல் வைத்துவிட்டு நாயைக் காவலாக வைப்பது வழக்கம்.

ஒருநாள் செல்வந்தர் ஒரு ஃபைலை மேஜைமேல் வைத்துவிட்டு, "இது மிகவும் முக்கியமான ஃபைல். நான் . அவசரமா வெளியூர் போகணும். திரும்பப் பத்து நாட்கள் ஆகும். ரொம்பப் பத்திரமா இதைப் பார்த்துக்கணும்'' என்று நாயிடம் கூறிவிட்டுச் சென்றுவிட்டார்.

நாய்க்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. பூனையாரிடம் போனது. "பூனையாரே! எஜமான் வெளியூர் போயிருக்காரு. திரும்பப் பத்து நாள் ஆகுமாம். நான் வெளில போய் ரெண்டு நாள் ஜாலியாக் கழிச்சிட்டு வர்றேன். அதுவரைக்கும் இந்த ஃபைலைக் கொஞ்சம் கவனமாப் பார்த்துக்க" என்று கேட்டது. பூனை சம்மதிக்கவே நாய் சென்றுவிட்டது.


நாய் போனதும் பூனை எலியை அழைத்தது. ஃபைலின் முக்கியத்துவத்தைக் கூறி 'கவனமாகப் பார்த்துக்க' என்று வெளியில் சென்றுவிட்டது. எலியும் பத்திரமாக ஃபைலைப் பாதுகாத்தது. மாலையில் நாயும், பூனையும் திரும்பி வந்தன.

நாய் பூனையிடம் பைலைக் கேட்க, பூனை எலியாரிடம் கேட்டு, "அது நண்பன் எலியாரிடம் பத்திரமாக இருக்கிறது" என்றது. இப்படியே தினமும் நாய் பூனையிடம் கேட்க, பூனை எலியிடம் கேட்க எலிக்கு ஆவல் அதிகமாகியது. அப்படி என்னதான் அந்த பைலில் இருக்கிறது என்பதை அறிய ஆவல் அதிகரித்தது எலியாருக்கு.

'தினமும் இப்படிக் கேட்டுத் தொல்லை பண்றாங்களே என்ற அலுப்பும் சேர்ந்துகொள்ள ஒரு நாள் அந்த பைலைக் கொஞ்சம் கடித்துப் பார்த்து அது விதம்விதமான சுவையுள்ள பேப்பர் கொண்டவை என்பதை அறிந்துகொண்டது! சுவைக்காக நாக்கை அடக்க முடியாமல் அதை தினமும் கொஞ்சம் கொஞ்சமாகத் தின்று தீர்த்துவிட்டது!

செல்வந்தர் திரும்பி வந்ததும் நாயிடம் பைலைக் கேட்க, நாய் பூனையிடம் கேட்க, பூனை எலியிடம் கேட்க, எலி விழித்தது. செல்வந்தருக்கு பயங்கரக் கோபம் உண்டாக, உடனே நாயை அடித்துவிட்டார். நாய்க்குக் கோபம் தலைக்கு ஏறி பூனையைத் துரத்த, பூனை எலியைத் துரத்த இன்றுவரை இன்னும் இந்தத் துரத்தல் ஓயவில்லை!

- பாசி. கோகுலன்





சாட் பீட் கித்!

கணக்கு வகுப்பு நடந்து கொண்டிருந்தது. தலைமை ஆசிரியரின் பியூன் தாமு, ஒரு சீட்டைக் கொண்டு வந்து ஆசிரியரிடம் பணிவாக நீட்டினான். அதைப் படித்துப் பார்த்த ஆசிரியர், "சாட் பீட் கித்! உங்க மூன்று பேரையும் எச்.எம். உடனே கூப்பிடுகிறார்" என்றார்.

மூவரும் எழுந்து எச். எம். அறைக்கு விரைந்தனர். வணக்கம் கூறிய மூவரையும் உட்காரச் சொன்ன எச்.எம். எழுந்து சென்று கதவைத் தாளிட்டு வந்தார். அவர் முகத்தில் பெருங்குழப்பம்.

தனது நாற்காலியில் அமர்ந்து கொண்டார் எச். எம்.

"முக்கிய காரணமாத்தான் உங்க மூன்று பேரையும் உடனே வரச் சொன்னேன்" என்று கூறிய எச்.எம். "நம்ம பள்ளியில் மாணவர்களுக்காக ஒரு தனி மாணவர் விடுதி நடப்பதும், அதற்கும் நானேதான் வார்டனாக இருப்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்கும். இதில் நம் பள்ளியின் வெளியூர் மாணவர்கள் மட்டுமே தங்கிப் படிக்கிறார்கள்," என்று நிறுத்தினார்.

"நம் பள்ளி மாணவர் விடுதியைப் பற்றி எங்களுக்கே நீங்கள் கூற வேண்டுமா சார்? எங்களுக்கே, எல்லா விவரங்களும் தெரியும். எங்களுக்கே அங்கே நிறைய நண்பர்கள் இருக்கிறார்கள்" என்றான் பீட்டர்.

"எங்கள் வகுப்பிலேயே படிக்கும் பூபதி, சுந்தர், மாணிக்கம் கூட அந்த விடுதிவாசிகள்தானே? விடுதியின் பெருமைகளைப் பற்றி நாங்கள் நன்கு தெரிந்தவர்கள். அத்தனை பெருமைகளுக்கும் காரணம் உங்களுடைய கண்டிப்பும், மேற்பார்வையும்தான்" என்றான் கிதா.

"வீட்டில், தேர்வு நெருங்கும் போது, உறவினர்கள் வருகையால் சில சமயம் படிக்க முடியாத நிலை ஏற்படும்போது, நாங்கள் பலமுறை ஹாஸ்டலுக்குச் சென்று, நண்பர்களுடன் விருந்தாளிகளாகத் தங்கிப் படித்திருக்கிறோம். படிக்க விரும்பும் மாணவர்களுக்கு அருமையான சூழ்நிலை. இந்தக் கட்டுக்கோப்பு குலையாமல் இருப்பதற்கு, உங்கள் மேற்பார்வையும், கண்டிப்பும்தான் காரணம் சார்" என்றான் சாதிக்பாட்சா.

"நீங்கள் மூன்று பேரும் எத்தனைதான் மாறி மாறி எனக்கு ஐஸ் வைத்தாலும், இப்ப என்னால் மகிழ முடியாது. காரணம், நீங்கள் இப்படிப் புகழும் பெருமைக்குரிய நம் மாணவர் விடுதிக்குக் களங்கம் ஏற் படக்கூடிய ஒரு நிகழ்ச்சி நடந்து விட்டது. அது விஷயமாகப் பேசவே உங்களை வர வழைத்தேன். புகழ்க் காவியம் பாடாமல் பிரச்னையைக் கவனியுங்கள்" என்றார் எச்.எம்.

மூவரும் அதிர்ந்து நிமிர்ந்து உட்கார்ந்தனர்.

"என்ன ஆச்சு சார்?"

"பூபதி, சுந்தர், மாணிக்கத்தைத்

சின்னபாபு



தெரியுமல்லவா உங்களுக்கு?"

"நன்றாகத் தெரியும். எங்கள் வகுப்புத்தானே? நல்ல பண்புடையவர்கள். மூவரும் ஒரே ஊர். விடுதியில் ஒரே அறையில் தங்கி இருப்பவர்கள். மூவரையும் தனித் தனியாகக் காண முடியாது. ஒன்றாகத்தான் காணலாம். அத்தனை ஒற்றுமை!"

"ஏன், அவங்களுக்கு நாம்ப வைச்சிருக்கும் செல்லப் பேரே மும்மூர்த்திகள்தானே?"

"மும்மூர்த்திகளுக்கு என்ன ஆச்சு சார்?"

"இதை நான் கூறுவதை விட, அவர்கள் வாயாலேயே கேட்பது இன்னும் விளக்கமாக இருக்கும்" என்று எழுந்தார் எச்.எம்.

மாணவர் விடுதி, பள்ளி இருந்த அதே தெருவில் இன்னொரு கோடியில் அமைந்திருந்தது. காற்றோட்டம் உள்ளதாக, படிக்கக்கூடிய அமைதியான சூழ்நிலையில் எண்பது அறைகளைக் கொண்ட மூன்று மாடிக் கட்டடமாக அது இருந்தது. ஒவ்வொரு அறையிலும் மூன்று பேர். தனித்தனி கட்டில், அலமாரி, மேஜை, கண்ணாடி எல்லாம் இருந்தன. பல் துலக்க, குளிக்க மட்டுமே வெளியே வர வேண்டும். பொதுக் குளியலறைகள் ஒவ்வொரு மாடியிலும் உண்டு. பொதுவான நூலகம் ஒன்றும் கீழ்த்தளத்தில் இருந்தது.

மும்மூர்த்திகள் இருந்தது இரண்டாவது மாடியில் முதல் அறை. அறையின் எண் இருபத்தொன்று.

இவர்கள் போன போது, 21-ஆம் எண்ணுள்ள அறை வெளியே பூட்டப்பட்டிருந்தது. எச்.எம். பூட்டைத் திறந்து கதவைத் திறந்தார். சாட் பீட் திடுக்கிட்டனர். காரணம், அந்த அறைவாசிகளான மும்மூர்த்திகளும் ஆளுக்கு ஒரு திசையைப் பார்த்தபடி எதையோ பறிகொடுத்தது போல் காணப்பட்டனர். விடுதித் தலைவரான எச்.எம். மூவரையும் அறைக்குள் வைத்துப் பூட்டிக் கொண்டு வந்திருக்கிறாரே! என்ன காரணமாக இருக்கும்?

"நான்தான் வேண்டுமென்றே இவர்களை அறைக்குள் வைத்துப் பூட்டி விட்டு வந்தேன். என்ன நடந்திருக்கிறது என்பதை உங்கள் அருமை நண்பர்களான இவர்களிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்" என்றார் எச்.எம்.

"போன மாதம் மூவரும் சென்னிமலை முருகன் கோவிலுக்குப் போனோம். அர்ச்சனைக்காகத் தேங்காய் பழத் தட்டு வாங்கினோம். மீதி ஐந்து ரூபாய் கடைக்காரர் தர வேண்டும். அவரிடம் சில்லறை இல்லை. கடைசியில் வேறு வழியில்லாமல் அவர் கடையில ஒரு பரிசுச் சீட்டு வாங்கினோம்"- மும்மூர்த்திகளில் ஒருவனாகிய பூபதி எச்.எம்.மைக் கீழ்ப்பார்வை பார்த்தபடி கூறினான்.

"நம்ம விடுதியில், மாணவர்கள் எந்த பரிசுச் சீட்டையும் வாங்கவும் கூடாது, வைத்துக் கொள்ளவும் கூடாது என்று கண்டிப்பான உத்தரவு இருக்கிறது," என்று விளக்கினார் எச்.எம்.

"வேறுவழியில்லாமல் வாங்கினோம். பரிசுச் சீட்டை, நம்ம சுந்தரிடம்தான் பத்திரமாக இருக்கக் கொடுத்து வைத்திருந்தோம்" என்றான் மாணிக்கம்.

"நானும் அதை இரகசியமா, வெளியே தெரியாமல் இருக்கும்படி, நம்ப பள்ளி கேலண்டர் புத்தகத்தில், அதற்குப் போட்டிருந்த கனத்த அட்டையில் வைத்து மறைத்திருந்தேன்," என்றான் சுந்தர்.

"சுந்தர், பரிசுச் சீட்டை எங்கே மறைத்து வைத்திருக்கிறான் என்பது எங்களுக்குக்கூடத் தெரியாது. நாங்கள் அதைக் கேட்கவும் இல்லை. அதன் எண்ணை மட்டும் மனத்தில் நினைவு வைத்துக் கொண்டோம். அவன் ஏமாற்ற மாட்டான் என்று அத்தனை நம்பிக்கை" என்றான் பூபதி.

"இன்று காலை, செய்தித்தாளில் அந்தச் சீட்டுக்கு முதல் பரிசு ஐந்து லட்ச ரூபாய் விழுந்திருக்கும் செய்தி வெளிவந்திருக்கு. இதைக் கூட நாங்க மூன்று பேரும் வழக்கப்படி ஒன்றாக டிபன் சாப்பிட்டு, டிரஸ் பண்ணிக்கிட்டு, கதவைப் பூட்டிக்கிட்டு கீழே இறங்கின பிறகுதான் தற்செயலா நூலகத்தின் மேஜை மேல் பிரிந்து கிடந்த செய்தித்தாளைப் பார்த்து அறிந்து கொண்டோம். உடனே மூவரும் மேலே ஏறி, மறுபடி அறைக்கு வந்தோம். கதவை உட்பக்கம் மூடிக் கொண்டோம். சுந்தர் பரிசுச் சீட்டைப் பத்திரப்படுத்தி வைத்திருந்த பள்ளி காலண்டர் புத்தக அட்டைக்குள் பார்த்தான்.



அருட்கடலாய்.....



செல்வத்திலே சிறந்த செல்வம் கல்விச் செல்வமாம் - கல்விச்
செல்வத்திலும் உயர்ந்த செல்வம் கேள்விச் செல்வமாம்;
நல்லவல்லோர் சொல்லுவதைக் கேட்டு நடந்தால் - வாழ்க்கை
நாளும் நாளும் மேலும் மேலும் மேன்மை பெறுமாம்.

வழுக்கலிலே நடக்கும் போது சறுக்கி விடாமல் - காக்கும்
வழித் துணையாம் நல்ல ஊன்று கோலைப் போலவே
வாழ்க்கையிலே சான்றோர் வாக்கு, காத்து நிற்குமாம் - தெய்வ
வள்ளுவரே திருக்குறளில் சொல்லியுள்ளாராம்.

எந்த நிலை வந்தபோதும் கற்றிட வேண்டும் - கற்க
இயலா நிலை நேரும் என்றால் கேட்டிட வேண்டும்;
வந்து சூழும் தீவினைகள் எல்லாமும் வெல்ல - சான்றோர்
வாய்மொழிகள் நமக்கு நல்ல வலிமையைக் கூட்டும்.

ஒழுக்க மிக்க சான்றோர்களின் அருள்உரை எல்லாம் - வாழ்வை
ஒளிமயமாய் ஆக்கும் என்னும் உண்மை உணர்ந்தும்
அழுக்குக் கூடை யாய்மனதை ஆக்கிடலாமா? - தெய்வ
அருட்கடலாய் நாம்அதனை ஆக்க வேண்டாமா?

- ரா. பொன்ராசன்

பரிசுச் சீட்டைக் காணவில்லை! உடனே நான் சுந்தரைத் திட்டினேன். பூபதி அடிக்கவே போய் விட்டான்," என்றான் மாணிக்கம்.

"எங்களுக்குள் வாக்குவாதம் முற்றியது. வராந்தா வழியாக வந்த எச்.எம். அதைக் கேட்டுக் கொண்டே உள்ளே வந்தார். நாங்கள் நடந்ததைக் கூறினோம். நீங்கள் மூன்று பேரும் உள்ளேயே இருங்கள். இன்னும் ஒரு மணி நேரத்தில் மறுபடி வருகிறேன் என்று சொல்லி, வெளியே பூட்டிக் கொண்டு போனார்," என்றான் சுந்தர்.

"சாட் பீட் கித். இந்த பரிசுச் சீட்டு திருட்டு சமாசாரம் வெளியே தெரிந்தால் நம்முடைய விடுதிக்கு எத்தனை கெட்ட பெயர் தெரியுமா? வேறு வழியில்லை என்றால், கடைசியில் போலீசுக்குப் போவோம். வெளியே செய்தி பரவுமுன் இது போன இடத்தைக் கண்டுபிடிக்க உதவ வேண்டும் என்றுதான் உங்களை அழைத்து வந்தேன்" என்றார் எச்.எம்.

"நீங்கள் பரிசுச் சீட்டு வாங்கினது வேறு யாருக்காவது தெரியுமா?" என்று கேட்டாள் கீதா.

"யாருக்குமே தெரியாது கீதா. இங்கே வந்த பிறகு மாணிக்கத்திற்கும் பூபதிக்கும் கூட நான் சீட்டை மறைத்து வைத்திருந்த இடம் தெரியாது," என்றான் சுந்தர்.

சுந்தரின் முகம் அழுது அழுது வீங்கியிருந்தது.

"உங்கள் அறைக்கு இன்று காலை யாராவது வந்தார்களா?" என்று கேட்டான் பீட்டர்.

"நிறைய நண்பர்கள் அடிக்கடி வருவார்கள். பாடத்தில் சந்தேகம் கேட்பார்கள். இன்று காலை கூடப் பலர் வந்தார்கள்."

சாட் பீட் கித் மூவரும் அறையில் இருந்த பொருள்களை எல்லாம் கவனமாகப் பார்த்தனர். அறையில் இருந்த ஜன்னல் வழியாக வெளியே பார்த்தனர். எங்

திருந்தோ பற்பசையின் மணம் இலேசாக வீசியது. வெளியே நடந்து மொட்டை மாடிக்குப் போனார்கள்.

மூவரும் விவாதித்தனர்.

"விஷயம் தெரிந்த ஒருவரே இதை எடுத்திருக்க வேண்டும்."

"எடுத்தவருக்கு இவர்கள் சீட்டு வாங்கினது, அதற்குப் பரிசு விழுந்திருப்பது, அது பாதுகாக்கப்பட்டுள்ள இடம், எல்லாம் நன்கு தெரிந்திருக்க வேண்டும். அதோட அவர் இவர்களுடைய அறைக்கு அடிக்கடி வரக் கூடியவராகவும் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் அதை அவர் எடுத்திருக்க முடியும்" என்று விஷயத்தைத் தெளிவுபடுத்திக் கொண்டனர் சாட் பீட் கித்.

மூவரும் விவாதித்துக் கொண்டே பார்த்தபோது, 21-வது அறை ஜன்னலுக்கு வெளியே, கீழே சன்ஷேடில் என்னவோ வெளுப்பாகத் தெரிந்தது. கூழ் கொட்டியதைப் போல் ஒரு தோற்றம்!

மூவரும் கீழே இறங்கி, அறைக்குள் வந்து ஜன்னல் வழியாக நோக்கினர். சாதிக் கையை நீட்டி அதை விரலால் தொட்டு எடுத்தான். பசை மாதிரி இருந்தது. முகர்ந்து பார்த்தான். கிராம்பு வாசனை! ஆம் அது பற்பசையேதான்! அத்தனை பற்பசையை யார் வெளியே கொட்டியிருப்பார்கள்? வேண்டுமென்றே செய்ததா? இல்லை, தற்செயலா? என்ன காரணமாக இருக்கும்?

"நீங்கள் மூன்று பேரும் ஒரே பற்பசையைத்தான் பயன்படுத்துவீர்களா? இல்லே தனித்தனியா?" என்று கேட்டான் பீட்டர்.

''தனித்தனியாகத்தான் வைத்திருக்கிறோம். ஆனால் மூன்று பேருமே பிராமிஸ் டூத் பேஸ்ட். பெரிய சைஸ். எகானமி சைஸ்."

"உங்க டூத்பேஸ்ட் எல்லாம் சரியா இருக்கா?"

"இதோ என்னுது."


"என் பேஸ்ட் இதோ."

சுந்தரும், மாணிக்கமும் கொண்டு வந்து காட்டினர். பூபதியின் பேஸ்ட்? எச்.எம். மூக்கு உதவியாக பூபதி என்னவோ பண்ணிக் கொண்டிருந்தான். சாட் பீட் கித் நெருங்கிப் பார்க்க முயன்றபோது, "பாருங்க இவன் திறமையை! 'பின்'பண்றதுக்காக நாலைந்து ரசீதுகளை வைத்திருந்தேன். அதோட இங்கே வந்து விட்டேன். எங்கேயாவது பிரிந்து விழுந்து விடப் போகிறதே என்று 'ஸ்டேப்ளர்' கேட்டேன். 'ஸ்டேப்ளர் இல்லே. ஆனா, ஏற்கெனவே போட்ட ஸ்டேப்ளர் பின்னைக் கழற்றி, பக்குவமா, குண்டூசில அளந்து ஓட்டை போட்டு, ஸ்டேப்ளர்ல போட்ட மாதிரியே சொருகி, மடக்கித் தரேன்னு, வாங்கிக்கிட்டான் பூபதி. பாருங்களேன்! எத்தனை அருமையா, ஸ்டேப்ளர் பின் அடிச்ச மாதிரியே பண்ணியிருக்கான்?'' என்று புகழ்ந்து கொண்டார் அந்த நிலையிலும் எச்.எம்!

"பூபதி, உன்னோட பற்பசை எங்கே?" என்று கேட்டான் பீட்டர்.

பூபதியின் பற்பசை டியூபை வாங்கிய பீட்டர், அதன் மூடியைத் திறந்து அமுக்கினான். "பொஸ்க்" என்று காற்றுதான் வெளியே வந்தது! டியூப் காலி! ஆனால் மென்மையான நெகிழும் தன்மை கொண்ட அதற்குள், என்னவோ தட்டுப் பட்டது. சேப்டி பின்னால் பீட்டர் அதை வெளியே இழுத்தான். மூடப்பட்டு, சுருட்டிய மெல்லிய பிளாஸ்டிக் கவர் வெளியே வந்தது! அதற்குள் அழகாக மடிக்கப்பட்டு, சுருட்டப்பட்ட பரிசுச் சீட்டு!

"உங்க அப்பா சினிமா தயாரிப்பாளரா?"
"எப்படி சார் கண்டுபிடிச்சீங்க?
''பரீட்சை பேப்பர்ல எடுத்த உடனே கோபால் புரொடக்ஷன்ஸ் வழங்கும் 'காலாண்டு தேர்வு'ன்னு எழுதியிருக்கியே!
-எஸ். பி. விஜயகுமார்.





"வக்கீலுக்கு படிச்சுகிட்டு இருக்கற உங்க பொண்ணு பேர் என்ன?
"கமLAW"

– எஸ்.பி. விஜயகுமார்,

ஆமாம் காணாமல் போன அதே லாட்டரிச் சீட்டுதான்!

"சீட்டு கிடைச்சுப் போச்சு. பிரச்னை தீர்ந்தது" என்றார் எச்.எம்.

"யார் எடுத்திருப்பார்கள் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டாமா?" என்று கேட்ட கிதா, பிளாஸ்டிக் கவரை வாங்கி, அதன் வாயில் போடப்பட்டிருந்த ஸ்டேப்ளர் பின்னைப் பிரிக்காமல் தூக்கிப் பிடித்துப் பார்த்தான்.

ஏற்கெனவே போடப்பட்டிருந்த ஸ்டேப்ளர் பின்னை எடுத்து விட்டு, மறுபடி போட்ட அடையாளம் தெரிந்தது. சிரித்துக் கொண்டே பிளாஸ்டிக் கவரைப் பிரிக்காமல் சாதிக்கிடம் தந்தான். அவனும் கவனித்து விட்டு, பீட்டரிடம் நீட்டினான். மறுபடி கவர் கிதாவின் கைக்கு வந்தது.

கிதா, கவரைப் பிரித்தாள். மடிக்கப்பட்ட லாட்டரிச் சீட்டுக்குக் கீழே, ஒரு மெல்லிய கொப்பரைத் தேங்காய்த் துருவல்! பீடா போட்டு ஸ்டேப்ளரால் மூடப்பட்ட பிளாஸ்டிக் கவர் அது! சந்தேகமே இல்லை!

"நேற்று, நம்ம வகுப்பு பாபுவின் அண்ணன் குழந்தைக்குப் பிறந்த நாள். ஓட்டலில் டின்னர். எங்க மூன்று பேரையும் அழைத்திருந்தான். போனோம். அங்கே பீடாவை இப்படி பிளாஸ்டிக் கவரில் தந்தார்கள். நானும், மாணிக்கமும் உடனே பிரித்துத் தின்றோம். பூபதி மட்டும், அறைக்கு வந்து போட்டுக்கப் போறேன்னு எடுத்து வந்தான்," என்றான் சுந்தர்.

பூபதியின் கண்களில் நீர் முட்டியது.

"எல்லாம்தான் கண்டுபிடித்து விட்டீர்களே! நான் மன்னிப்புக் கேட்க வேண்டியது மட்டும்தானே பாக்கி?"

"இன்னும் மூன்று விஷயங்கள் தெரியலையே?"

"பரிசு விழுந்த செய்தி, எப்படி முதலில் உனக்கு மட்டும் தெரிந்தது?"

"பீடாவை சாப்பிட மறந்து விட்டேன். காலையில், மாணிக்கமும் சுந்தரும் குளிக்கப் போயிருந்தப்போ, நான் கீழே இறங்கி நூலகத்தில் செய்தித்தாளைப் பார்த்து அறிந்து கொண்டேன். உடனே அறைக்கு வந்து சுந்தரின் அலமாரியைக் குடைந்து, பரிசுச் சீட்டைக் கண்டுபிடித்து எடுத்தேன். அதை மறைக்க இடம் தேடினேன். புத்தகம், நோட்டுகளில் வைத்தால் கண்டுபிடித்து விடுவார்கள். அதனால், பற்பசை டியூபை அப்படியே ஜன்னல் வழியாகப் பிதுக்கிக் கொட்டி காலியாக்கினேன். பீடா கவரில் பரிசுச் சீட்டை வைத்து ஸ்டாப்ளர் பின் போட்டு சுருட்டி காலி டியூபுக்குள் தள்ளி மூடிவைத்து விட்டேன். யாராலும் கண்டுபிடிக்க முடியாது என்று எண்ணினேன். ஆனால்..." -பூபதி விம்மினான்.

"இன்னொரு கேள்விக்கு பதில் சொல்லலையே? உயிர் நண்பர்களாகப் பழகிவிட்டு திடீரென்று எப்படி இந்த மாதிரி மாறினாய்?"


"வியாபாரத்தைப் பெருக்க பணம் கடன் வாங்க எங்கப்பா தன் நண்பருக்கு பிணைக் கையெழுத்துப் போட்டார். வியாபாரம் நஷ்டமடைய, நண்பர் அதே வருத்தத்தில் மறைய, அப்பா கடனுக்குப் பொறுப்பாளியாகி விட்டார். போன வாரம்தான் கடிதம் வந்தது. இந்த பரிசுப் பணம் அப்பாவுக்கு உதவுமே என்றுதான் இந்தத் துரோகச் செயலைச் செய்தேன்."

பூபதி அழுதான்.

"பூபதி, உனக்கு ஏற்பட்ட துன்பத்தில் எங்களுக்குப் பங்கு இல்லையா? எங்களை எத்தனை குறைவாக மதித்து விட்டாய்? இந்தப் பரிசுப் பணத்தை அப்படியே உன் அப்பாவுக்குக் கொடுத்து உதவ நாங்கள் தயாராக இருக்கிறோம்" என்றான் சுந்தர். ஆமோதித்தான் மாணிக்கம்.

"முதல்ல, விடுதி விதிகளுக்கு எதிரா பரிசுச் சீட்டு வாங்கி வைத்ததுக்கு நூறு ரூபாய் கூட்டு அபராதம் கட்டுங்க" என்றார் எச்.எம்.

எல்லோரும் சிரித்தனர்.



முயலார் வீட்டில் திருமணம். திருமண அழைப்பிதழை எடுத்துக் கொண்டு முயலார் தன் மனைவியுடன் குரங்காரை அழைக்க வந்தார்.

குரங்கார், காட்டில் பெரிய புள்ளி. காட்டில் உள்ள ஒரே கடிகாரக் கடை குரங்காருடையது. சிங்கராஜாவில் இருந்து ராஜ குடும்பத்தைச் சேர்ந்த அத்தனை பேர் கைகளையும் அழகு செய்வது குரங்காரின் கடிகாரங்களே. மந்திரியார், தளபதி என்று பிரபலங்கள் அத்தனை பேர் கரங்களையும் கட்டியிருப்பது குரங்கார் கடை கடிகாரங்களே! குரங்காரின் மதிப்பு என்ன என்பதை உணர முடிகிறதா?

குரங்கார் வாங்கிய பட்டம்!

குரங்கார் பணக் கடலில் மிதந்தார். வரும்படியை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தார். இப்படிப்பட்ட பெருமை மிக்க குரங்காருக்கு ஒரே ஓர் விஷயத்தில் தனியாத ஆசை. சில காலம் நாட்டில் மக்களுடன் வசித்த காரணமோ என்னவோ, குரங்காருக்கு விதம் விதமான பட்டங்களைப் பெறுவதில் தனி மகிழ்ச்சி.

தன் கடையில் வேலை பார்த்த விலங்குகளைக் கொண்டு "மணிப்பொறி வித்தகர்" என்று தனக்குப் பட்டம் கொடுக்க வைத்தார். விழாச் செலவுக்கு குரங்காரே நன்கொடை தந்தார்! வெயில் காலத்தில், காட்டு விலங்குகளுக் கெல்லாம் தனது செலவில், ஒரு பிளாஸ்டிக் வாளி தர ஏற்பாடு செய்தார். அதே விழாவில் 'வாளி அளித்த வள்ளல்' என்று தனக்குப் பட்டம் தரவும் ஏற்பாடு செய்து கொண்டார்!

இதே போல் தனது பிறந்த நாளின் போது தனது செலவில் ஆயிரம் மரக் கன்றுகளை நட்டு, "மரவனம் பெருக்கிய மாணிக்கம்" என்று பட்டம் வாங்கிக் கொண்டார்.

இப்படி விதம் விதமான பட்டங்களை வாரி வழங்கும் "மாக்கள் மன்றம்" ஒன்று காட்டில் இயங்கி வந்தது. பிரபலங்கள், பெரும் புள்ளிகளுக்கு அவர்கள் மனம் மகிழும்படி விதம் விதமான பட்டங்களை அள்ளிக் கொடுத்து தங்கள் பொருளாதார

வசதியைப் பெருக்கிக் கொள்வதே இதன் நோக்கம்.

இந்த மன்றத்தை நன்கு பயன்படுத்திக் கொண்ட பெருமை குரங்காருக்கு உண்டு! இதே போல், பட்டங்களை அள்ளி அள்ளிக் கொடுத்து தங்கள் நிலையை உயர்த்திக் கொண்ட பெருமையும் இந்த மன்றத்திற்கு உண்டு!

குரங்கார், தான் வாங்கிய இந்தப் பட்டங்களை எல்லாம் தனது வீட்டின் முன் உள்ள பெயர்ப் பலகையில், தன் பெயருக்கு முன்னால் எழுதி வைத்துக் கொண்டார். இதெல்லாம் கூடக் கொடுமை இல்லை. இதனால் மாதா மாதம் இந்தப் பலகையின் அளவு பெரி தாக்கிக் கொண்டே இருந்தது. திருமணத் திற்கோ இல்லை வேறு விசேஷ நிகழ்ச்சி களுக்கோ குரங்காரை அழைக்க வருபவர் கள், அழைப்பிதழில் இந்தப் பட்டங்களை யெல்லாம் எழுதித் தன் பெயரை எழுத வேண்டும் என்று அவர் விரும்பினார். அப் படி எழுதி வந்து அழைப் பவர் வீட்டு நிகழ்ச்சி களுக்கே குரங்கார் போவார். கனமான தொகையாகப் பரி சளிப்பார். பட்டங்கள் எதை யும் குறிப்பிடாமல் பெயரை மட்டும் எழுதி அழைப்பிது தருபவர்களுக்கு வெறும் வாழ்த்துக் கடிதத்தோடு சரி!

முயலாருக்கு இந்த விவரம் எல்லாம் தெரியாது. அவர் பெரிய அப்பாவி. அதனால், அழைப்பிதழில் பட்டங்கள் எதையும் அவர் குறிப்பிடவில்லை. "பெரியவர் குரங்கார் அவர்கள்" என்று மட்டும் எழுதி அழைப் பிதழைக் கொடுத்தார்.

அதைப் பார்த்ததுமே குரங்காருக்கு "பொசு பொசு" வென்று ஆத்திரம் தலைக்கு ஏறியது!

"முயலாரே, வீட்டு வாசல்ல என் பெயர்ப் பலகை இருக்கே பார்த்திங் களா?" என்று கேட்டார்.

"ஓ பார்த்தேனே! அருமை யான சலவைக்கல்ல பண்ணியிருக்கீங்க. எழுத் தெல்லாம் கண்ணுல ஒற்றிக்கிற மாதிரி அழகழகா இருக்கு" என்றார் அப்பாவி முயலார்.

"சரி. திருமணத்தன்று வேறு வேலை இல்லையானா கண்டிப்பா வரேன்" என்று முயலாரை அனுப்பி வைத்தார் குரங்கார்.

முயலார் போனதும் நரியார் வந்தார். காட்டில் கடுமையான குடி நீர்ப் பஞ்சம் நிலவியதால் எல்லா விலங்கு, பறவைகளுக் கும் ரேஷன் கார்டை வழங்க சிங்க ராஜா உத்தரவிட்டிருந்தார். அதை நிறை வேற்றும் பொறுப்பை சிங்கராஜா நரியா ரிடம் ஒப்படைத்திருந்தார். அதனால், குரங்காருக்கு உரிய ரேஷன் கார்டை ஒப் படைக்கவே நரியார் வந்தார்.

ரேஷன் கார்டை வாங்கிப் பார்த்த குரங்காரின் முகம் ஆத்திரம், கோபத்தால் சிவந்தது.

"நரியாரே, நான் சாதாரணக் குரங்கார் இல்லை. என் திறமையையும் மக்கள்



தொண்டையும் பாராட்டி, எனக்கு 'மணிப் பொறி வித்தகர்', 'வாளி அளித்த வள்ளல்', 'மர வளம் பெருக்கிய மாணிக்கம்', 'குட்டிக் கரணவல்லவர்' என்று எத்தனையோ பட்டங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இவை களில் ஒன்றைக் கூட ரேஷன் கார்டில் எழு தாமல், வெறுமே என் பெயரை மட்டும் எழுதியிருக்கிறீர்களே! இது என்னை அவ மானப் படுத்துவது போல் உள்ளது. நேராக சிங்க ராஜாவிடம் சென்று முறையிடப் போகிறேன்" என்று குதிகுதியென்று குதித் தார் குரங்கார்.

குரங்காருக்கு சிங்கராஜாவிடம் இருந்த செல்வாக்கு நரியார் அறிந்ததே. அதோடு, இந்த உதவாக்கரை பட்டங்கள் எல்லாம் எப்படி வாங்கப்பட்டன என்பதும் அவருக் குத் தெரியும். அதனால் விஷயத்தைப் பெரிதுபடுத்தாமல் குரங்கார் விரும்பிய படியே, ரேஷன் கார்டில் அவர் காக கொடுத்து வாங்கிய அத்தனை பட்டங்களை யும் அவரது பெயருக்கு முன்னால் கை வலிக்க எழுதிவிட்டு எடுத்துக் கொடுத்தார்.

பெரிய போரில் வெற்றி பெற்றதைப் போன்ற களிப்பில் குரங்கார் மிதந்தார். நரி யாரின் திட்டம் அவருக்கு எப்படித் தெரி யும்?

சிங்கராஜாவின் அரண்மனைக் கூடத் தில் பழங்காலத்து பெண்டுலம் சுவர்க் கடி காரம் ஒன்று இருந்தது. அதற்கு வாரா வாரம் சாவி தர வேண்டும். அது நூற் றாண்டு விழாவைக் கொண்டாடும் நிலை. அத்தனை பழைய காலக் காடிகாரம். அது மாதத்தில் ஐந்து நாள் கூடச் சரியாக ஓடாது. ஓயாமல் குரங்கார்தான் வந்து ரிப்பேர் பண்ணுவார்.

அடுத்த நாள் நரியார் அரண்மனைக்குப் போன போது, கடிகாரத்தை ரிப்பேர் பண்ண வழக்கப்படி, குரங்கார் வந்திருந்தார்.


"மணிப்பொறி வித்தகரே வருக வருக! உங்கள் வித்தகத்திற்கு இந்த கடிகாரம் ஒரு சவாலாக உள்ளது போல் இருக்கே! மாதத்திற்கு எத்தனை முறைதான் இதை ரிப்பேர் பண்ணுவீர்கள்?'' என்று பரிகாசமாகக் கேட்டார் நரியார்.

"என்னது! இந்தப் பழங்கால கடி காரத்தை சரியாக ரிப்பேர் பண்ணத் தெரியாத இவருக்கு 'மணிப் பொறி வித்தகர் பட்டமா!' இந்தக் குரங் காருக்கு இப்படி ஒரு பொருந்தாத பட்டமா? யார் தந்தார்கள்?" என்று சிங்கராஜா சீறினார். அவருக்கு இந்த மாதிரிப் பட்டம் தருவதெல்லாம் அறவே பிடிக்காது!

"இந்த ஒரு பட்டம் மட்டும் தானா?: குரங்காரின் பெயருக்கு முன் இருபத்தைந்து பட்டங்கள். இத்தனை பட்டங்களையும் ரேஷன் கார்டில் தன் பெயருக்கு முன்னால் எழுத வேண்டும் என்று பிடிவாதம் பிடித் தார். நானும் வேலையையெல்லாம் விட்டு விட்டுப் பொறுமையாக எழுதிக் கொடுத்தேன்" என்றார் நரியார்.

சிங்கராஜாவின் ஆத்திரம் கரை புரண்டது.

"எப்போ மணிப்பொறி வித்தகர் என்று பட்டம் வாங்கினீரோ, எப்படி யாவது இன்னும் ஒரு வாரத்திற்குள் இந்த கடிகாரத்தை ரிப்பேர் பண்ணி விட வேண்டும். ஆறு மாதங்களாவது எந்த விதமான ரிப்பேரும் இல்லாது



இது ஓட வேண்டும். ஒரு வாரத்திற்குள் இதை ரிப்பேர் பண்ணவில்லை என்றால் பாதாள குகைக்குள் தள்ளி மூடி விடுவேன்."

குரங்கார், கடிகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு மனம் பதற விடை பெற்றார். நான்கு நாட்கள் ஓடின. அன்று மாலை குரங்கார் கையில் ஒரு சின்னப் பெட்டியுடன் வேகமாகக் காட்டு எல்லைக்கு அருகே நடந்து கொண்டிருந்தார்.

யாரோ அழைக்கும் குரல் கேட்டு குரங்கார் திரும்பிப் பார்த்தார். நரியாரேதான்.

"நரியாரே, அந்தப் பழங்கால கடிகாரத்தை இனி ரிப்பேர் பண்ணவே முடியாது. உயிரைக் காத்துக் கொள்ள காட்டை விட்டு ஓடிக் கொண்டிருக்கிறேன். என்னைப் பழி தீர்த்து விட்டீர்கள். எனக்குப் புத்தி வந்து விட்டது" என்று அழுதார் குரங்கார்.

"உங்களுக்குப் புத்தி வந்தால், அதுவே போதும். கவலைப் படாதீர்கள். இதற்காகக் காட்டை விட்டு ஓட வேண்டாம். அந்தப் பழங்கால கடிகாரத்தை, சாவியே கொடுக்கத் தேவையில்லாத, பேட்டரி கடிகாரமாக மாற்றி விடுங்கள். பிரச்னை தீர்ந்தது" என்றார் நரியார்.

"இந்த யோசனை இத்தனை காலமாக எனக்கு வரவில்லையே!" என்று மகிழ்ச்சிக் கடலில் மிதந்தார் குரங்கார்.

"நீங்கள் மணிப் பொறி வித்தகர் ஆயிற்றே!"

"ஐயோ, இனி எனக்குப் பட்டங்களே வேண்டாம். பட்டதெல்லாம் போதும்! பட்டமெல்லாம் போதும்!" என்று மகிழ்ச்சியோடு குரங்கார் ஓடினார்.!

குற்றாலம்

குற்றால மலைதனிலே
கொட்டுதம்மா நீர்வீழ்ச்சி! - அது
குன்றாத பெருமையுடன்
பெருக்குதம்மா பெருகிழ்ச்சி!

வேகமுடன் வருமருவி
விரியுதம்மா வெண்திரையாய் - அங்கு
வீழுகின்ற வெண்திரையும்
சிரிக்குதம்மா வெண்நுரையாய்!

மூலிகையின் மணமுடனே
ஒலிக்குதம்மா எழுலருவி - அது
மூளைக்கும் மருந்தாகி
ஒழிக்குதம்மா மனநோயை!

நீராட நெருங்கியவர்
நிற்பரம்மா நெடுநேரம்! - அவர்
தீராத விருப்பமுடன்
வருவரம்மா மறுவருடம்!

அருவியழகை யனுபவிக்க
வேண்டுமம்மா விழிநூறு! - இப்
பெருமை இயற்கைக்கே
வாழ்த்திடுவோம் வந்திடுவாய்!



- எஸ். ஆர். ஜி. சுந்தரம்



எல்லோருக்கும் வரணும்

அதிகாலை ஐந்து மணிக்கெல்லாம் விழித்துக் கொண்டான் ஆனந்தன். கண்களை இறுக்கமாக மூடி முயன்றாலும் அதற்கு மேல் உறக்கம் வர மறுத்தது. மனத் திரையில் முந்திய நாள் மாலை நடந்த பள்ளி நிகழ்ச்சிகள் மறு ஒளிபரப்பை ஆரம்பித்தது.

கடைசிப் பாட வேளை, விளையாட்டு. பள்ளி இறுதி மணி முழங்கியதும் புத்தகப் பையை எடுப்பதற்காக ஆனந்தன் மைதானத்திலிருந்து தன் வகுப்பை நோக்கிக் காற்றாய்ப் பறந்து வந்தான். மற்ற பையன்களுக்கு முன்னதாகச் சைக்கிளை எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போயிருக்கலாம். ஆனால் அவனது கெட்ட நேரம் அவனைக் குறுக்கு வழியில் செலுத்தியது. முதல் வரிசை டெஸ்கின் மீது ஒரே ஜம்பில் ஏறி நின்றவன், அங்கிருந்து மூன்றாவது வரிசையில் இருந்த தனது டெஸ்குக்குத் தாவினான். அவ்வளவுதான்; முதல் டெஸ்க் ‘சரேல்’ என்ற சப்தத்துடன் சரிந்து, ‘டமால்’ என்ற சப்தத்துடன் கீழே கவிழ்ந்தது. எதிர்பாராத இது, ஆனந்தனை அதிர வைத்து விட்டது. ஓடி வந்து டெஸ்கை நிமிர்த்திப் பழைய நிலையில் நிறுத்த முயன்றான். ஆனால் டெஸ்கின் மேற்பலகை ஆணி கழன்று தனியே கிடந்தது. நடந்ததை அறிந்ததும் நிலை குலைந்து போனான் அவன்.

“ஏண்டா ஆனந்த்? டெஸ்கை ஒடச்சிட்டியாக்கும்?” - திடீரென்று முழங்கிய குரலைக் கேட்டுப் பேயறைந்தவன் போல வாசலைப் பார்த்தான் ஆனந்தன். அந்தக் குரலுக்குரியவன் முதலாவது வரிசையில் அமரும் முத்துச்சாமி. அவனும் ஆனந்தனின் ஊரைச் சேர்ந்தவன்தான். ‘திருதிரு’ வென்று விழித்தவன் தன்னைச் சமாளித்துக் கொண்டு, “எனக்கு ஒன்னுமே தெரியாதுப்பா. நான் உள்ளே நுழையுறப்பவே இப்படித்தான் கிடந்தது” என்று துணிந்து ஒரு பொய்யை விரித்தான் ஆனந்தன். ஆனால், அவனது குரலின் நடுக்கமே அவன் புரிந்த குற்றத்தைக் காட்டிக் கொடுத்து விட்டது!

“இந்தா பாரு; இந்தக் கதையெல்லாம் என் கிட்டே விடாதே! டிரில் கிளாசுக்கு நம்ம வகுப்பை விட்டு வெளியேறின கடைசி ஆளு நான்தான். அப்போ டெஸ்க்

குரு. சீனிவாசன்

ஒழுங்கா இருந்துச்சு." - முத்துச்சாமியின் குரலில் உறுதி தொனித்தது. அவனுக்கு எதுவும் பதில் கூறமுடியாமல் தன் புத்தகப் பையைத் தூக்கிக் கொண்டு வெளியேற முனைந்தான் ஆனந்தன்.


'முத்துச்சாமி தன் ஊர்க்காரனாக இருந்தாலும், தயவு தாட்சண்யம் பார்க்கவே மாட்டான். எதிலும் நேர்மையாக இருக்க விரும்புகிறவன். நிச்சயம் ஆசிரியரிடம் காட்டிக் கொடுக்கத் தயங்கமாட்டான். அதிலும் பழுதாய்ப்போனது அவன் அமரும் டெஸ்க் ஆச்சே! படிப்பிலும் நடத்தையிலும் ஆசிரியரின் நன்மதிப்பைப் பெற்றுள்ள அவனது புகார், எடுபடாமல் போகாது.

கோபமும் கண்டிப்பும் மிகுந்த வகுப்பாசிரியர் நிச்சயம் தன்னை வெளியே விரட்டுவார். அப்பாவிடம் வந்து நடந்ததைச் சொன்னால் அடி உதை தான் மிச்சமாகும்.'

படுக்கையில் தூக்கம் வராது எழுந்து உட்கார்ந்த ஆனந்தன் தீவிரமாகச் சிந்தித்தான். 'இந்தக் குற்றத்தின் தண்டனையிலிருந்து எப்படித் தப்புவது?' என்ற வினாக்குறி அவன் தலைக்குள் புகுந்து மூளையைக் கசக்கிப் பிழிந்தது. மின்னல் போல அவன் சிந்தனையில் ஒரு சிறு வெளிச்சம். அப்போது தோன்றிய அந்த அவசர முடிவின் நன்மை தீமைகளை அவன் ஆராயவே முயலவில்லை. எண்ணத்தைச் செயலாக்க இயந்திரமாக இயங்க ஆரம்பித்தான்.


ஒரு முடிவுக்கு வந்து குளிக்கப் போகிறவன் போல துண்டை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டான். தன் ஜாமெண்ரி பாக்ஸைத் திறந்து அதில் கிடந்த கூர்மையான முள் பொருத்திய காம்பஸை எடுத்துக் கால் சட்டைப் பையில் மறைத்துக் கொண்டு முத்துச்சாமியின் தோட்டத்து வீட்டை நோக்கி நடை போட்டான். வெளியே முத்துச்சாமியின் சைக்கிள் நின்றது. ஆனந்தனின் நல்ல காலமோ என்னவோ, அவன் போன சமயம் அங்கே யாருமில்லை. பையிலிருந்த காம்பஸை எடுத்து சைக்கிளின் முன் சக்கரத்தில் இரண்டு குத்து; பின் சக்கரத்தில் இரண்டு குத்து. 'புஸ்... புஸ்' என்ற ராகத்துடன் காற்று வெளியேற ஆரம்பித்தது.

அலைபாயும் உள்ளத்துடன் வகுப்புக்குள் நுழைந்த ஆனந்தனது பார்வை முதல் வரிசையில் கிடந்த அந்த டெஸ்கின் மீது படர்ந்தது. என்ன அதிசயம்! அவனால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. 'நேற்று கழன்று கிடந்த அந்த எழுதும் பலகையின் நான்கு மூலைகளிலும் பளபளப்பான புத்தம் புதிய ஆணிகள் அடித்து இறுக்கப்பட்டு, பழுது நீக்கப்பட்டிருக்கிறதே!' அதைக் கடந்து போகிற போக்கில் மேற்பலகையை மெல்ல அசைத்துப்



பார்த்த ஆனந்தன், அது செம்மை செய்யப் பட்டிருப்பதை உறுதிப்படுத்திக் கொண் டான். தன் இருக்கையில் போய் அமர்ந் தான். அச்சமும் குழப்பமும் மறுபடியும் அவனுக்குள் புகுந்து ஆட்டிப் படைக்கலாயின.

'நேத்து சாயங்காலமே ஆசிரியரிடம் முத்துச்சாமி விஷயத்தைப் பற்ற, வைத் திருப்பானோ? அதனால் தான் அவர் முன் கூட் டியே பழுது பார்க்க ஏற்பாடு செய்திருக் கிறார் போலிருக்கிறது. எப்படியும் எனக் குத் தண்டனை தப்பாது!' - அவனது குற்ற உணர்வு இப்படிப் பலவாறாகக் குறுகுறுக்க



வைத்தது.

முதற்பாட வேளை ஆரம்பமாயிற்று. வகுப்பிற்குள் நுழைந்த ஆசிரியரை நேருக்கு நேர் பார்க்கத் துணிவில்லாமல் நிமிர்த்திப் பிடித்த புத்தகத்தின் பின்னே ஆனந்தன் முகத்தை மறைத்துக் கொண்டான். அவர் வருகைப் பதிவேட்டைத் திறந்ததுமே வகுப்புத் தலைவன் எழுந்து, "முத்துச்சாமியைத் தவிர மத்தவங்க எல்லாரும் ஆஜர் சார்!" என்று அறிவித்தான்.

"முத்துச்சாமி இன்னும் வரலையா? வந்துடுவான் பாவம்; ஏதேனும் முக்கியக் காரணம் இல்லாமல் அவன் தாமதமாக வர மாட்டானே! நல்ல பொறுப்பான மாணவன். ஆச்சே அவன்?" - ஆசிரியர் முத்துச்சாமிக்கு நற்சான்றை வாசித்துக் கொண்டிருக்கும் போதே ஆனந்தனின் நெஞ்சில் அச்சம் கலந்த படபடப்பு எழுந்து நிலை குலையச் செய்தது. அடுத்து என்ன சொல்லப் போகிறாரோ என்று எண்ணிய போது நெருப்பின் மீது நிற்பது போலிருந்தது அவனுக்கு.

"முத்துச்சாமியைப் பத்தின பேச்சு வந்ததனாலே உங்களுக்கெல்லாம் ஒரு நல்ல படிப்பினையை அறிவுறுத்துறதுக்கு ஆசைப்படுறேன். நேத்து பள்ளி முடிஞ்சப்புறம் முத்துச்சாமி என்னைத் தேடி வந்து நம்ம வகுப்பிலே முதல் வரிசை டெஸ்க் எப்படியோ கீழே சாய்ஞ்சி, அதன் மேற்புறப் பலகை தனியா கழன்று கெடக்குறதாச் சொன்னான். அதைத் தள்ளிச் சாய்ச்சது யாருன்னு அவனுக்கும் தெரியாதாம்!" - ஆசிரியர் வெளியிட்ட இந்தச் செய்தி ஆனந்தனின் இதயத்தில் 'சுரீர்' என்று தைத்து அவனைத் தலை நிமிர வைத்தது. முத்துச்சாமியின் சைக்கிளுக்கு அவசரப்பட்டுத்தான் புரிந்த அநியாயச் சேதம் நெஞ்சில் முள்ளாக உறுத்தியது.

"முத்துச்சாமி என்கிட்டே விஷயத்தைச் சொன்னதோட தன் பொறுப்பை முடிச்சிட்டுப் போயிடலே! தானே கடைக்கு ஓடித் தன் சொந்தக் காசிலே ஆணிகளை வாங்கி வந்து, நம்ம ஸ்கூல் பியூனின் உதவியோட கழன்ற பலகையைச் செம்மை செய்து விட்டுத்தான் தாமதமா வீட்டுக்கே போனான். இது போலப் பொறுப்புணர்வு உங்க எல்லாருக்கும் வரணும். பொதுச் சொத்துக்கு யாராலே சேதம் வந்தாலும் சரி; அதை வேடிக்கை பார்த்து விட்டுப் போகாமல், அதைத் தனது சொத்தாகப் பாவித்துக் காப்பாத்துற பண்பு மாணவர்களான உங்களுக்கு ரொம்ப முக்கியம். எதிர்காலக் குடிமக்கள் நீங்கள்தானே? தவறு பண்ணுற எவரும் அதை உணர்ந்து அதற்குப் பரிகாரம் பண்ணுகிற பொறுப்பை ஏத்துக் கிட்டால் நம்ம நாடு முன்னேறி விடும்."


தன் தவறை எண்ணி ஆனந்தன் வெட்கினான் தலை குனிந்தான்!

"என் பையன் வளைக்குள்ள போக மாட்டேங்கறான்."

"ஏன்?"

"உள்ள இருட்டா இருக்காம். 'லைட்' போட்டாதான் போவானாம்!"

— பா. ஜெயக்குமார்.





கையெழுத்து
கோணல் மாணல் என்றிடும்
குற்றம் இன்றி எழுதுவேன்;
குண்டு குண்டாய் காண்பவர்
கொஞ்சும் படியாய் எழுதுவேன்.
வீண டித்துத் தாள்களை
வீசல் இன்றி எழுதுவேன்;
வேக மாக அத்துடன்
விளக்க மாக எழுதுவேன்!
படிப்ப வர்கள் எளிதிலே
படிக்கும் படியாய் எழுதுவேன்;
பார்ப்ப வர்கள் மெச்சிட
பழகிப் பழகி எழுதுவேன்;
அடித்தல் திருத்தல் இன்றிநான்
அழகைக் கூட்டி எழுதுவேன்;
ஆசான் புகழ்ந்து போற்றவே
ஆசை யோடு எழுதுவேன்!
தேர்வுத் தாளைத் திருத்துவோர்
சிரமம் தீர எழுதுவேன்;
சிறப்பை எண்ணி எண்களும்
சேர்த்துத் தரவே எழுதுவேன்.
ஆர்வ மோடு வீட்டிலே
அப்பா மெச்ச எழுதுவேன்;
அதுவே பழக்கம் ஆவதால்
ஆசான் போற்ற எழுதுவேன்!
- அழகணார்

கிரிக்கெட்டுக்கு ஒரு நியாயமா?

முத்துவை அப்பா விசாரித்தார்.

"முத்து! நேரமாச்சே! இன்றுமா பள்ளிக்கூடம் போகலே?"

"பள்ளிக்கூடம் லீவுப்பா" என்று கூறியபடி கிரிக்கெட் மட்டையைத் தூக்கிக் கொண்டு வெளியே ஓடினான் முத்து.

முத்து எட்டாவது படிக்கும் பதிமூன்று வயதுச் சிறுவன். படிப்பில் சுமார்தான். ஆனால் எந்த நேரமும் கிரிக்கெட் என்றே அலைவான்.

மறுநாள் ஏதோ வேலையாகக் கடைத்தெரு சென்ற முத்துவின் அப்பா அவனது ஆசிரியரை எதேச்சையாகச் சந்தித்தார். "என்ன சார்! முத்து ஒருவாரமாக பள்ளிக்கூடத்திற்கே வருவதில்லை?" என்று அவர் அப்பாவிடம் கேட்க, அவரோ, "இல்லையே! நேற்று மட்டும்தான் அவன் பள்ளிக்கூடம் லீவுன்னு சொல்லி வீட்டில் இருந்தான்" என்று அப்பாவித்தனமாகப் பதில் சொன்னார். பாவம் அவர்! முத்து தினமும் பள்ளிக்கூடம் போகாமல் அவரை ஏமாற்றி வருவது அவருக்கு எப்படித் தெரியும்?

உடனே ஆசிரியர், "உங்க பையன் கிட்ட ஏதோ குறை இருக்கு. அதைக் கவனிச்சு முதல்ல சரி பண்ணுங்க பள்ளிக்கு சரியா வருவான்." என்று கூறிவிட்டுச் சென்றார்.

அன்று இரவு, "முத்து, இங்க வா" என்று அழைத்தார் அப்பா. அவனிடம், தான் வாங்கி வந்த புதிய கிரிக்கெட் மட்டையைக் கொடுத்தார். ஆச்சரியத்தில் திக்கு முக்காடிப் போனான் முத்து.

"காலையில் உங்க வகுப்பாசிரியரைப் பார்த்தேன்" என்று அப்பா கூறியதும் முத்து அதிர்ந்தான்.

உடனே, "அப்பா, என்னை மன்னிச்சுடுங்க! நான் ஒரு வாரமா பள்ளிக்கூடம் போகாதது உண்மைதான். எனக்குப் படிப்பே வராது. அதனாலதான் பள்ளிக்கூடம் போகப் பிடிக்கல" என்று அழுதான் முத்து.

"அழாதே முத்து. நான் கேட்கறதுக்கு யோசித்துப் பதில் சொல்லு" என்று அவனுக்கு ஆதரவாகப் பேசியபடி கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தார் அப்பா.

"முத்து, நீ கிரிக்கெட் விளையாடுகிறாய் இல்லையா! இப்ப ஒரு மேட்சில் தோற்று விட்டால் என்ன பண்ணுவே? அடுத்த மேட்சில் ஆடுவாயா? இல்லே. கிரிக்கெட்டுக்கே தலை முழுக்குப் போட்டு விடுவாயா?" என்று கேட்டார் அப்பா.


சிறிது நேரம் யோசித்து, "கண்டிப்பா தலை முழுக்குப் போட மாட்டேன். இன்னும் கடுமையாகப் பிராக்டிஸ் பண்ணி, சிறப்பாக விளையாடி ஜெயிக்கப் பார்ப்பேன்" என்றான் முத்து.

உடனே அப்பா, "அது மாதிரித்தானேப்பா படிப்பும்? கிரிக்கெட்டுக்கு ஒரு நியாயம், படிப்புக்கு ஒரு நியாயமா? ஒரு பரீட்சையில் பெயிலாயிட்டா அடுத்த பரீட்சையில் இன்னும் நன்றாகப் படித்து பாஸாகப் பாக்கணும். அடுத்து முதல் ரேங்க் எடுக்கப் பார்க்கணும்" என்றார்.

அப்பொழுதுதான் உண்மையைப் புரிந்துக் கொள்ள ஆரம்பித்தான் முத்து. "எனக்குப் புரிந்து விட்டது அப்பா! இனி மேல் பள்ளிக்கு ஒழுங்காகச் சென்று கவனமாகப் படித்து, கடினமாக உழைத்து முதல் மார்க் எடுக்க முயற்சிப்பேன்" என்று உறுதியாகக் கூறிய முத்துவைப் பார்த்துப் புன்னகைத்தார் அவர்.

— தின. அன்புதேவன்





எத்தனை பொருள்கள்?_போட்டி

மாப்பிள்ளை எத்தனை அமர்க்களமாக ஊர்வலம் போகிறார் பாருங்கள்! இதில் உள்ள பொருள்களை (மனிதர், உயிரினங்கள் உட்பட) தபால் கார்டில் எழுதி அனுப்புங்கள். முகவரிக் கூப்பன் இல்லாதவை கவனிக்கப்படமாட்டா. அயல் நாட்டு வாசகர்கள் இந்தியத் தொடர்பு முகவரியைத் தர வேண்டும். தபாலில் ஏற்படும் தாமதங்களுக்கு கோகுலம் பொறுப்பாகாது. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. முடிவு தேதி 31.7.96.

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை – 600 097.

நீங்களாக இருந்தால் என்ன செய்வீர்கள்?

கோகுலம் மே மாத இதழில் வெளியான இந்தப் போட்டியை மீண்டும் நினைவு படுத்திக் கொள்ளுங்கள். வெயில் நேரம். கிரிக்கெட் மேட்ச் பார்த்துக் கொண்டிருந்த பாலாஜி, அழைப்பு மணிச் சத்தம் கேட்டு வேண்டா வெறுப்பாகச் சென்று கதவைத் திறக்கிறான். ஒரு வயதான கிழவர், வெயிலில் வாடி வதங்கிய களைப்பும், படியேறி வந்த சோர்வும் முகத்தில் தெரிய நின்றிருந்தார். ஒரு கையில், பிதுங்கித் தொங்கிய கனமான பை, மற்றொரு கையில் ஒரு பெரிய கனமாக தூக்குப் பாத்திரம். வலதுகை இடுக்கில் மடக்கப்பட்ட ஒரு குடை. பாலாஜியைப் பார்த்ததும் கிழவர், "தம்பி, டெய்லர் தம்புசாமி இருக்கிறாரா? நான் அவர் மாமா" என்று கேட்கிறார். தம்புசாமி, அதே வீட்டில், அவர்களுக்குமுன் குடியிருந்தவர். அதே காம்பவுண்டில் இன்னொரு வீட்டிற்குத்தான் அவர் குடியேறியிருந்தார். தம்புசாமியின் மகன் கூட பாலாஜிக்கு நண்பன் தான். இருவரும் காலையில் கூட டெலிபோனில் பேசிக் கொண்டார்கள்.

பாலாஜியின் நிலையில் நீங்கள் இருந்தால், கிழவர் கேட்ட பிறகு முதலில் என்ன செய்வீர்கள் என்பதை ஒரு தபால்கார்டில் எழுதியனுப்பக் கேட்டிருந்தோம். கிட்டத்தட்ட எண்ணூறு பேர்களுக்குமேல் இதில் பங்கு கொண்டிருக்கிறார்கள்.


முடிவு தேதிக்குப் பிறகும்கூட இன்னும் தபால் கார்டுகள் வருகின்றன. பெரும்பாலானவர்கள், கிழவரை உள்ளே அழைத்துப் போவேன், மின் விசிறி போடுவேன். குளிர்பானம் தருவேன், பாலாஜிக்கு போன் பண்ணி வெயில் தாழ அழைத்துப் போவேன் என்று எழுதியிருக்கிறார்கள். இன்னும் சிலர் அவரை சாப்பிட வைப்பேன் என்றும்கூட பதிலளித்திருக்கிறார்கள். இதெல்லாம் நியாயம்தான். செய்ய வேண்டியவைதான். ஆனால், போட்டியில் என்ன கேட்டிருக்கிறோம் என்பதைக் கோட்டை விட்டுவிட்டீர்களே. "கிழவர் கேட்ட பிறகு முதலில் என்ன செய்வீர்கள்?" என்பதுதான் போட்டி. இரண்டு கைகளிலும் கனமான சுமையுடன், கை இடுக்கில் குடையுடன் கிழவர் நிற்பதைப் பார்த்ததும், உடனே உங்களுக்கு என்ன தோன்ற வேண்டும்? அவர் சுமையைக் குறைக்க என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். கை நீட்டிப் பைகளை வாங்கிக் கொள்ள வேண்டும். அதுதான் மனிதாபிமானம். பிறகு தான் வரவேற்பு, உபசாரம் எல்லாம். உங்கள் அப்பா அம்மாவோ, உறவினர்களோ இதே நிலையில் வந்தால், இப்படிச் செய்ய உங்களுக்குத் தோன்ற வேண்டும் என்பதை உணர்த்தவே இந்தப் போட்டி. **கை நீட்டிப் பைகளை வாங்கிக் கொண்டு, கிழவரின் சுமையைக் குறைப்பேன்"** என்ற பதிலைத்தான் எதிர்பார்த்தோம். பெரும்பாலானவர்கள் இந்த விடையை எழுதவில்லை என்றாலும், இருநூருக்கும் மேற்பட்டவர்கள் இதை எழுதியிருக்கிறார்கள். இவர்களில் இருந்து குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முதலில் 15 பேருக்குத்தான் பரிசு தருவதாக அறிவித்தோம். இருப்பினும், கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு 20 பேர்களுக்கு பரிசு தரப்படுகிறது.

– போட்டி முடிவு

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்:

1. ஜி. புவனேஸ்வரி, காரைக்குடி - 2.
2. ஏ. ராஜன், அந்தோணி நகர், திருநின்றவூர்.
3. எம். சுமித்ரா, தூத்துக்குடி - 2.
4. பி. கீதா, குருசாமிப் பாளையம், இராசிபுரம் வட்டம்.
5. டி. சரண்யா, சென்னை - 15.
6. ச. மகேஷ், மூலப்பாளையம், ஈரோடு - 2.
7. எம். பாபு, தாதம்பட்டி, சேலம்-14.
8. எஸ். கலாராணி, சிவகாசி - 626 123.
9. பா. விஸ்வநாதன், குடந்தை - 2.
10. இல. மேகவண்ணன், பேரம்பாக்கம்.
11. டி.கே. ஷர்மிளா, சென்னை - 49.
12. ஆயாசின், பழவந்தாங்கல், சென்னை - 14.
13. பி. ஆர். தரணி, சாமராஜ நகர், கர்நாடகா.
14. இரா. அறிவழகன், மகாராஜபுரம் - 614 017.
15. என். லோகநாதன், வடுகர் கோட்டை, அடுப்புக் கோட்டை.
16. ய. மகாலட்சுமி, கோவை - 1.
17. தா. முனிலட்சுமி, மேகலசின்னம்பள்ளி அஞ்சல், கிருஷ்ணகிரி வட்டம்.
18. எஸ். எத்திராஜன், அம்பம்பாளையம், முசிறிவட்டம்.
19. பு. அங்கயற்கண்ணி, ஆலாத்தூர், விக்கிரபாண்டியம் (அஞ்சல்).
20. என். திவ்யா, சென்னை - 49.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு. கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி. இது வெறும் போட்டி மட்டும் அல்ல. இதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடை மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ள உதவும் வழிகாட்டியும் ஆகும்.



புவனா ஒரு புதையல்

மதி ஒளி

12. ஒப்பந்தம்!

டாக்டரும், ரவியும் கதவைப் படபடவென்று தட்டினார்கள். ''கதவை ஏன் மூடிவிட்டீர்கள்? உள்ளே நாங்கள் இருக்கிறோம். கதவைத் திறவுங்கள்'' என்று இருவரும் கத்தினர்.

''வேண்டுமென்றேதான் யாரோ கதவை மூடி நம்மைச் சிறைப்படுத்தியிருக்கிறார்கள். நீங்கள் என்ன தட்டினாலும் எப்படிக் கத்தினாலும் அவர்கள் திறக்கப் போவதில்லை. வீணாக உங்களை அலட்டிக் கொள்ளாதீர்கள். காரணமின்றி அவர்கள் அடைத்திருக்க மாட்டார்கள். அதனால், அவர்களாகவே வந்து கதவைத் திறப்பார்கள். அதுவரை பொறுமையாக இருப்போம்'' என்றாள் புவனா அமைதியாக.

தாங்கள் இருவரும் என்ன நடக்கப் போகிறதோ என்று பதைபதைத்துக் கொண்டிருக்க, புவனா மட்டும் அத்தனை பொறுமையாக இருந்தது அவர்களுக்கு வியப்பாக இருந்தது. மலரைப் போல் மென்மையான மனமுடையவள்ளாக இருந்த புவனா, எத்தனை மனவுறுதி படைத்தவளாகிவிட்டாள்!


அரை மணிக்குப் பிறகு கதவு திறந்தது. தலைப்பாகை அணிந்த கம்பீரமான தோற்றத்துடன் நடுத்தர வயதுள்ள ஒருவர் உள்ளே வந்தார்.

''உஷ்!'' என்று வாயில் விரலை வைத்து அவர்களைப் பேசாதிருக்கும்படி மௌன

மாக எச்சரித்த தலைப்பாகை, தன்னைப் பின்தொடருமாறு சைகை காட்டிவிட்டு வெளியே நடந்தார். மறைந்து ஒளிந்து நடந்தனர் நால்வரும்.

"வெளியே பந்த் நடக்கிறது இல்லையா? எங்கேயோ கலாட்டா. அதைக் காரணம் காட்டிப் பார்வையாளர்களை அனுமதிப்பதை நிறுத்திவிட்டார்கள்," என்று கிசுகிசுத்தார் தலைப்பாகை.

காவல் கோபுரத்தைத் தாண்டி நால்வரும் வெளியே வந்தனர். ஒதுக்குப்புறமாக இருந்த வீட்டை அடைந்த தலைப்பாகை, "இனிமேல் பயமில்லை, பேசலாம்" என்று அவர்களை சோபாவில் உட்கார வைத்தார். உள்ளே சென்று நான்கு கண்ணாடிக் கோப்பைகளில் ஆரஞ்சு கிரஷ்ஷை எடுத்து வந்தார். மூவருக்கும் கொடுத்துவிட்டுத் தாமும் எடுத்துக் கொண்டார்.



"சாப்பிடுங்கள்."

கிரஷ்ஷில் ஏதாவது மயக்க மருந்து கலந்திருக்குமோ என்ற தயக்கத்தில் ரவியும் டாக்டரும் குடிக்கத் தயங்கினர். ஆனால் புவனா, எந்தவிதமான தயக்கமும் இல்லாமல் ஒரு கோப்பையைக் கையில் எடுத்துக் கொண்டு குடிக்க ஆரம்பித்துவிட்டாள்! டாக்டரும் ரவியும் அவளைத் திகைப்புடன் பார்த்தனர்.

"தைரியமாகக் குடியுங்கள் மாமா. டாக்டர் உங்களையும்தான். நீங்கள் சந்தேகப்படும்படி இதில் எந்தவிதமான மயக்க மருந்தும் இருக்காது. அப்படியே ஏதாவது கலந்திருந்தாலும் அது என்னுடைய கோப்பையில்தான் கலக்கப்பட்டிருக்கும்," என்று சிரித்தாள்.

இருவரும் புவனாவைத் திகைப்புடன் பார்த்தபடி, கிரஷ்ஷைக் குடித்தார்கள்.

"துணிச்சலான சிறுமி! எனது பாராட்டுகள்" என்று சிரித்தார் தலைப்பாகை.

"ஆமாம், எதற்காக எங்களை அடைத்து வைத்தீர்கள்? பிறகு விடுவித்து, இப்போது இங்கே கூட்டி வந்திருக்கிறீர்கள்? உங்களுக்குத் தமிழ் தெரியுமா? நாங்கள் பேசிக்

கொண்டதைப் புரிந்து கொண்டீர்களா?" - எல்லாக் கேள்விகளையும் புவனாதான் மூச்சுவிடாமல் கேட்டாள்.

"தமிழ் எனக்கு நன்றாகத் தெரியும். சென்னையில் சொந்தமாக வாசனை பாக்கு, குங்குமப்பூ கடை இருக்கிறது" என்று சிரித்தார் தலைப்பாகை.

"முக்கியமான கேள்விக்கு நீங்கள் இன்னும் பதில் தரவில்லை."


"பொறும்மா" என்று சிரித்த தலைப்பாகை, "நான் விஸ்வநாத். வாரிசு இன்றி மறைந்த மகாராணாவின் தாத்தாவும் எனது தாத்தாவும் சொந்த அண்ணன் தம்பிகள். என் தாத்தாதான் பெரியவர். முற்போக்கு எண்ணமுடையவர். அவர் கடல் கடந்து லண்டனில் படிக்கப் போனார். அதற்கே பெரிய பிரச்னை எழுந்ததாம்! படிப்பை முடித்துவிட்டுத் திரும்பி வந்தபோது தனது அழகான அடர்ந்த தலைமுடியை கிராப்பாக மாற்றிக் கொண்டு வந்தாராம்! இதை அரண்மனைப் பண்டிதர்களும் ராஜ குடும்பத்துப் பெரியவர்களும் ஏற்கவில்லையாம்! பெரிய பிரச்னையாகி விட்டதாம்!" என்று நிறுத்தினார்.

"கிராப் வைத்துக் கொண்டது கூடவா பெரிய பிரச்னையாகும்?"

"இன்றைக்கு வேண்டுமானால் இது சர்வ சாதாரணமான; அற்பமான விஷயமாக இருக்கலாம். ஆனால், அறுபது எழுபது ஆண்டுகளுக்கு முன்பு மதத்திற்கும், மதச் சடங்குகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வந்த காலத்தில் இதெல்லாம் மிகக் கடுமையான குற்றங்களாகக் கருதப்பட்டன."

"சரி, மேலே சொல்லுங்கள்?"

"தாத்தா, கிராப்பை மாற்றிக் கொள்ள மறுத்துவிட்டதால், அவரை வாரிசு உரிமை இழந்தவராக விலக்கிவிட ராஜ குடும்பத்தினர் முடிவு செய்தனர். தாத்தாவும் முரட்டுப் பிடிவாதம் உடையவர். இணங்கிவரவில்லை. இந்த அரசுரிமையும் வேண்டாம்.



கிராப்பையும் மாற்றிக் கொள்ள மாட்டேன் என்று எழுதிக் கொடுத்துவிட்டு இங்கிலாந்துக்கே சென்று வாழ்ந்தார். அவர் தனது உரிமையை இழந்ததால்தான், மகாராணாவின் தாத்தாவுக்கு அரசுரிமை கிடைத்தது. இல்லையேல் எங்க தாத்தாதான் மகாராணாவாகியிருந்திருப்பார். மறைந்த மகாராணா இதை, மறக்கவே இல்லை. அதோடு, இன்று சர்வ சாதாரணமாகி விட்ட 'கிராப்' பிரச்னைக்காக தாத்தாவுக்கு அரசுரிமை மறுக்கப்பட்ட செயல் அநீதியானது என்று மகாராணா மனதாரக் கருதினார். ஏன், அவரே கூட இறக்கும்போது கிராப்தானே வைத்துக் கொண்டிருந்தார்? அதுவும் தனக்கு வாரிசு இல்லாத நிலையில், தாத்தாவின் ஒரே வாரிசாக இருக்கும் எனக்கு அவர் ஏதாவது செய்ய வேண்டும் என்று மனதார எண்ணினார். என்னைக் கண்டுபிடித்து என்னுடன் தொடர்பு கொள்ள அவர் எத்தனையோ முயற்சிகள் செய்தார். ஆனால், இங்கு அவரைச் சுற்றி இருந்தவர்கள் அதை வரவேற்கவில்லை. நான் வந்துவிட்டால் வாரிசு உரிமை கேட்பேனோ என்று அவர்கள் பயந்தனர். அதனால், மகாராணா என்னைக் கண்டுபிடிக்க எடுத்த முயற்சிகள் எதுவும் வெற்றி பெறாமல் அவர்கள் கவனமாகப் பார்த்துக் கொண்டனர்."

"என்னவோ கதை கேட்பதுபோல் இருக்கிறதே!"

"உண்மைதான். கதையாகத் தோன்றினாலும் இது உண்மையே. எங்க அப்பா லண்டனில் இருந்து சென்னைக்கு வந்து அங்கேயே வாழ்ந்தார். வியாபாரம் செய்தார். இந்த விவரமெல்லாம் என் பாட்டி கூறி நான் அறிந்து கொண்டவை. மகாராணா இறந்து பிறகு, அந்தச் செய்தி, பத்திரிகையில் வெளியானதும், அதைப் பாட்டி படிக்க நேர்ந்தபோதுதான் வாயைத் திறந்து எல்லாவற்றையும் கூறினாள். அதற்குப் பிறகுதான் நான் வீட்டில் கிடந்த பழைய புகைப்படங்களையும் தஸ்தாவேஜுகளையும் கிளறிப் பார்த்தேன். புகைப்



படங்கள், கடிதங்கள் எல்லாம் கிடைத்தன. கோர்ட்டில் தாக்கல் செய்து சந்ததி இல்லாத மகாராணாவுக்கு நான்தான் உண்மையான வாரிசு என்பதையும் நிரூபித்துவிட்டேன்."

"இங்குள்ள அரச குடும்பத்தினர் அதை ஏற்றுக் கொண்டார்களா?" என்று ஆவலுடன் கேட்டாள் புவனா.

"அத்தனை எளிதில் அவர்கள் தங்கள் உரிமைகளை விட்டுக் கொடுத்துவிடுவார்களா? மகாராணாவின் மைத்துனர் தலைமையில் எதிர் வழக்கு ஆடினர். இவர்தான் வாரிசாக வேண்டும் என்று மகாராணா விரும்பினார் என்பதை நிரூபிக்கட்டும். பிறகு இவரை வாரிசாக ஏற்கிறோம்" என்று எதிர்வாதம் புரிகிறார்கள். கடைசியில் அப்படித்தான் தீர்ப்பும் ஆகியுள்ளது. ஆறு மாதங்களுக்குள் இதை நான் நிரூபிக்க வேண்டும். ஏற்கெனவே ஐந்து மாதங்கள் ஓடிவிட்டன."

"அதை உங்களால் உடனே நிரூபிக்க முடியாதா ஐயா?"

"எப்படியம்மா முடியும்? மகாராணா என்னைத் தேடிக் கண்டுபிடிக்க எடுத்த



எல்லா முயற்சிகளையும் தோல்வியடை யச் செய்தவர்கள் இவர்கள்தானே?"

"ஆமாம், எதற்காக எங்களை அடைத்து வைத்தீர்கள்? இப்ப விடுதலை பண்ணி இங்கே அழைத்து வந்திருக்கிறீர்கள்?"

"சரியாப் போச்சு போம்மா! உங்களை அடைத்து வைத்திருப்பதைக் கேள்விப் பட்டு நான்தான் உங்களை விடுவிக்க ரொம்பப் பாடுபட்டு வந்தேன். ஆமாம், நான் எதற்காக உங்களை அடைத்து வைக்க வேண்டும்?"

விஸ்வநாத் உண்மையாகவே அப் பாவியா? இல்லை, எல்லாம் தெரிந்து வேஷம் போடுபவரா? புவனாவால் எதை யுமே ஊகிக்க முடியவில்லை.

இதற்குள் புவனாவின் மன ஓட்டத்தை அறிந்து கொண்டவர் போல் விஸ்வநாத், "என்னை நம்பும்மா. கடந்த இருபது நாட் களுக்கும் மேலாக நான் இங்கே ராம்தம் பூரில் இல்லை. சில அவசரப் பிரச்னை களைக் கவனிக்க சென்னை போய்விட்டு நேற்று இரவுதான் திரும்பி வந்தேன். இங்கே வந்ததும்தான், ராணாவின் புதையல் இருக் கும் இடத்தை அறிந்த சென்னை யைச் சேர்ந்த யாரோ ஒரு சிறுமி இங்கே வந்தி ருப்பதாக அறிந்து கொண்டேன். ஆனால், அது நீயாக இருப்பாயோ என்பதைப் பற்றி நான் எண்ணிக் கூடப் பார்க்க வில்லை. இங்கே உள்ள ராணாவின் உறவி னர்கள் சொத்துக்காக எதையும் செய்யத் துணிந்தவர்கள். இங்கே யாரையோ அடைத்து வைத்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டதும் ஒரு மனிதாபிமானத் தில் விடுவிக்க ஓடோடி வந்தேன். நான் வந்த வேலை முடிந்தது. நீங்கள் பத்திர மாகப் போய்ச் சேருங்கள்" என்றார்.

"இருங்கள் ராணா விஸ்வநாத். மறைந்த மகாராணா அவர்கள் தன் விலைமதிப்பற்ற புதையலை மறைத்து வைத்துள்ள இடம், இந்தச் சிறுமி புவனாவுக்குத்தான் தெரி யும். அதையும் அறிந்து கொண்டு பிறகு இவர்களைப் போக விடுங்கள்" என்று கர்ண கடூரமான ஒரு முரட்டுக் குரல் கேட்டது.

எல்லோரும் திரும்பிப் பார்த்தனர். அறை வாசலில் ஒரு தாடிக்காரர் சிரித்த படி நின்றிருந்தார். அவரது உத்தரவின்படி உள்ளே பாய்ந்து வந்த இரண்டு முரடர் கள் விஸ்வநாத்தையும், டாக்டர், ரவி, புவ னாவையும் தூணுடன் கட்டினர். அதை எதிர்க்க அவர்கள் நடத்திய போராட்டம்

என்ன கடிதம்? கோடை விடுமுறைப் போட்டி-1 முடிவு

இந்தப் போட்டியில் கலந்து கொண்டவர்களில் ஒரு சிலரே தவறான விடையை எழுதியிருந்தார்கள். குலுக்கல் முறையே பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்கக் கை கொடுத்தது.

சரியான விடை

"அன்பு மிக்க சங்கர், வணக்கம், உலக கிரிக்கெட் கோப்பை ஆட்டம் பார்த்தாயா? நானும் ஒருநாள் இதில் ஆடுவேன். இந்தியாவுக்காக ஜெயிப்பேன். நண்பன் சிட்டி"

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்:

1. பா.அப்ரமேயன், குரோம்பேட்டை, சென்னை -44
2. இ.அன்பழகன், புதுச்சேரி -10
3. எஸ்.நர்க்ஸ், உதகை-1.
4. பா.சந்தானகிருஷ்ணன், தீபாலபட்டி போஸ்ட், உடுமலைப்பட்டி
5. எம்.சியாமளா, சென்னை 600 101
6. வ.ரூபியாபேகம், வாழூர், சித்தார் கோட்டை போஸ்ட்
7. ஆர்.ஹரிணி, பாண்டிச்சேரி-5.
8. கே.ஈஸ்வரி, திருவனந்தபுரம், கேரளா
9. பி.சாகுல் அமீது, பெரிய கருப்பூர் மேக்குடி போஸ்ட்
10. ஜி. கௌசல்யா, வேளச்சேரி, சென்னை-42
11. B.மீனாட்சி சபிதா, திருச்சி-17.
12. மு.ரா.பிரவீனா, நாகை
13. ஜெ.பார்த்தசாரதி, சென்னை-5
14. சிவபெருமான், இரணியல் குமரி மாவட்டம்
15. எஸ்.பி.ரதன்குமார், பழனி 624 001
16. B.P கலையரசு, அத்திமாஞ்சேரிப் பேட்டை போஸ்ட்
17. ஜி.எஸ். சரவணன், சுமனேஸ்வரம் போஸ்ட்
18. ப.நபீஸ் அகமது, ஆடுதுறை
19. P.E. ஹரிப்பிரியா, சென்னை-5
20. ஏ.ஜெ.எஸ்.சாஜா, நெடும்பள்ளிவிளை

வெற்றிபெறவில்லை.

"நான்தான் மறைந்து போன மகாராணாவின் மைத்துனன் மகன் ராம்நாத். ராணாவுக்குச் சரியான வாரிசு இல்லாததால் எனக்குத்தான் ராணாவின் சொத்தில் பெரிய பங்கு உண்டு," என்று தன்னை புவனாவுக்கு அறிமுகப்படுத்திக் கொண்டார் தாடி.

"உங்களுக்கு என்ன வேண்டும்? எதற்காக எங்களைக் கட்டுகிறீர்கள்?" என்று புவனா கேட்டாள்.

"புதையல் மறைத்து வைக்கப்பட்டுள்ள இடம் கண்டிப்பாக உனக்குத் தெரியும். அதை உன்னால் நினைவுபடுத்திக் கொள்ள முடியும். அதை மட்டும் நினைவுபடுத்திச் சொல்லிவிடு. ஆளுக்குப் பாதியாக நாமே எடுத்துக் கொள்வோம். இந்த அரண்மனை வளாகம் மர்மங்கள் நிறைந்தது. இதன் ஒவ்வொரு மூலையும் எனக்குப் பழக்கமானது. என் உதவியின்றி யாரும் புதையலை எடுக்க முடியாது. எடுக்கவும் விடமாட்டேன். என்னுடன் ஒத்துழைக்கவில்லை என்றால் எல்லோரும் இங்கேயே சாம்பலாக வேண்டியதுதான். இந்த வீட்டைத் தீ வைத்துக் கொளுத்திவிட்டு பந்த் போராட்டக்காரர்களின் தலைமேல் பழியைப் போட்டு விடுவேன். உங்களுக்கு என்ன நேர்ந்தது என்பதுகூட வெளியே தெரியாது போய் விடும்," என்று கர்ஜித்தார் தாடி ராம்நாத்.


எல்லோரும் புவனாவை நோக்கினர்.

"ஐயா ராம்நாத் அவர்களே, உங்கள் யோசனைக்கு நான் சம்மதிக்கிறேன். புதையலில் ஆளுக்குப் பாதி. சரிதானே? வாருங்கள் போவோம். ஆமாம், இவர்களை எதற்காகக் கட்டி வைத்திருப்பது? நான்தான் உங்களுடன் வரப் போகிறேனே?

"அது முடியாத காரியம். புதையலை எடுத்த பிறகு இவர்களை வந்து விடுவிக்கலாம்."

புவனாவைப் புரிந்து கொள்ள முடியாத டாக்டரும் ரவியும் அவள் போவதைத் திகைப்புடன் நோக்கினர்.

(அடுத்த இதழில் முடியும்)


கல் மாலை
அமைப்பு: ரே
ஓவியம்:
கங்காபுரி அழகிய இராஜ்ஜியம்
கங்கைக் கரையில் அமைந்தது.
மன்னர் தர்மசேனர்
வெட்டுக்கிளி படையெடுப்பா? வரி விதிக்க வேண்டாம்.
நீதிநெறி தவறாதவர்.
நிவாரணப் பணிகள் உடனே தொடரட்டும். மக்கள் எவரும் கண்கலங்கக் கூடாது.


அரசே, கங்கைக் கரையைக் காவல் காக்கும் காவலாளிகள் உடனே காண வேண்டுமாம்.
வரச் சொல்லுங்கள்.
காவலர்கள் வந்து வணங்கி—
அரசே, தினமும் கங்கைக் கரையில் ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்கிறது!
அப்படியா! நோய், நொடி, வறுமை காரணமோ என்னவோ? கேட்டீர்களா?


உங்கள் தர்ம ஆட்சியில் இதற்கெல்லாம் ஏது இடம் பிரபு?
அழுகை கேட்கிறதே தவிர யாரையும் காண முடியவில்லை அரசே!
அதிசயமாக இருக்கிறதே!
அழுகுரல் எந்த நேரத்தில் கேட்கிறது?
நடு இரவில் தொடங்கி விடியும் வரை கேட்கிறது மன்னா!
அழுகையில் இதயத்தைப் பிழியும் துயரம் கப்பியிருக் கிறது. கேட்கும் போது மனதை என்னவோ பண்ணுகிறது!


குறிப்பிட்ட இடத்தில் மட்டும்தான் கேட்கிறதா?
கங்கைநதி நெடுகிலும் கேட்கிறது மன்னா!
அது மானிட அழுகையாகத் தோன்றவில்லை அரசே!
இன்றே அமைச்சருடன் வருகிறேன். பயப்பட வேண்டாம்.
நல்லது அரசே!
அன்று நள்ளிரவு மன்னர் —
— அமைச்சருடன் சென்றார் —
வாருங்கள் அரசே. கவனித்துக் கேளுங்கள்!


ஆம்! பெண்ணின் அழு குரலே தான்!
சோகம் மனதைப் பிழிகிறதே!
மானிடக் குரலாகத் தோன்றவில்லை!
குரலைத் தொடர்ந்து போவோம்!
குரலைத் தொடர்ந்து இருவரும்—
போனார்கள்—
தங்கையம்மன் கோவிலுக்கே வந்து விட்டோமே!



அழுகை இங்கிருந்து தான் கேட்கிறது மன்னா!
இருவரும் உள்ளே சென்று வணங்கி —
பாரதத்தையும், மக்களையும் புனிதமாக்கும் கங்காதேவி... இந்த அழுகுரல் யாருடையது தாயே?
தேவி காட்சி தந்து —
அழுவது நான்தான் மன்னா!
மக்களின் பாவங்களை நீக்கும் நீங்களா வா அழுகிறீர்கள்!
தங்களுக்கு என்ன குறை இருக்கமுடியும் தாயே!


என்னிடம் குளித்து மக்கள் தங்கள் பாவத்தைக் கழிக்கிறார்கள்...
அவர்கள் கழிக்கும் பாவச் சுமையைத் தாங்க முடியாது தவிக்கிறேன் மன்னா. அதனாலேயே அழுகிறேன்!
தங்கள் துயரம் தீர வழி இருக்கிறதா தாயே?
மற்றவர் பாவங்களை ஏற்க வல்ல ஒரு புனிதர், கங்கையில் நீராடினால் புனிதமடைவேன்; என் சுமை குறையும்.
அத்தகைய புனிதரை எப்படிக் கண்டு பிடிப்பது தாயே?
இது கல்லால் ஆனமாலை. புனிதர்கள் அணிந்தால் இது மலர்ந்து மணக்கும். இல்லையேல், உடல் எரியும்!
நன்றி தாயே!
வெற்றியுடன் வந்து, என் சுமையைக் குறையுங்கள்!



அரண்மனை திரும்பியதும் —
நம் நகரில் இல்லாத புனிதர்களா?
தனகோடி ஒருவர் போதுமே? நூறு சிவாலயங்களைக் கட்டியவர். மனிதருக்காகவும், விலங்கு பறவைகளுக்காகவும் தர்ம வைத்திய சாலைகள், அன்ன சத்திரங்கள் கட்டி இருப்பவர். புனிதமே உருவானவர்.
கங்கா தேவியின் பாவச் சுமையைக் குறைத்து, புனிதமாக்கக் கூடியவர் அவரே. அவரிடமே போகலாம்.
தனகோடி வீடு —
துலாபாரம் நடந்து கொண்டிருக்கிறது.
தங்கள் வருகை எனக்குப் பெருமை!
என்ன விசேஷம் தங்க துலாபாரம்?



எனக்கு மணிவிழா. எடைக்கு எடை தங்கத்தை காசி விசுவநாதருக்கு தங்க வில்வ மாலை செய்யத் தருகிறேன்.
மிகவும் மகிழ்ச்சி!
அதோடு ஆயிரம் ஏழைகளுக்கு உடையளித்து அன்னதானம். நீங்கள் துவக்கி வைத்தால் பெருமை!
இவரை விடவா புனித தருமவான் இருக்க முடியும்?
மாலையைச் சூட்டிப் பாருங்கள் மன்னவா.


அன்னதானத்தைத் தொடங்குகிறேன். அதற்கு முன், இந்தக் கல் மாலையை அணியுங்கள்.
நன்றி மன்னவா!
மாலையை அணிந்ததும்—
ஐயோ, உடலெல்லாம் எரிகிறதே! எரிச்சல் தாங்கலையே!
தனகோடி தவித்தார்!
மன்னியுங்கள் அரசே! எனக்கு இந்தக் கல் மாலை வேண்டாம்.
இது என்ன அதிசயம்! போட்டதும் உடம்பு எரிகிறதே! அப்படியானால் தனகோடி புனிதர் இல்லையா?




அன்று இரவு கங்காதேவி —
மாலையை அணிந்ததும் தனகோடி தவித்துக் கழற்றி விட்டார்!
கோவிலில் —
தனகோடியைக் காட்டிலும் புனிதர் உண்டா தாயே!
தனகோடியைப் புனிதர் என்று யார் சொன்னது?
அப்படியானால் அவர் செய்பவை புண்ணியச் செயல்கள் இல்லையா தாயே?
கண்டிப்பாகப் புண்ணியம் தரும் செயல்களே. ஆனால், அவர் செய்யும் ஒரே ஓர் பாபத்தின் முன் அவை தோற்று விடுகின்றன!


உண்மையாகவா!
அது என்ன பாபம் தாயே?
ஊருக்கு தான தருமம் செய்யும் தனகோடி, தன் பெற்றோரைக் கவனிப்பதே இல்லை. வயதான காலத்தில் அவர்கள் பாட்டுப் பாடிப் பிச்சை எடுக்கிறார்கள்!
அப்படியா!
ஆம். அவர் தருமவான். ஏழை பங்காளர். பக்திமான். ஆனால் பெற்றோரைப் புறக்கணிக்கும் பாவச்செயல், அவரது புண்ணியங்களை விழுங்கி விடுகின்றன.
நம்பவே முடியவில்லையே!
உண்மையில், என் பாவச் சுமை அதிகரிப்பது அவரால் தான்! என் அழுகைக்கு காரணமே இந்த தனகோடி தான்!


இனி என்ன செய்வது தேவி?
இது மதங்க முனிவர் தவம் கலையும் நாள். அவரிடம் சென்று கேளுங்கள்.
மலையடிவாரத்தில் புற்றுக்கு அருகே சென்று—
இதுதான் நடந்தது முனிவர் பெருமானே. கங்காதேவியின் துயர் தீரத் தாங்களே அருள வேண்டும்?
புற்றில் இருந்து குரல்—
நகரின் தென் கோடியில், கல் மண்டபத்தில் நாகன் இருக்கிறான். கல் மாலையைப் போட்டு அழைத்துப் போங்கள்.
கல் மண்டபத்தில்—
இங்கே நாகன் என்பது யார்?
நான் தான் அரசே!


கேவலம், இந்த செருப்புத் தைப்பவனா கங்கைத் தாயின் பாவங்களைக் குறைக்கும் வல்லமை பெற்ற புனிதன்! முனிவர் தவறாகக் கூறிவிட்டாரோ?
எதற்கும் கேட்போம் மன்னா!
நாகா, உனக்கு வலது கால் இல்லை போலிருக்கே! என்னாச்சு?
அது பெரிய கதை மன்னவா. நான் அனாதை. செல்வந்தர் ஒருவர் என்னை சுவீகாரம் எடுத்தார்.


அவர்களுக்கு மகன் பிறந்ததும் என்னைக் கொடுமைப் படுத்தினார்கள். ஓடி, காட்டில் வாழ்ந்தேன். தீ விபத்தில் சுவீகாரத் தந்தையின் மாளிகை எரிந்து போனது.
கேட்கவே பாவமாக இருக்கிறதே!
நான் உயிருக்குத் துணிந்து தீக்குள் போய் மூவரையும் மீட்டு வந்தேன். அதில் என் வலது கால் கருகிவிட்டது.
அடடா! அப்புறம்?
பெறாவிட்டாலும் சுவீகாரப் பெற்றோர் ஆயிற்றே? அதோடு தம்பி வேறு. அவர்களைக் காப்பது என் கடமை அல்லவா? அதுதான் இந்தத் தொழிலைச் செய்கிறேன்.
நாகா, இந்தக் கல் மாலையை அணிந்துகொள் பார்க்கலாம்!


நாகன் மாலையை அணிந்தான்.
ஆகா! கல் மலர்கள், இன்னும் பெரிதாக வீசி மலர்ந்து மணக்கின்றனவே!
நாகனை நீராட அழைத்து வந்தனர்.
கடமையைப் புறக்கணித்த, மனித நேயமில்லாத புண்ணியச் செயல்கள், பெரும் பாவமூட்டைகளே என்பதை, ஊருக்கு உணர்த்த வந்த நாகா, ஆயிரம் நமஸ்காரம். நீராடி என் பாவச்சுமையைக் குறைக்க அருள்.
நாகன் நீராடி கங்கையின் பாவச் சுமையைக் குறைத்தான். கங்கை புனிதமானாள்.
நாகன் சிரஞ்சீவியாகி, நள்ளிரவில் இன்றும் கங்கையில் நீராடி, கங்கை நீரைப் புனிதமாக்குவதாக மக்கள் நம்புகிறார்கள்.
கருத்து: கங்கா புராணம்.


"அம்மா! கால் ஸாக்ஸ் அடியிலே ஓட்டை இருக்குதும்மா..."
"திருப்பிப் போட்டுக்கோடா!"
"பீமன் கதை தெரியுமா உனக்கு?"
"தெரியுமே! கையிலே பெரிசா வச்சிட்டிருப்பானே சார்... அதானே."
"கையைக் கடிக்காத காரம் எது? கை எரியவும் எரியாது நமைச்சலும் எடுக் காது..."
"டேய் கடி!... காரம்டா."
"இது என்ன மிருகம் தெரியுமாடா மணி?"
"ரெட்டைச் சிவிங்கி, அப்பா!"
ஏழ்வரைக்கடியான்

ஒளிந்திருப்பவை என்னென்ன?



விடை : புலிகள் - 4, ஆமை - 1, காக்கைகள் - 2, பாம்புகள் - 2.

அழ.வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் வெளியிடத் தேர்ந்தெடுக்கப்பட்ட பத்தாவது கதை.

ரமேஷும் வினோத்தும் பள்ளியில் இருந்து திரும்பிக் கொண்டிருந்தனர். எதிரே நாலு கால் பாய்ச்சலில் ஒரு காளை மாடு தலைதெறிக்க ஓடி வந்து கொண்டிருந்தது.

"ரமேஷ், காளை மாடுடா! மிரண்டு போய் ஓடி வரது!" என்று ரமேஷின் கையைப் பிடித்து இழுத்து ஓரமாக ஒதுங்கிக் கொண்டான் வினோத். நன்றி தெரிவிக்க வேண்டிய ரமேஷ், "என்னடா இப்படி பயந்தாங்கொள்ளியா இருக்கே!" என்று வாய்க் கொழுப்பாகக் கிண்டலடித்தான்.

"யாருடா பயந்தாங்கொள்ளி?"



"நீதான். என்னமோ பேய் பிசாசைக் கண்டது போல், காளை மாட்டைப் பார்த்து இப்படி பயப்படறியே!"

"அப்போ நீ எதுக்குமே பயப்பட மாட்டியா?"

"மாட்டேன். எதுக்குமே பயப்பட மாட்டேன். ஐயா அஞ்சா நெஞ்சன்!" என்று பெருமையாக மார்தட்டிக் கொண்டான் ரமேஷ்.

"அப்படின்னா, இன்னிக்கு ராத்திரி பன்னிரெண்டு மணிக்கு எல்லைக் காளி கோவில் சுவரில், நான் தரும் கணக்கை பென்சில்ல எழுதிட்டு வா பார்க்கலாம்? நீ எதற்கும் பயப்படாத அஞ்சா நெஞ்சன் என்பதை ஒப்புக் கொள்றேன்?"

"சவால் ஏற்கப்பட்டது!" என்று வலது கையை மடக்கி, கட்டை விரலை உயர்த்திக் காட்டினான் ரமேஷ்.

"கணக்கு எங்கேடா?"

"அதை இப்போ தர மாட்டேன். இப்போ தந்தால், நீ இப்பவே போய் எழுதிட்டு வருவே. அது நடக்காது. ராத்திரி பதினொன்றரை மணிக்கு என் வீட்டுக்கு வா. தரேன். அப்புறமா காளி கோவில் சுவர்ல போய் எழுதிட்டு வா!"

"சரிடா..."

"டேய் ரமேஷ்.... வாய்க் கொழுப்பா வீம்பு பண்ணாதே. காளி கோவில்ல சாயங்காலம் ஆறு மணிக்கு மேலேயே நடமாட்டம் இருக்காது. பேய், பிசாசு, ஜடாமுனி எல்லாம் உலவும்னு யாருமே போக மாட்டாங்க. வீணா வம்புல மாட்டிக்காதே. சவாலைத் திரும்ப வாங்கிக்க."

"போடா பயந்தாங்கொள்ளி! சவால் விட்டா சவால்தான். ஐயா அஞ்சா நெஞ்சண்டா! பதினொன்றரை மணிக்கு வீட்டுக்கு வரேன். நீ தூங்கி வழியாம முழிச்சுக்கிட்டு இரு."

சரியாக இரவு மணி பதினொன்றரை. ரமேஷின் சைக்கிள் வினோத்தின் வீட்டு வாசலில் வந்து நின்றது. வினோத் கணக்கு எழுதிய தாளைக் கொடுத்தான். ரமேஷ் வாங்கி டார்ச் லைட் வெளிச்சத்தில் பார்த்தான்.

"என்னடா ஆறுஸ்தான பெருக்கல்! மூன்றாம் வகுப்புல போட்டதுடா! ஏதாவது கஷ்டமான கணக்கைக் கொடுடா?"



"வேண்டாண்டா. நீ அங்கே போய் விட்டு வந்தே. பன்னிரண்டு மணிக்குக் காளி கோவில்ல இருந்தே என்பதை நிரூபிக்கத்தான் இது" என்று குழைந்த வினோத், "டேய் ரமேஷ். இப்பக் கூட நினைச்சுப் பாருடா. விஷப் பரீட்சையாகி விடக்கூடாதுடா. சவாலைத் திரும்ப வாங்கிக்க" என்று கெஞ்சினான்.

"போடா பயந்தாங்கொள்ளி!" என்று பெருமையுடன் சாடிய ரமேஷ், "என்ன பென்சில்லடா இந்தக் கணக்கைப் போடணும்?" என்று கேட்டான்.

வினோத் சட்டைப் பையில் இருந்து ஊதாவண்ணப் பென்சிலை எடுத்துக் கொடுத்தான்.

"பை!" கூறிக் கையை ஆட்டி விட்டு ரமேஷ் சைக்கிளில் விரைந்தான்.

காளி கோவில் மாந்தோப்பு. அமாவாசை வந்து இரண்டு நாட்களே ஆகியிருந்ததால் மை இருட்டு. சுவர்க் கோழிகளும் சில்வண்டுகளும் போட்ட இரைச்சலில் மனம் கலங்கியது. காற்று வேறு மரக் கிளைகளைக் கலகலக்க வைத்தது.

ரமேஷ், சைக்கிளை கோவில் வாசலில் நிற்க வைத்துவிட்டு, பிரகாரத்திற்குள் நடந்தான்.

வினோத் கொடுத்த கணக்கை சுவரில் எழுதினான். விடையையும் போட்டு விட்டுத் தன் கையெழுத்தைப் போட்டான். அதற்குப் பிறகு தான், ஏற்கெனவே அந்தச்



சுவரில் சில எண்கள் எழுதப்பட்டிருப்பதை டார்ச் லைட்டின் ஒளியில் கவனித்தான். அவற்றை நன்றாக உற்றுப்பார்த்தான். பன்னிரெண்டு என்று எழுதி, இண்டு போட்டு அது அடிக்கப்பட்டிருந்தது. கீழே ஆர்.எஸ். என்று எழுதப்பட்டிருந்தது. அதை அடுத்து 19, 27 என்ற எண்கள் வெறுமனே அடிக்கப் படாமல் இருந்தன. ஒன்றும் புரியாமல் ரமேஷ் வீடு திரும்பினான்.

மறுநாள் அதிகாலை யிலேயே வினோத் அவனைத் தேடிக் கொண்டு வந்து விட்டான். ஏற்கெனவே அவன் காளி கோவிலுக்குப் போய்ப் பார்த்து விட்டுத்தான் பாராட்ட வந்திருந்தான். அவனுடைய துணிச்சலைப் பாராட்டி கோகுலத்திற்கு ஓர் ஆண்டு சந்தா கட்டி விடுவதாகக் கூறிக் கைகுலுக்கினான். ரமேஷ், தான் சுவரில் கண்ட எண்களைப் பற்றிக் கூறினான்.

"அது பெரிசா ஒண்ணுமிருக்காதுடா. எவனாவது பண்டை காஞ்சவங்க நம்மை மாதிரி பந்தயம் போட்டிருப்பாங்க. இல்லே, ஆடு மேய்க்கிறவங்க தங்கள் ஆடுகளோட எண்ணிக்கையையும் பெயரின் அடையாள எழுத்தை எழுதியிருக்கலாம்" என்றான் வினோத்.

மாலையில் இருவரும் வீடு திரும்பிய பொழுது பஞ்சாயத்து அலுவலக வானொலியில் மாநிலச் செய்திகளை அடுத்து அறிவிப்புக் கேட்டது! "பிரபல திருடன் ரஞ்சித் தமிழகத்தின் மருதூரை அடுத்துள்ள திருச்சூரில் நேற்று ஆர்.எஸ். பாங்கில் பத்து லட்சம் ரூபாயைக் கொள்ளை அடித்து விட்டுப் பணத்துடன் தப்பி விட்டான். அவனைப் பிடிக்க துப்புத் தருவோருக்குப், பத்தாயிரம் ரூபாய் பரிசு தரப்படும்" என்று அறிவிப்பு உரைத்தது.

"அநேகமாக அந்த ரஞ்சித் நம் ஊரிலதான் எங்காவது ஒளிந்திருப்பான்" என்று இருவரும் பேசிக் கொண்டனர்.

இருவரும் பிரியும் தெரு வந்தது.

"ரமேஷ், கேட்க மறந்து விட்டேனே. எங்கேடா என் ஊதா வர்ணப் பென்சில்? நேற்று இரவு கணக்குடன் அதை யும் தந்தேனே?" எனறு நினைவாகக் கேட்டான் வினோத்.

"அடாடா! ஆமாம். நான் கணக்கை காளிகோவில் சுவரில் எழுதி முடித்ததும் அது இருட்டில் எங்கேயோ விழுந்து விட்டது. தேடினேன் கிடைக்கலே. பகல்ல வந்து தேடலாம்னு வந்துட்டேன். ஓரேயடியா மறந்து போச்சு!"

"ஐயையோ! அது என் தங்கையின் கலர் பாக்ஸில் இருந்து அவளுக்குத் தெரியாமல் எடுத்துக் கொடுத்ததுடா!" என்று பதறினான் வினோத்.

"யார்டா எடுக்கப் போறாங்க? நாளை காலை ரெடியா இரு. சைக்கிளை எடுத்துக்கிட்டுப் போய்ப் பார்க்கலாம்" என்றான் ரமேஷ்.

மறுநாள் அதிகாலையில் நண்பர்கள் இருவரும் காளிகோவிலில் இருந்தனர். கலர் பென்சில் கிடைத்து விட்டது. திரும்பும்போது, தான் கணக்கு எழுதின சுவரை ரமேஷ் பார்த்தான். அவன் முகத்தில் வியப்புக்கூடியது!

அவன் போட்டிருந்த கணக்கை யாரோ பெரிய இண்டு போட்டு அடித்திருந்தார்கள்! அதோடு, 19 என்று எழுதப் பட்டிருந்த எண்ணும் இண்டு போட்டு அடிக்கப்பட்டு எதிரே ஜி.கே.பி. என்று எழுதப்பட்டிருந்தது. அதற்குக் கீழே இருந்த 27 மட்டும் அப்படியே அடிக்கப்படாமல்



கால்ல என்னயா கட்டு? ஆமா எந்த ஊருக்கு போற?

ரெண்டுக்கும் ஒரே பதில் தாங்க.

என்னயா கொழப்பற?

"செங்கல் பட்டு" தாங்க.

— ஆர். வாரணி

"நம்ம ரகு சோம்பேறிடா."

"எப்படி?"

"காலண்டர்ல தினமும் தாளைக் கிழிக்கணும்னு ஒரே நாள்ல மொத்தத்தையும் கிழிச்சுட்டானே!"


— பா. ஜெயக்குமார்



"டெண்டுல்கர் படம் வரைஞ்சியே அதுக்கு ஏன் கலர் குடுக்காமல் வந்திட்ட..."

"டெண்டுல்கர் கலர் எல்லாம் குடிக்க மாட்டார். கோகோ கோலாதான் குடிப்பார் அதான்."

— தி.வே. செல்வம்



இருந்தது. இருவரும் திரும்பினர்.

பள்ளி இடைவேளை. சாப்பிட்டு முடித்ததும், "வினோத் இன்னிக்கு தேதி 19. காளிகோவில் சுவர்ல அந்தத் தேதி அடிக்கப்பட்டு எதிரே ஜி.கே.பி என்று எழுதப்பட்டிருந் ததை கவனிச்சியா? நான் சந்தேகப்படுவது சரியாக இருந்தால், இன்று ஜி.கே.பி. என்ற பெயருடைய ஏதோ ஒரு பெரிய நிறுவனம் கொள்ளையடிக்கப் படப் போறது. இதே போல் 27ம் தேதியும் நடக்கப் போகிறது" என்றான் ரமேஷ்.

மறுநாள் காலை செய்தித்தாளில் "பிரபல ஜி.கே.பி. நகைச்கடை நேற்று இரவு கொள்ளையடிக்கப்பட்டது. இதுவும் ரஞ் சித்தின் கைவரிசையே!" என்று செய்தி வெளியாகியிருந்தது.

"ரமேஷ் உன் சந்தேகம் உறுதியாகி விட்டது. அப்போ 27-ஆம் தேதி எங்கே கொள்ளையடிக்கப் போகிறார்கள் - என்பதைக் கவனிப்போம்" என்றான் வினோத்.


வினோத்தும், ரமேஷும் பத்தொன்பதாம் தேதி மீண்டும் காளி கோயிலுக்குச் செல்லத் திட்டமிட்டனர்.

வினோத்தும், ரமேஷும் தினமும் காளி கோவிலுக்குச் சென்று கவனித்து வந்தனர். 29-ஆம் தேதிக்கு எதிரே 23-ஆம் தேதி ஒரு பிள்ளையார் படம் வரையப்பட்டிருந்தது!

"சொக்கிப்பட்டி பிள்ளையார் கோவில்ல 29-ஆம் தேதி பிள்ளையாருக்கு வைரக் கிரீடம் வைக்கிறாங்க. அங்கே கொள்ளையடிப்பாங்க போல இருக்கு" என்றான் ரமேஷ்.

இருவரும் போலீஸ் ஸ்டேஷனுக்கு விரைந்தனர். தங்கள் கண்டுபிடிப்பை அவர்கள் விளக்கிய போது போலீஸ் இன்ஸ்பெக்டர் அதிர்ச்சி அடைந்தார். விஷயம் இரகசியமாக வைக்கப்பட்டு கொள்ளைக்காரனைப் பிடிக்க வலை விரிக்கப்பட்டது. வகையாக வந்து சிக்கிக் கொண்டான் கொள்ளைக்காரன் ரஞ்சித்.

இப்பொழுது ரஞ்சித் தன் கூட்டத்தினரோடு பலமான காவலுடன் சிறையில் இருக்கிறான். வினோத்துக்கும், ரமேஷுக்கும் ஜனாதிபதி பரிசு கிடைக்கும் என்று கூறுகிறார்கள். இடையில் பள்ளியில் பாராட்டு விழா! போகலாமா நாமும்?



அஞ்சல் அட்டை

அஞ்சல் அட்டை சிறியது;
ஆற்றும் தொண்டோ அரியது!
நெஞ்சில் நினைத்த சேதியை
நேரில் கொண்டு சேர்க்குது!


இன்ப துன்பம் ஆயினும்
இழப்பு லாபம் ஆயினும்
அன்பி னோடும் ஏற்குது;
அலைந்து சுமந்து சேர்க்குது!

சமயம் சாதி மொழியெனச்
சாற்றும் பேதம் இன்றியே
இமயம் தொட்டுக் குமரிவாழ்
எல்லோ ருக்கும் உதவுது!

பிரிந்து வாழும் உறவினைப்
பிணைக்கும் இனிய தூதனாய்
விரிந்த மூலை முடுக்கெல்லாம்
விரைந்து பயணம் புரியுது!

சொற்பச் செலவில் செய்திகள்
சொல்லும் அஞ்சல் அட்டைபோல்
உற்ற தொண்டன் உலகிலே
உண்டோ எண்ணிப் பாருங்கள்!

- சீனி. விஜயராணி



FOR HOURS OF HAPPY READING....
96 PAGES FOR JUST RS. 5!
Photo : Raju Narayan
GOKULAM
DON'T MISS THE JULY ISSUE!
GOKULAM
The monthly magazine for children
GOKULAM, EKKADUTHANGAL, MADRAS - 600 097.

(ஓரங்க நாடகம்)

நான்தான் பொருத்தம்!

எஸ். ஆர். ஜி. சுந்தரம்

மாலா : சுபா! இன்னிக்கு நிலாச் சாப்பாடு ரொம்பப் பிரமாதம்! இனிமே ஒவ்வொரு பௌர்ணமியிலும் நாம எல்லாரும் தவறாம நிலாச் சாப்பாடு சாப்பிடணும்!

சுபா : ம்... நிச்சயமா! அதுவும் இந்த பீச்சுக்கு வந்துதான் சாப்பிடணும்!

மாணிக்கம் : ம்! சரி. இப்போ நாம எல்லோரும் சடுகுடு விளையாடலாமா?

காளமேகம் : அ...ச...டு! சடுகுடுவை விட்டா இவனுக்கு வேற விளையாட்டே தெரியாதுடா!

தாமஸ் : அப்போ நீதான் ஏதாவது சொல்லேன் காளமேகம்!

காளமேகம் : தாமஸ் நண்பரே! இனிய தமிழிலே ஆங்கிலத்தைக் கலந்து பேசி தமிழைக் கொலை செய்யாதீர்! இந்தக் காளமேகத்தின் ஆலோசனையைக் கேளுங்கள்" என்று அழகாகச் சொல்லலாமே!

ராஜா : காளமேக நண்பரே, நீர்தான் ஒரு விளையாட்டைச் சொல்லுங்களேன்?

காளமேகம் : விடுகதை விளையாட்டு விளையாடுவோமா?

மாணிக்கம் : ஓ.கே!

காளமேகம் : என்ன ஓ.கே? அப்படியே விளையாடுவோம்னு இயம்புக!

மாணிக்கம் : ஐயோ அறுக்க ஆரம்பித்து விடாதே! அப்படியே செய்வோம்! அப்படியே செய்வோம்!

மாலா : சரி, முதல் விடுகதையை நீயே சொல் காளமேகம்!

காளமேகம் : ம்... சரி சொல்கிறேன். கேளுங்க! நாக்கு உண்டு பேச மாட்டான். வயிறு உண்டு உண்பான். தொப்பி போட்டால் ஓய்வெடுப்பான்- இது என்ன?

மாலா : நான் சொல்றேன். யானை!

காள : யானைக்கு ஏது தொப்பி?

ராஜா : பேனா சரியான விடையா காளமேகம்?

காள : அதுதான் சரியான விடை.

மாணி : போதும் இந்த விடுகதை விளையாட்டு. சரியான 'போர்'!

காள : 'போர்' என்று சொல்லாதே! 'சலித்துப் போய் விட்டது. நிறுத்திக் கொள்வோம்' என்று சொன்னால் எவ்வளவு இனிமையாக இருக்கும்?



மாணி : ஐயா காளமேகப் புலவரே! அப்படியே, தங்கள் கட்டளைப்படியே ஆகட்டும்!

ராஜா : சரி, என்ன நாடகம் போடலாம். சரித்திர நாடகம் போடலாமா?

காள : மகாகவி காளிதாசன் நாடகம் போட்டால் யாம் கவிமழை பொழிந்து, பாமலர் சொரிந்து தேனூறும் பாடல்கள் பாடி செவி குளிரக் கானம் செய்திடுவோம்!

மாணி : ராஜா வேஷத்துக்கு நான்தான் பொருத்தம்.

காள : மாணிக்கம், தான்தான் ராஜாவாக நடிக்க வேண்டுமென்று முந்திக்

கொள்ளுவது மாபெருங்குற்றம்!

ராஜா : யாராவது ஒருத்தர் ராஜாவாக நடிக்க வேண்டும். அவ்வளவுதானே காளமேகம்?

காள : அதெப்படி? ராஜாவாக நடிப்பதில் மாணிக்கத்தை விட நீதான் சிறந்தவன்... தகுதியானவன். இல்லையா நண்பர்களே?

சுபா : ஆமாம்! ராஜாவுக்குத்தான் ராஜா பாத்திரம்!

தாமஸ் : இல்லை எங்கள் மாணிக்கத்துக்குத்தான் ராஜா பாத்திரம்!

காள : இருங்க இருங்க. சத்தம் போடாதீங்க. ம்.. இதுக்கு என்ன செய்யலாம்? அதோ அங்கே பாருங்க!

மாலா : அட, நம்ம சாரணர் குழு உறுப்பினர் பட்டு அக்கா!

சுபா : ஆமாம்! 'பட்டு அக்கா... இங்கே வாங்களேன்?

காள : அக்காவே நம் கேள்விக்கு சரியான பதில் சொல்லட்டும்!

பட்டு : ஓ! நீங்களும் இங்கேதான் வந்திருக்கீங்களா? என்ன செய்துக்கிட்டிருக்கீங்க?

மாணி : நாங்க எல்லோரும் சேர்ந்து ஒரு சரித்திர நாடகம் போடலாம்னு பார்க்கறோம்!

காள : ஆனால் அதில் ஒரு சின்ன சிக்கல்... ராஜாவாக நடிக்கத் தகுதியானவன் மாணிக்கமா, ராஜாவா என்று கண்டுபிடிக்க வேண்டும்... ஏதாவது வழி கண்டுபிடித்துச் சொல்ல முடியுமா?

பட்டு : இவ்வளவுதானே...? நான் சொன்னால் அந்த முடிவை எல்லாரும் ஏற்றுக் கொள்வீர்களா?

எல்லோரும் : ஓ! ஏற்றுக் கொள்வோம்!

பட்டு : சரி! இப்போ இவங்க ரெண்டு பேருக்கும் நான்கு போட்டிகள் நடத்தப் போறேன்... இதுலே யார் அதிக மதிப்பெண் வாங்கறாங்களோ, அவங்களுக்குத் தான் ராஜா வேஷம்! இதோ முதல் போட்டி... நல்லா கவனியுங்க... எனக்கு ஒரு பிடி ஈரமண் வேணும்... யார் முதல்லே எங்கிட்டே ஈரமண்ணைக் கொண்டு வந்து தர்றீங்களோ அவனுக்குத்தான் வெற்றி! இதற்கு மதிப்பெண்கள் பத்து! பி ரெடி! ஒன், டூ, த்ரீ!

காள : ஐய்யோ 'ரெடி' என்று கூறி ஆங்கில நெடியைத் தமிழில் கலக்குகின்றீர்களே!



(மாணிக்கம் கடற்கரைப் பக்கம் ஓட, ராஜா இருந்த இடத்திலேயே தோண்ட ஆரம்பிக்கிறான்)


மாலா : என்ன இது! ராஜா இந்த இடத்திலேயே மண்ணைத் தோண்டிக்கிட்டிருக்கான்!

ராஜா : அக்கா இதோ ஈரமண்!

பட்டு : சபாஷ்! இந்த முதல் போட்டியில் உனக்குத்தான் வெற்றி!

மாணி : (கையில் ஈரமண்ணுடன் வந்து) இதென்ன அநியாயம்! கடற்கரையோரம் வராமல் இந்த ராஜாவுக்கு எப்படி ஈரமண் கிடைச்சது?

பட்டு : அங்கேதான் நீ உன் புத்தி கூர்மையைப் பயன்படுத்தியிருக்கணும்! நம்ம நகர்லே ரெண்டு நாளைக்கு முன்னால, நல்ல மழை பெய்ததை நீ மறந்துட்டே. ஆனா ராஜா மறக்கல்லே. அதனாலதான் இருந்த இடத்திலேயே மண்ணைத் தோண்டி, அடி ஈரமண்ணை



எடுத்துக் கொடுத்துட்டான்! சரி, இப்போ இரண்டாவது போட்டி. இதற்கும் 10 மதிப்பெண்! மாணிக்கம், தளராதே! முயற்சி செய்! நான் நடத்தப் போற மீதி ரெண்டு போட்டிகளுக்குக் கிடைக்கப் போற மதிப்பெண் 50. கடைசி போட்டிக்கு 40. இப்போ 10.

மாணி : ம்... இரண்டாவது போட்டி தொடரலாம்!

பட்டு : நீங்கள் ஒரு நாட்டுக்கு ராஜா வானால் எப்படி நடந்து கொள்வீர்கள் - மாணிக்கம்! சொல் பார்க்கலாம்!

மாணி : ஆகா... நான் மட்டும் ராஜாவாயிட்டா மணிக்கொரு உடை மாற்றிக் கொண்டு இனிப்புப் பண்டங்களை அண்டா அண்டாவாகச் செய்யச் சொல்லி தினமும் சாப்பிடுவேன். ஆப்பிள் ஜூஸ் அருந்தி, உடல் பலம் பெற்றிடுவேன். என்னை எதிர்த்துப் பேசுவோர் எவராயிருந்தாலும் சிறையிலே தள்ளிடுவேன். ஹாஹ்ஹா... ஹாஹ்ஹா... என்று சிரித்துச் சிரித்தே வாழ்வேன்!

தாமஸ் : பிழைக்கத் தெரிந்த ராஜா நீதான்!

பட்டு : நீ எப்படி நடந்துப்பே ராஜா!

ராஜா : நான் ஒரு ராஜாவானால் முதலில் குடிமக்களின் குறைகளையெல்லாம் கேட்டு, அவைகளை நீக்க என்னாலியன்ற வகையில் பாடுபடுவேன். ஆடம்பரத்தை அகற்றுவேன். நல்ல ஒழுக்கத்தைப் பின்பற்றுவேன். குடிமக்களின் முதல் ஊழியனாக விளங்குவேன்.

பட்டு : உண்மையில் இதுதான் சரியான பதில்! மக்களுக்காகத்தான் ராஜாவே தவிர, ராஜாவுக்காக மக்கள் இல்லை. இப்போ என் முடிவைச் சொல்லப்

போறேன்.

சுபா : அக்கா நாலாவது போட்டி...?

பட்டு : தெரியும்! கொஞ்ச நேரம் குறுக்கே பேசாதீங்க! நீங்க நடத்தப் போற நாடகத்திலே ராஜாவா மாணிக்கம்தான் நடிக்கணும்! மதிப்பெண் வாங்காவிட்டாலும் அவனுக்குத்தான் வெற்றி.

மாணி : அப்படி சொல்லுங்க. தாங்க் யூ அக்கா! எல்லாரும் எனக்கு 'ஜே' போடுங்க!

தாமஸ் : மாணிக்க ராஜாவுக்கு ஜே!

மாலா : மாணிக்க ராஜாவுக்கு ஜே!

காள : பட்டு அக்கா! இந்த முடிவு அநீதி, அநியாயம், அக்கிரமம்! போட்டிகளில் வெற்றி பெற்றதோ ராஜா! ராஜாவாக நடிக்க நீங்க சிபாரிசு செய்வதோ பூஜ்யம் மதிப்பெண்ணே வாங்கிய மாணிக்கம்!

ராஜா : காளமேகம், எதற்காக வீண் கோபம்! மாணிக்கமே ராஜாவாக நடிக்கட்டும்னு அப்பவும் சொன்னேன். இப்பவும் சொல்றேன்! யார் நடிச்சா என்ன?

பட்டு : என்ன ராஜா சொன்னே?

ராஜா : மாணிக்கமே ராஜாவா நடிக்கட்டும்னு சொல்றேன்!

பட்டு : சபாஷ் ராஜா சபாஷ்! ரகசியமா நடத்தின கடைசிப் போட்டியிலேயும் ராஜாவுக்குத்தான் வெற்றி.

தாமஸ் : போட்டியா...? இப்ப என்ன போட்டி நடந்தது?

பட்டு : புரியல்லையா உனக்கு? பதவி ஆசை யாருக்கு இருக்கோ, அவங்களால கடைசி வரைக்கும் தங்கள் கடமையைச் செய்ய முடியாது. அப்படிப்பட்ட பதவி ஆசை இவங்கள்லே யாருக்கு இருக்குன்னு கண்டுபிடிக்கத்தான் என் முடிவை மாத்திச் சொன்னேன். தான் மதிப்பெண் எதுவும் வாங்காம இருந்தும், பதவிக்காக மாணிக்கம் ஆசைப்பட்டான். ஆனா ராஜாவோ, தான் வெற்றி மதிப்பெண்கள் வாங்கியிருந்தும், தனக்குப் பதவி மேல ஆசை இல்லேங்கறதைக் காண்பிச்சுட்டான். இந்தப் போட்டிக்கான நாற்பது மதிப்பெண்களும் ராஜாவுக்குத்தான்! இந்த ராஜாவே உங்க நாடகத் துக்கும் ராஜா!

(கைதட்டல்)

காள : ஆஹா, அற்புதமான போட்டி! புத்திகூர்மை, நல்ல கொள்கை, பதவிக்கான சரியான நோக்கம் இத்தனையும் யாருக்கு இருக்குங்கறதைக் கண்டுபிடிச்சு, தராசு போல இருந்து எங்கள் ராஜாவையே ராஜாவாக்கின பட்டு அக்கா அவர்களே, நீங்கள் வாழ்க! வளர்க!

ராஜா : மாணிக்கம் ஏன் தலை குனிஞ்சுட்டே? பரவாயில்லை நீயே ராஜாவா நடி!

மாணி : வேண்டாம் ராஜா! எந்தப் பதவிக்கும் தகுதி இருக்கு. அந்தத் தகுதியில்லாம, பதவிக்கு ஆசைப்பட்டா, அந்தப் பதவிக்கான பணிகளைச் சரியா செய்ய முடியாதுங்கற பொன்மொழியை நேத்து ஒரு புத்தகத்திலே படிச்சேன்! இப்போ நேரிலே தெரிஞ்சுக்கிட்டேன்! உனக்கு என் வாழ்த்துகள்!

காள : கன்கிராஜுலேஷன்ஸ்!

மாணி : ஐயோ, காளமேகமே இங்கிலீஷ்ல பேசிட்டார்!

(சிரிப்பொலி)

"பாம்பு புற்று அருகே பிள்ளையார் சிலையை வைத்தது தப்பா போச்சா... ஏன்...?"

"பாம்புக்கு வைக்கும் பாலையெல்லாம் பிள்ளையார் எடுத்து குடிச்சிடறாராம்."

— இரா. அ. தென்றல் நிலவன்



தேரை தீங்கு விளைவிக்குமா?

ரேவதி



நம்பி வாழை மரத்தில் கால்வைத்தான்.

"ஜாக்கிரதை அண்ணா. வழுக்கப் போகிறது. கீழே, மரத்தைச் சுத்தித் தண்ணி. மண்ணு கொள கொளன்னு இருக்கு" என்றாள் திவ்யா.

காலை அகட்டி வைத்து, சறுக்கி விழுந்து விடாமல் உறுதியாக நின்று கொண்ட நம்பி, "கத்தியைக் கொடு" என்று கையை நீட்டினான். திவ்யா கத்தியைக் கொடுத்தாள்.

அம்மா, பூதொடுக்க நார் கேட்டாள். அதற்காகவே அண்ணனும் தங்கையும் தோட்டத்திற்கு வந்திருந்தனர். திவ்யா கொடுத்த கத்தியால், வாழை மரத்தில் கீழ்ப் பட்டையில் காய்ந்து தொங்கிய வாழை நாரை வெட்டினான் நம்பி. வெட்டும் போது மட்டை விரிந்தது. அதிலிருந்து 'பொல பொல'வென்று குட்டித் தவளைகள் துள்ளிக் குதித்தன! இரண்டொன்று திவ்யாவின் மேலும் விழுந்தன!

"அண்ணா, தவளைக் குட்டிங்க!" என்று குரல் கொடுத்தாள் திவ்யா.

"ஆமாம். வாழைப் பட்டைக்குள்ள நிறைய தவளைக் குட்டிங்க இருக்கு!" என்று நாரைக் கொடுத்தான் நம்பி.

"தத்தித் தத்தி நடந்து செல்லும் தவளையாரே!" என்று பாடிக் கொண்டே உள்ளே ஓடினாள் திவ்யா.

காலில் அப்பிய மண்ணைக் கழுவிக் கொள்ள நம்பி கிணற்றுக்குப் போனான். காலைக் கழுவிக் கொண்டு அவன் திரும்பிய போது, கிணற்றை ஒட்டியிருந்த தாழ்வாரச் சுவரில் ஏராளமாகக் குட்டித் தவளைகள் ஒட்டியிருந்தன! கூரைக்கு அருகே கூட அத்தனை உயரத்தில் ஒன்று! திவ்யா, நாரைத் தண்ணீரில் நனைக்க வந்தவள், கூரை உயரத்திற்குப் போய்விட்ட குட்டித் தவளையை அதிசயத்துடன் பார்த்தான்.

"கூரை நோக்கி உயரே போகும்
தவளையாரே!"
குட்டை குளம் அலுத்துப் போச்சா
தவளையாரே!"

என்று உடனே பாட்டுக் கிளம்பியது.

திவ்யாவின் பாட்டுச் சத்தத்தைக் கேட்டு அங்கே வந்த அப்பா, சுற்றுமுற்றும் பார்த்தார்.

"என்னப்பா பார்க்க

றீங்க?"

"ஏம்மா, நீ தவளையைப் பத்திப் பாடினியே...? தவளை எங்கேன்னு பார்க்கறேன்?"

"இதோ இந்த சுவர் முழுக்கக் குட்டித் தவளையார் இருக்காரே! அதோ ஒரு குட்டித் தவளையார் சுவர் உச்சிக்குப் போயிட்டாரே?"

"வாழை மரத்துல, பட்டைக்குள்ள கூட நிறைய குட்டித் தவளைகள் இருக்குப்பா."

"இதெல்லாம் தவளையே இல்லே! எல்லாம் தேரைகள்" என்றார் அப்பா.

"என்னப்பா இது! பார்த்தா குட்டித் தவளைங்க மாதிரியே இருக்கே?"

"தவளை மாதிரியே குதிச்சுது அப்பா!"

"தேரையும் கூடத் தவளை இனம்தான். ஆனால் தவளை தனிப் பிரிவு. தேரை தனிப் பிரிவு. இரண்டுமே பார்க்க ஒரே மாதிரித்தான் இருக்கும். ஆனால் நிறைய வித்தியாசம் இருக்கு, தவளை தத்தும். தேரை துள்ளிக் குதிக்கும்; பாயும். தவளைகள் நீர் நிலைகளில் அதிகம் இருக்கும். தேரைகள் சதுசதுப்பான வாழைத் தோட்டங்களில் அதிகம் இருக்கும். தவளை இரை பிடிக்க நாக்கை அதிகம் பயன்படுத்தும். தேரை முன் கைகளைப் பயன்படுத்தும். தவளை மழைக் காலத்தில் 'கொடகொட' சத்தம் போடும். தேரை போடாது. தேரை நூற்றுக்கணக்கில் முட்டை இடும். தவளை இந்த அளவுக்கு இடாது. தவளைக்கு துருத்திய கண்கள். தேரைக்கு ஒளிவீசும் கண்கள்."



"என்னால் நம்பவே முடியலேப்பா! நீங்க சொல்லலை என்றால் இவைகளைத் தவளைகள் என்றுதான் நாங்கள் எண்ணிக் கொண்டிருப்போம்" என்றாள் திவ்யா.

"ஆமாம்பா, பல்லி மாதிரி சுவத்திலே ஒட்டிக்குதே? இது எப்படி?"

"சுவர் என்ன? தேரைகள் மரத்திலேயே கூட வாழும். இதற்கு ஏற்றபடி இவைகளின் விரல் நுனியில் உறிஞ்சிகள் (ADHESIVE DISCS) இருக்கும். இவைகளின் உதவியால் இவை மரமேறும்; சுவர்களிலும் ஏறும்."

"அப்பா, இவை எங்கே முட்டை இடும்?"

"மரங்களிலும், நீர் நிலைகளுக்கு அருகேயும் வசித்தாலும் இவை முட்டை இடுவது நீர் நிலைகளில் தான். தவளை களைப் போலவே கொழகொழப்பான ஜெல்லிகளில் முட்டைகளிட்டு விடும். தவளைகளைப் போலவே தலைப் பிரட்டையாகி கடைசியில் தேரைகளாக மாறும்."

"கல்லுக்குள் தேரை இருக்கும் என்பார்களே? அது உண்மைதானா?"

"தேரைகள் நீர்வளம் மிக்க பகுதிகளில் இடுக்குகளில், மரங்களில், வாழைத் தோட்டங்களில் வாழும். வறண்ட இடங்களில் இவை உயிர் வாழ முடியாது. அதனால் பாறைகளில் இவை உயிர் வாழும் என்பதை அறிவியல் அடிப்



படையில் ஏற்க முடியாது."

"தேரை ஓடியகாய் என்று அம்மா, அடிக்கடி கூறுவாளே? அது உண்மை தானா?"

"தென்னையில் குருத்து விடும் பருவத்தில், தேங்காயின் பருப்பாகும் பகுதியை வண்டுகள் தின்று விடும். அதனால் தேங்காயின் பருப்புகள் வளர்ச்சி குன்றி இருக்கும். இதைத்தான் தேரை ஓடியகாய் என்பார்கள். உண்மையில் இதற்கும் தேரைக்கும் சம்பந்தமே இல்லை. இதற்குக் காரணம் வண்டுகளே!"

"குழந்தைகள்மேல் தேரை விழுந்து விட்டால் அவை வளர்ச்சி குன்றி மெலிந்து விடும் என்கிறார்களே?" என்று கேட்டுக் கொண்டே வந்தாள் அம்மா.

"குழந்தைகளின் உடல் மெலிவுக்குத் தேரைக்கும் சம்பந்தமே இல்லை. தேரையின் உடலில் மேல் தோலில் சுரப்பிகள் உண்டு. இவை, பட்டாலே அரிக்கும். நீரைச் சுரக்கும். மெல்லிய தோல் படைத்த குழந்தைகளின் மேல் தேரை விழுந்தால், அதிகமாகப் போனால் தோல் அரிப்பு நோய் வரலாம். அவ்வளவே. ஆனால் தேரை அத்தனை எளிதில் விழுந்து விடாது. தேரைகளைப் பகைவர்களிடமிருந்து காப்பவை இந்தச் சுரப்பிகளே."

"தேரைகளின் இரை என்ன?"

"தவளைகளைப் போலவே இவை புழு, பூச்சிகள் எல்லாவற்றையும் பிடித்துத் தின்னும். அடிக்கடி சட்டை உரித்து, அதை உருட்டித்தானே தின்று விடும்" என்றார் அப்பா.

"அருவருப்பான தேரையால் யாருக்கு

அறிவியல் உண்மைகள்

- தேரைகள் தவளை இனமே. ஆனால், பாலிப்பிடேட்டிஸ் மாக்குலேட்டிஸ் பிரிவு.
- தவளையைப் போலவே முட்டை இடல். தலைப்பிரட்டையாகி கடைசியில் தேரை.
- அதிகம் தத்தாது. ஆனால் துள்ளும்.
- மரங்களில், வாழைத் தோட்டங்களில் அதிகம் வாழும்.
- தேரை ஒடிய தேங்காய்க்கும் தேரைக்கும் தொடர்பு இல்லை.
- விஷத்தன்மை இல்லாதது. தொந்திரவு செய்தால் தோல் சுரப்பிகள் வழியாக அமிலம் கலந்த நீரைப் பாய்ச்சி, அரிக்க வைக்கும்.
- மனிதனுக்கு, குறிப்பாக விவசாயிகளின் நண்பன் தேரை.
- குளிர்கால உறக்கம் உண்டு. சராசரி 30 ஆண்டுகள் வாழும்.
- நூற்றுக்கணக்கில் முட்டை இடும்.


என்ன பயன்?" என்று முகத்தைச் சுளித்தாள் அம்மா.

"தேரைகள் காண அருவருப்பாக இருந்தாலும் விவசாயிகளுக்கு உண்மையான நண்பன். பயிர், செடிகளுக்குத் தீங்கு விளைவிக்கும் பூச்சி புழுக்களை இவை இரவில் இரையாக்கித் தின்று மனிதனுக்கு நன்மைபுரிகின்றன. தினமும் சுமார் நூறு பூச்சிகளையாவது ஒவ்வொரு தேரையும் அழிக்கின்றன. நாம் பயப்படுவது போல் தேரை தீங்கு இழைக்கக்கூடியவை அல்ல" என்றார் அப்பா.

"தேரை மாமா வாருங்க. எங்கள்
தோட்டம் செழிக்க வாழுங்க"

என்று பாடினாள் திவ்யா. எல்லோரும் சிரித்தனர்.

தலைவன் வேண்டும்



பாலை வனத்தில் வறண்ட நிலத்தில்
பருகத் தண்ணீர் இன்றியும்
நாளும் துணிந்து சண்டை போட்ட
மங்கோ லியரைத் தெரியுமா?

மாதக் கணக்காய் சண்டை தொடர
குதிரை மீதே தூங்கியே
சாத னைகள் செய்து சென்ற
சரித்தி ரத்தைக் கேளுங்கள்.

சிதறிக் கிடந்த மங்கோ லியரை
செங்கிஸ் கானும் தலைவனாய்
இதமாய்ச் சேர்த்து பொங்கிக் கிளம்ப
ஏற்ற வழியைக் கண்டனன்.

தலைவன் வேண்டும் அணிகள் என்றும்
தக்க வழியில் செல்லவே
தலைவன் உண்டு விளையாட் டணிக்கும்
தலைவன் உண்டு பள்ளிக்கும்.

தலைவ னின்றி எந்த நாடும்
தக்க வழியில் செல்லுமோ
தலைவன் காட்டும் வழியி னால்தான்
தகுதி நாட்டில் உயருமே!

— செல்ல கணபதி



குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா
நினைவுச் சிறுகதைப் போட்டி - 1996
பரிசு
ரூ. 1000/-

சிறுவர் இலக்கியம் செழிக்கத் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்ட, கோகுலத்தின் முதல் கௌரவ ஆசிரியர் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் நினைவாக இந்த ஆண்டும் இந்தச் சிறுவர் சிறுகதைப் போட்டியை அறிவிப்பதில் கோகுலம் பெருமை கொள்கிறது.

1. இந்தப் போட்டியில் பள்ளி மாணவ மாணவியர் (இவ்வாண்டு (1996) +2 எழுதியவர்கள் உட்பட) மட்டுமே கலந்து கொள்ளலாம். ஆசிரியர் அல்லது பெற்றோரின் கையொப்பமிட்ட சான்று இணைக்கப்பட வேண்டும்.

2. சிறுகதைகள் சிறுவர்களுக்கானதாக இருக்க வேண்டும். நகைச்சுவை, துப்பறிதல், சமூகம், வரலாறு, அறிவியல் என்று எதைப் பற்றியதாக வேண்டுமானாலும் இருக்கலாம். சொந்தக் கற்பனை என்ற உறுதிமொழியுடன் அனுப்ப வேண்டும். கோகுலத்தில், கதைகள் 3 முதல் 4 பக்கங்களுக்கு மேற்படாமல் அமைதல் வேண்டும்.

3. வெள்ளைத் தாளில் ஒரு பக்கம் மட்டுமே எழுதலாம். கையெழுத்து தெளிவாகப் புரியும்படி இருக்க வேண்டும். தட்டச்சு செய்தும் அனுப்பலாம். ஆனாலும் கட்டாயமில்லை.

4. பரிசு பெறாத, பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகளை ஒட்டிய உறையைக் கதைகளுடனேயே இணைக்க வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை. இது குறித்து எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்பட மாட்டாது.

5. இதில் கலந்து கொள்ளக் கட்டணம் ஏதும் இல்லை. ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால், ஒவ்வொன்றுக்கும் தனித் தனியாக உறுதிமொழி இருக்க வேண்டும்.

6. முதல் பரிசு ரூ. 300/- (ஒரு கதைக்கு) இரண்டாவது பரிசு ரூ. 200/- வீதம் இரண்டு கதைகளுக்கு. மூன்றாவது பரிசு ரூ. 100/- வீதம் மூன்று கதைகளுக்கு. ஆக மொத்தம் ரூ. 1000 பரிசாக வழங்கப்படும்.

7. தவிர, பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு சிறுகதையும் ரூபாய் ஐம்பது பரிசாகப் பெறும். கதைகளை முதல் முறையாக வெளியிடும் உரிமை கோகுலத்திற்கே உண்டு. பிறகு இதன் உரிமை முழுவதும் ஆசிரியருக்கே.

8. **முடிவு தேதி 30.6.96.** இதற்கு மேல் வருபவை பரிசீலனைக்கு ஏற்கப்பட மாட்டா. தபாலில் ஏற்படும் தாமதத்திற்கு கோகுலம் பொறுப்பேற்காது. நடுவர் குழு பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

9. அயல்நாட்டில் உள்ளவர்கள், இந்தியாவில் நண்பர் அல்லது உறவினர் முகவரியைக் கட்டாயம் தரவேண்டும்.

10. கதைகளை, "ஆசிரியர் கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097" என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். உறையின் மேல் "அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி" என்று அவசியம் குறிப்பிட வேண்டும்.

11. போட்டி குறித்து எழும் எவ்விதப் பிரச்னைகளுக்கும், சந்தேகங்களுக்கும் கோகுலம் ஆசிரியர் எடுக்கும் தீர்ப்பே முடிவானதாகும்.

முத்து ஆனந்தமாகத் தூங்கிக் கொண்டிருந்தான்.

"முத்து முத்து" என்று கூறிக் கொண்டே தன் பையனை எழுப்பினார் அப்பா.

"என்னப்பா அதுக்குள்ளே எழுப் பறீங்க?"

"ஏய், மணி இப்ப ஏழரை! காலையிலே எந்திருச்சி படிக்கணும். அப்பத்தான் நினைவில் நிற்கும்."

"போங்க அப்பா. தேர்வு அன்னைக்குத்தான் நான் எல்லாத்தையும் படிப்பேன். எந்தத் தேர்விலாவது நான் எண்பதுக்குக் குறைஞ்சு வாங்கியிருக்கேனா?"

"எப்படித்தான் பரீட்சை எழுதி மார்க் வாங்குவாயோ எனக்கு ஒன்றும் தெரியலை!" என்று விரக்தியுடன் கூறிவிட்டுச் சென்றார் அப்பா.

முத்து எப்பொழுதும் தேர்வு அன்றைக்கு மட்டும் படித்து விட்டுத் தேர்வை எழுதுவான்.



சொத்தைங்க!

இதை அவனுடைய தந்தை பலமுறை கண்டித்துள்ளார். வகுப்பில் நடக்கும் பாடங்களை நன்றாகக் கவனித்து மனத்தில் பதியவைத்துக் கொள்வான். ஆனால் அன்றைய பாடத்தை மட்டும் அன்றே படிக்க மாட்டான். ஆசிரியரிடம் பலமுறை உதைகூட வாங்கி விட்டான். ஆனாலும் திருந்தவில்லை!

பெற்றோர்களுக்கு முத்து ஒரே பிள்ளை. அதனால் செல்லம் கொடுத்து வளர்த்தாள் அவனுடைய தாய். அதன் பலன்தான் இது.

ஒருநாள் முத்து டீ.வி.யில் கிரிக்கெட் பார்த்துக் கொண்டு இருந்தான். இந்திய அணி விளையாடிக் கொண்டு இருந்தது. 10 பந்தில் 28 ரன்கள் எடுக்க வேண்டியிருந்தது.

"எல்லாம் சொத்தைங்க! ஆரம்பத்தில் இருந்து பந்தை வீணடிக்காமல் விளையாடி இருந்தால், இப்போது எளிதாக ரன் எடுத்து ஜெயிச்சிருக்கலாமே?" என்று தன்னை மறந்து கூறினான் முத்து.



முத்துவின் தந்தை நாளிதழைப் படித்துக் கொண்டு இருந்தார். சட்டென்று அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. முத்து கூறியதைக் கொண்டே முத்துவைத் திருத்த அவர் வழி கண்டுபிடித்தார்.

"என்னவோ கூறினாயே முத்து? என்ன?" என்று கேட்டார் அப்பா.

"ஆரம்பத்தில் நிறைய பந்துகளை வீணாக்கி விட்டது இந்திய அணி. அதனால் கடைசியில் ரன்கள் எடுக்க முடியாம திண்டாடறாங்க" என்று கூறினான் முத்து.

"எல்லாரும் உன்னை மாதிரிப் பசங்களா இருந்து பெரியவங்களானவங்கதானே? உன் புத்திதானே இருக்கும்?" என்றார் அப்பா.

"என்னப்பா சொல்கிறீர்கள்?"

"தினந்தோறும் படிக்காமல பரீட்சை அன்றைக்கு மட்டும் படிக்கிறாயே! தினந்தோறும் அன்றைய பாடத்தைப் படித்து விட்டு தேர்வு அன்று ஒருமுறை படித்தால் போதும் என்று நீ நினைப்பதைப் போலதான் இவங்களும் கடைசியில் மொத்தமா ரன் எடுக்கலாம்னு நினைக்கிறவங்களா இருப்பாங்க."

முத்துவுக்குத் தன் தவறு புரிந்தது. இப்பொழுதெல்லாம் அன்றையப் பாடங்களை முத்து அன்றே படித்து விடுகிறான்!

- தஞ்சை. எம். சக்திவேல்



கேளுங்கள் சொல்லப்படும்

* கர்நாடக இசைக்கச்சேரிகளில் பக்க வாத்தியங்களுள் ஒன்றாக வாசிக்கப் படும் 'மோர்சிங்' இந்திய இசைக்கருவி தானா? இதன் தாயகம் எது?

-மழ.பொன்னுச்சாமி,
சாத்தூர் பேட்டை.



'மோர்சிங்' என்பது 'மூர்ச்சிங்' என்ற பெயரின் திரிந்த வடிவம். மூச்சை இழுத்துவிட்டு வாசிக்கும் இசைக்கருவி என்பது பொருள். இதன் தாயகம் அஸ்ஸாம் மாநிலம். அங்கே உள்ள நாடோடி இனத்தார் மூங்கிலை 'மோர்சிங்' வடிவில் பிளந்து வாசித்தனர். அங்கே இதன் பெயர் ககனா. சிவபெருமானின் திரிசூல வடிவில் ஆனது இது. இரும்பில் செய்யப் பட்டு "முக சிங்க்" என்ற பெயருடன் இசைவாணர்களால் வடக்கே பயன் படுத்தப்பட்டது. சூர்தாஸ், சதுர்புஜ தாஸ் பாடல்கள் தொடக்கத்தில் பாடப் பெற்றபோது, இதுதான் ஒரே பக்கவாத்தி யமாக இருந்தது. இது வங்காளத்தில் பரவியபோது இதற்கு இடப்பட்ட காரணப் பெயரே 'மூர்ச்சிங்'. சரோபோஜி மன்னர் டில்லிக்குச் சென்றபோது, அங்கிருந்து "மூர்ச்சிங்"கை தமிழ்நாட்டில் தஞ்சைக்குக் கொண்டு வந்தார். கச்சேரி களில் இடம் பிடித்துக் கொண்டது 18-ஆம் நூற்றாண்டில்தான்!

* உலகத்தின் மிக உயரமான நீர் வீழ்ச்சியான ஏஞ்ஜில் ஃபால்ஸ் (ANGEL FALLS) க்கு இந்தப் பெயர் வர என்ன காரணம்?

-சு.லலிதா, குடந்தை

ஏஞ்ஜில் நீர்வீழ்ச்சி, கிழக்குவெனி சூலாவின் கிரேன்சபானா அடர்ந்த மலைப்பகுதியில் அமைந்துள்ளது. இது விழும் மலைக்கு பிசாசு மலை.(AUYAN-TEPUI) என்று பெயர். இது, புகழ் வாய்ந்த நயகரா




நீர்வீழ்ச்சியைப் போல் பதினைந்து மடங்கு உயரம் உடையது! இந்த நீர் வீழ்ச்சி உள்ள இடத்தைக் கண்டுபிடித்த பெருமைக்கு உரியவர் ஜேம்ஸ் ஏஞ்சல்ஸ் என்பவர். ஆண்டு 1935- அதனால், இவர் பெயரே இதற்குச் சூட்டப்பட்டது.

இந்த ஏஞ்சில் நீர்வீழ்ச்சியின் முழு வடிவத்தையும் தரையில் இருந்து காண முடியாது! வானில் பறந்துதான் காண முடியும்.

• நமது நாட்டில் இப்பொழுது பிரபலமாக உள்ள தலைமை தேர்தல் கமிஷனர் டி.என்.சேஷன் அவர்கள் எத்தனை ஆண்டுகளாக இந்தப் பதவியில் இருக்கிறார். இவர்தான் முதல் தலைமைத் தேர்தல் கமிஷனரா?

-வா. பாமணி, விருதுநகர்



டி.என்.சேஷன் அவர்கள் 1990-ஆம் ஆண்டு முதல் தலைமைத் தேர்தல் கமிஷனராக இருந்து வருகிறார். இந்தியாவின் முதல் தலைமை தேர்தல் கமிஷனர் சேஷன் அல்ல. சுகுமார்சென் என்பவர் இவர் 1950 முதல் 1958 வரை பதவியில் இருந்தார்.

• உலகில் அதிக மழை பெய்யும் ஊர் இந்தியாவில் உள்ள சிரபுஞ்சிதானே?

-மு.தேவராஜ், கோவை

உலகில் அதிக மழை பெய்யும் இடம் ஒரு காலத்தில் சிரபுஞ்சியாகத்தான் இருந்தது. ஆனால் மழை வளம் பெருக்கும் காடுகள் அதிக அளவில் அதிகப்பட்டதன் காரணமாக இது மாறிவிட்டது. ஆனால் இப்போதும்கூட இந்தச் சிறப்பு இந்தியாவுக்குத்தான். மேகாலயா மாநிலத்தில்




உள்ள மௌசின்ராம் (MAWSYNRAM) என்ற இடமே உலகில் அதிக அளவு மழை பெய்யும் இடம் (ஆண்டுக்கு 11,873 மி.மீ.) இது சிரபுஞ்சியில் இருந்து 18 கி.மீ தொலைவில் உள்ளது.

• அகில இந்திய ரேடியோ, ஆகாசவாணி என்று அழைக்கப்படுவதற்கு முன் எப்படி அழைக்கப்பட்டது?

-வெ.சின்னையன்,
அண்ணாமலை நகர்.


"ஆல் இண்டியா ரேடியோ" என்றே அழைக்கப்பட்டது. இதுகூட 1936-ஆம் ஆண்டில் இருந்துதான். அதற்கு முன் இண்டியன் புரோட்காஸ்டிங் சர்வீஸ் (IBS)



என்றே அழைக்கப்பட்டது. ஆகாஷ்வாணி ஆனது 1957ல்தான்.

• தமிழ்நாட்டில் முதல் தனியார் ஒளி

சேரநம்பி




பரப்பு சானல் எது? இது எங்கிருந்து ஒளிபரப்பப்படுகிறது?

- மா.இராஜகோபால்,திருவாடுதுறை

இந்தப் பெருமைக்கு உரியது சன் டி.வி.யே ஆகும். இதுவே தமிழ்நாட்டில் மட்டுமல்ல, தென்னிந்தியாவின் முதல் தனியார் ஒளிபரப்பு சேனல் ஆகும். இது ஒளிபரப்பைத் தொடங்கிய ஆண்டு 1993 ஏப்ரல். இது தனது நிகழ்ச்சிகளை ரிம்சாட் ஜி.எஸ்.செயற்கைக்கோள் வாயிலாக, பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் இருந்து ஒளிபரப்புகிறது.

• சரக்கு ரயில்கள் (GOODS) எப்பொழுது முதல் விடப்படுகின்றன?

-வி.மம்முதாஸ், சரவணகிரி



முதன்முதலில் நீராவியால் இயங்கும் ரயில்கள் விடப்பட்டதே சரக்குகளை ஏற்றிச் செல்லத்தான். 1825 -ஆம் ஆண்டில்தான், பயணிகளை ஏற்றிச் செல்ல ரயில்கள் பயன்படுத்தப் பட்டன. எனவே சரக்கு ரயில்தான் முதலில். பிறகே பயண ரயில்!

• பிறந்தநாளன்று பாடப்படும் HAPPY BIRTH DAY TO YOU என்ற பிரபலமான பாடல், யாரால் பாடப் பட்டது?

கே.மாணிக்கம், தேவராயன்பேட்டை


உலகப் புகழ் பெற்ற இந்தப் பாடலை எழுதியவர்கள் MILDRED & PATTY HILL என்ற



சகோதரிகள். ஆண்டு 1893. ஆனால் முதன்முதலில் இதை 'GOOD MORNING TO YOU ' என்றுதான் பாடியிருந்தார்கள். "ஹேப்பி பர்த் டேடு யூ" என்று இதன் வரிகள் மாற்றப்பட்ட பிறகே இது உலகம் முழுவதும் பிரபலமானது.


• உரக்கப் பேசுவதற்கு ஏற்படும் பயம், தடுப்பு ஊசி போட்டுக் கொள்ள ஏற்படும் பயம், மழையைக் கண்டால் ஏற்படும் பயம் ஆகியவைகளைக் குறிப்பிடக் கூடத் தனிப்பெயர்கள் இருக்கிறதாமே! உண்மைதானா?

-மு.இஸ்பானுல்லா, வாணியம்பாடி



உண்மைதான் OMBROPHOBIA என்பது மழையைக் கண்டால் ஏற்படும் பயத்திற்குப் பெயர். VACCINOPHOBIA என்பது தடுப்பு ஊசி போட்டுக்கொள்ள ஏற்படும் பயத்திற்குப் பெயர். LALIOPHOBIA என்பது உரக்கப் பேச ஏற்படும் பயத்திற்குப் பெயர். ஆனால் இவை மருத்துவர்களுக்கு மட்டுமே அறிமுகமானவை. பொது மக்களுக்கு அல்ல.

• இலக்கியத்திற்கான நோபல் பரிசு இதுவரை வழங்கப்படாத ஆண்டுகள் உண்டா?-து.பெரியசாமி, விலைந்துக்கடவு



1914, 1918, 1935, 1940, 1941, 1942, 1943 ஆகிய ஏழு ஆண்டுகளில் இலக்கியத்திற்கான நோபல் பரிசு வழங்கப்படவில்லை!

• சட்டைப் பையில் அடக்கிக் கொள்ளும் பாக்கெட் கால்குலேட்டரை யார் கண்டுபிடித்தார்கள்? எந்த ஆண்டு?

-மா. ஆதித்தன் மாயூரம்

பாக்கெட் கால்குலேட்டர் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு 1971. பெருமைக்கு உரியவர்கள் JACK ST. CLAIR KILBY, JAMES VAN TASSELL, JERRY D.MERRYMAN ஆகிய மூவர்.





• என் தம்பி ரமேஷ், பட்டாசு வெடியால் இரு காதுகளிலும் கேட்கும் சக்தியை இழந்தவன்., மனம் ஒடிந்த நிலையில் இருக்கிறான். அவனுக்கு நம்பிக்கையூட்ட ஏதாவது கூறுங்களேன்?

-க.வீரராகவன், திருவள்ளூர்

ரமேஷ், உன் வயது என்ன என்பதை உங்கள் அண்ணன் குறிப்பிடவில்லை. இருந்தாலும் இதே என் அறிவுரை. ஐந்து புலன்களும் முழுமையாக இயங்கினால் தான் மனிதனால் சாதனை புரிய முடியும் என்று எண்ணாதே. உலகப் புகழ் பெற்ற இசைமேதை பீதாவோன் காது கேட்காதவர் என்பது உனக்குத் தெரியுமா? சிம்போனி இசையைத் தந்த பெருமையும் இவருக்கு உண்டு. காது கேட்காவிட்டால் என்ன? மற்ற நான்கு புலன்களை வைத்துக் கொண்டு நீயும் உலக சாதனை புரியலாம். மனதில் நம்பிக்கையை வளர்த்துக் கொள்.


• தபால்முறை அறிமுகப்படுத்திய உடனேயே பணவிடை (MONEY ORDER) முறையும் செயல்பட்டதா?

-கோ. ரமாதேவி, பாலக்காடு

இல்லை. மணியார்டர் முறையில் பணம் பட்டுவாடா செய்யும் முறையை தனியார் நிறுவனம்தான் முதலில் செயல் படுத்தியது. இதன் பெயர் மணி செண்டிங் எக்ஸ்பிரஸ். ஆண்டு 1882.

• இந்திய மொழிகளில் சிறுகதை இலக்கியம் எப்பொழுது தோன்றியது? தமிழில் முதல் சிறுகதையை எழுதியவர் யார்? - ஜெ. சி. ஆனந்தன், ஈரோடு.

இந்திய மொழிகளில் சிறுகதை இலக்கியம் தோன்றியது முதன்முதலில் வாங்காளி மொழியில்தான். தாகூர், பக்கிம் சந்தர் போன்றவர்கள் இதை வளர்த்தனர். தமிழில் முதல் சிறுகதையை எழுதிய பெருமைக்கு உரியவர் வ.வே.சு



அய்யர். இவரே தமிழ்ச் சிறுகதை உலகின் தந்தை என்று புகழப் படுகிறார்.

அதிக அளவில் ஆஸ்கார் பரிசுகளைப் பெற்ற படம் எது? காந்தி தானே?

-மா. அடைக்கலராஜ்
பாளையம்கோட்டை

காந்தி இரண்டு ஆஸ்கார் பரிசுகளைத்



தான் பெற்றது. பென்ஹர் என்ற படமே 11 ஆஸ்கார் பரிசுகளைப் பெற்றது. இந்த சாதனை இதுவரை முறியடிக்கப்பட வில்லை.

**** முட்டைக்கோஸின் தாயகம் எது?***

-து. தண்ணீர்மலை, மங்கலம்


ஐரோப்பாதான் முட்டைக்கோஸின்




தாயகம். குறிப்பாகக் கூற எந்த நாடும் இல்லை. எல்லா நாடுகளிலும் இது காணப்படுகிறது. இலியட் காவியத்தில் ஹோமர் இதைப் பற்றிக் குறிப்பிடுகிறார் ஹோமரின் காலம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு.

****நோபல் பரிசை ஒவ்வொரு ஆண்டும் ஏன் டிசம்பர் மாதத்தில் வழங்குகிறார்கள்: - கு.இராம்கோபால், திருச்சி-3.***

நோபல் பரிசை ஏற்படுத்திய ஆல்பிரட் நோபல் மறைந்தது டிசம்பர் 10-ஆம் நாள். எனவே அன்று அவரது நினைவாக இது வழங்கப்படுகிறது.



அந்த இரண்டு மணி!



மற்றவர் கஷ்டம் என்ன என்பது தெரியாதவன் ஸ்ரீகாந்த். கொஞ்சம் பண வசதி படைத்தவர் வீட்டுப் பையன் வேறு.

கண் தெரியாதவர், ஊனமானவர், பேச முடியாதவர் ஆகியோரின் கஷ்டம் என்ன என்பது அவனுக்குத் தெரியாது. ஏன், உணர பிடிவாதமாக மறுப்பவன் என்று கூடக் கூறலாம்!

தன் பாட்டி சொன்ன புராணக் கதை ஒன்றை நினைவில் வைத்துக் கொண்டு, "இவர்களெல்லாம் போன ஜென்மத்தில் செய்த பாவம்தான் இதெல்லாம். கண் தெரியவில்லை, பேச வரவில்லை, எல்லாம் போன ஜென்மத்துப் பாவம்தான்" என்பான் ஸ்ரீகாந்த்.

அவனைச் சுற்றி இருந்த நண்பர்கள், அவனுடன் அதே வகுப்புப் படிக்கும் தோழர்கள். அவனிடம் உண்மையை எடுத்துச் சொல்லப் பயப்படுவார்கள். காரணம், ஸ்ரீகாந்த் கொஞ்சம் கோபக்காரனும் கூட.

ஒருநாள் பள்ளிக்குச் செல்ல நண்பர்களுடன் பஸ் நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தான் ஸ்ரீகாந்த்.

பஸ் வந்தபாடில்லை.

அப்போது இரண்டு கைகளும் சூம்பிப் போய் செயல்பட முடியாத நிலையில் இருந்த பிச்சைக்காரன் ஒருவன், வாயில் அலுமினியத் தட்டு ஒன்றைக் கௌவிக் கொண்டு பிச்சை கேட்டபடி வந்தான்.

சிலர் காசு போட்டனர். சிலர் போடவில்லை. பிச்சைக்காரனின் செய்கை ஸ்ரீகாந்திற்கு சிரிப்பை வர வழைத்தது.

"இங்க பார்டா ஸ்ரீதர் இந்தப் பிச்சைக்காரனை! எப்படி தட்டை நாய் மாதிரி வாயில் கௌவிக்கிட்டு வரான்!" என 'இடி இடி' யென்று சிரித்தான்.

ஸ்ரீதருக்கு தர்மசங்கடமாகப் போயிற்று. பிறர் துன்பத்தைக் கண்டு மகிழ்ச்சி எக்காளமிடும் இவனுக்கு எப்படிப்பட்ட கல் மனம் இருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

"ஸ்ரீகாந்த், எந்தக் கஷ்டத்தையும் தானே அனுபவித்தால் தான் அதில் உள்ள துன்பம் எவ்வளவு என்பது தெரியும்" என்றான் ஸ்ரீதர். ஸ்ரீகாந்த் அதைக் கூடக் காதில் வாங்கவில்லை.

பிச்சைக்காரன் ஸ்ரீகாந்த் அருகில் வந்து பிச்சை கேட்டான்.

"போ.. போ.. போன ஜென்மத்திலே என்ன பாவம் செய்தாயோ, இப்போ இந்த மாதிரிக் கஷ்டப்படறே?" என்று கூறி விட்டு அப்போது வந்த பஸ்ஸில் ஏறிப் பள்ளி சென்றான் ஸ்ரீகாந்த்.

பஸ் ஏறும் அவசரத்திலும் ஸ்ரீதர் தன் பையில் இருந்து இருபத்தைந்து பைசா நாணயத்தை எடுத்துப் பிச்சைக் காரனுக்குப் போடத் தவறவில்லை. பிச்சைக்காரன் நன்றி மேலிட அவனைப் பார்த்து விட்டு நகர்ந்தான்.

மறுநாள்.

பள்ளி விடுமுறை...

ஸ்ரீகாந்தின் அம்மா அவனைக் கூப்பிட்டு, "ஸ்ரீகாந்த், வா வா. வந்து இரண்டு கைக்கும் மருதாணி வைத்துக் கொள். பாட்டி ஏராளமாக் கொடுத்தனுப்பியிருக்கிறாள்" என்றாள்.

"ஹையா... மருதாணியா...! அம்மா... வகை வகையா டிசைன்ல மருதாணி வைம்மா" என்றான் [illegible] மகிழ்ச்சியுடன்.

அம்மா ஸ்ரீகாந்தின் இரண்டு கைகளிலும் மருதாணி இட்டு விட்டாள்.

பி.ஆர். பார்த்தசாரதி

"அப்படியே கலைக்காமல் இரண்டு மணி நேரம் வைத்துக் கொள். நன்றாகப் பற்றி விடும்" என்றாள் அம்மா.

"சரிம்மா" என்றான் ஸ்ரீகாந்த் மகிழ்ச்சியோடு.

ஐந்து நிமிடம் ஓடியது. ஸ்ரீகாந்துக்கு முதுகை அரித்தது. சொரிந்து கொள்ளக் கையைக் கொண்டு போனான். அம்மாவின் எச்சரிக்கை ஞாபகம் வரவே, "அம்மா இங்கே வாயேன்... முதுகை அரிக்கிறது... சொரிந்து விடேன்" என்றான்.

அம்மா சொரிந்து விட்டாள். அரைமணி சென்றது.

ஸ்ரீகாந்துக்கு வயிற்றைப் பசித்தது.

"அம்மா பசிக்குதே?" என்றான்.

அம்மா சமையல் கட்டில் வேலையாக இருந்தாள்.


"ஸ்ரீகாந்த்... எனக்கு நிறைய வேலை இருக்கு.. என்னால் ஊட்டி விட முடியாது... கொஞ்ச நேரம் பசியைப் பொறுத்துக் கொள்... மருதாணியைக் கலைத்த பிறகு நீயே சாப்பிடலாம்" என்றாள் அம்மா.

ஸ்ரீகாந்துக்கு எப்போதும் பசி பொறுக்காது. அம்மாவோ வேலையாக இருக்கிறாள். நாமே சாப்பிடலாம் என்றால் மருதாணி கலைந்து விடும். இப்படி ஒரே நேரத்தில் இரண்டு கைகளிலும் மருதாணி இட்டுக் கொண்டு விட்டோமே என்று நினைத்தவன் தன்னை அறியாது காலையில் சந்தித்த இரு கைகளும் இழந்த பிச்சைக்காரனை நினைத்துப் பார்த்தான்.


"நாம் இந்த இரண்டு மணி நேரத்திற்கு மருதாணி இட்டுக் கொண்டு கை இல்லாதவன் மாதிரி கஷ்டப்படுகிறோமே... நிரந்தரமாகவே இரண்டு கைகளும் இல்லாத அந்தப் பிச்சைக்காரன் குளிக்க, பல் துலக்க, சாப்பிட, எல்லாவற்றையும் விட வயிற்றுப் பாட்டை கவனிக்க எத்தனை கஷ்டப்படுவான்? அவனைப் போய் மனிதத் தன்மையே இல்லாமல் எப்படிக் கேலி செய்தோம்!" என்பதை எண்ணிய போது ஸ்ரீகாந்த் மனதுக்குள் வெட்கினான்.

இப்பொழுதெல்லாம் துன்பப்படுகிறவர்களைக் கண்டால் "என்ன பாவம் பண்ணினானோ!" என்று ஸ்ரீகாந்த் ஒதுங்கிக் கொள்வதில்லை. இரக்கத்துடன் உதவி செய்கிறான்!






எங்கள் ஊரில் நடந்தது!



நாங்கள் டிரைவரா...?

வீட்டில் அனைவரும் பேருந்தில் ஊருக்குச் சென்று கொண்டிருந்தோம். பேருந்தில் நிறையக் கூட்டம். முன்பக்கம் டிரைவருக்குப் பின்னால் நாங்கள் நின்று கொண்டிருந்தோம். எங்களுக்குப் பின்னால் இருந்த ஒருவர் எங்களைப் பார்த்து, "முன்னாடி போங்க. இங்க ஒரே கூட்டமா



இருக்கு'' என்றார். என் அண்ணன், "இனிமே முன்னாடி போக முடியாதுங்க. இங்கே இடமே இல்லை" என்றார். அப்படியும் அவர் கேட்காமல், "முன்னாடி போங்க'' என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டேயிருந்தார். உடனே என் தங்கை கவிதா, "இதுக்கும் முன்னாடி எங்களாலே போக முடியாதுங்க. அப்படிப் போறதாயிருந்தா டிரைவரை எழுப்பி விட்டுட்டு நாங்கள், டிரைவரா உட்கார்ந்திருக்க வேண்டியிருக்கும்'' என்றாளே பார்க்கலாம். பேருந்தில் இருந்த அனைவரும் சிரித்து விட்டோம்.

நா. சாந்தி, கும்பகோணம்.



முன்னாலேயே முட்டை!

நாங்கள் பள்ளியில் அரையாண்டுத் தேர்வு எழுதிக் கொண்டிருந்தோம். தேர்வு எழுதிக் கொண்டிருக்கும்போதே பாதியில் வகுப்பு வாரியாக சத்துணவு முட்டை எடுத்து வந்து விநியோகித்தனர். எங்கள் வகுப்பறையில் வந்து போட்ட போது ஒரு குறும்பு மாணவன், "பரீட்சை எழுதிய பின்னால்தான் (ரிசல்ட்) முட்டை கிடைக்கும். ஆனால் இந்த முறை பரீட்சை எழுதும் போதே முட்டை கிடைத்து விட்டது'' என்றானே பார்க்கலாம். வகுப்பறையே அதிர்ந்தது.

கே. ஜெயப்புதல்வன், செஞ்சி.

நினைவுக்கு வருவது!

எங்கள் வகுப்பாசிரியர், 'பின்னையார் என்றாலே நம் நினைவுக்கு வருவது



அவரது தும்பிக்கைதான்' என்றார். அப்பொழுது வெளியில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒருவன் அவர் கண்ணில் பட்டு விட்டான். அவனை எழுப்பி 'பிள்ளையார் என்றாலே நம் நினைவுக்கு வருவது என்ன?'' என்று கேட்டார். அதற்கு அவன், "சார் பிள்ளையார் என்றாலே நம் நினைவுக்கு வருவது சுண்டலும், கொழுக்கட்டையும்தான்'' என்றானே பார்க்கலாம்!

டி. அமுதா, அனந்தபுரம்.

சாப்பிட்டா ஓடுமா?

எங்கள் வீட்டிற்கு கிராமத்துப் பெண்மணி ஒருவர் வந்திருந்தார். அப்பொழுது கிரைண்டர் 'கடகட' என்ற சப்தத்துடன் ஓடிக் கொண்டிருந்தது. என் அப்பா அதைச் சரிபண்ணினார். "இப்பொழுது சாப்டா ஓடுகிறது'' என்று என் அம்மா அப்பாவிடம் சொன்னார். உடனே அந்த கிராமத்துப் பெண்மணி, "என்னம்மா இது! கிரைண்டர் கூட சாப்பிட்டாத்தான் ஓடுமா?'' என்றார் வியப்புடன். அனை



வரும் 'கொல்' என்று சிரித்தோம், அந்தப் பெண்மணியைத் தவிர!

சி. ஈஸ்வரி, அருப்புக்கோட்டை.

பேச்சில்லா ஜீவன்

ஒருநாள் என் தம்பி என்னிடம் வந்து,



''அண்ணா, மாடு வாயில்லா ஜீவன் தானே?'' என்று கேட்டான். நானும், "ஆமாம்'' என்று சொன்னேன். "வாயில்லைன்னா பிறகு எப்படி மாடு சாப்பிடுகிறது? பேச்சில்லா ஜீவன்னு சொல்றது தானே சரியாயிருக்கும்?'' என்று கேட்டான். யோசித்துப் பார்த்த போது அவன் கேள்வியில் இருந்த வாதம் சரி என்றே எனக்குத் தோன்றியது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ஆர். தனராஜ், செஞ்சி.

ஒன்று இருபத்தைந்து

நானும் எனது தம்பியும் காய்கறி வாங்கி வருவதற்காகக் கடைத் தெருவிற்குச் சென்றிருந்தோம். தம்பி, "எனக்கு பிஸ்கட் வேண்டும்'' என்று கேட்டான். நானும் தம்பியும் 'பிஸ்கட்' கடைக்குச் சென்று, "ஒரு சின்ன பிஸ்கட் பாக்கெட் என்ன விலை?'' என்று கேட்டோம். அவர் "ஒண்ணு இருபத்தைந்து பைசா'' என்று




பதில் சொன்னார். ஒரு ரூபாய் இருபத்தைந்து பைசா என்பதைத்தான் அவர் அப் படி சொன்னார். இதைத் தவறாக; அரை குறையாகப் புரிந்து கொண்ட என் தம்பி, ''ஐம்பது பைசாவை எடுத்துக் கொடுத்து, "இந்தாங்க. இரண்டு பாக்கெட் கொடுங்க" என்று கேட்டான். கடைக்கு வந்திருந்த அத்தனை பேரும் குபீரெனச் சிரித்தனர்.

இராம. ஜெயகாந்தன், துத்திப்பட்டு.

கழுதையின் குணநலன்!

நான் ஐந்தாம் வகுப்புப் படிக்கும் போது எங்களுக்கு அரையாண்டுத் தேர்வு நடந்தது. தமிழ் பரீட்சையன்று அனை வருக்கும் கேள்வித்தாள் கொடுக்கப்பட் டது. ஒரு கேள்வி, விரும்பப்படும் தலை வரின் பண்புநலன்கள் (அல்லது) கழுதை யின் பண்புநலன்கள் பற்றியது. நான் தலை வரின் பண்புநலன்களை விளக்கி எழுதி னேன். தலைப்புத் தெரியாமல் அந்தக் கேள்வியை மறைத்து விட்டேன். அது தெரியாமல் பக்கத்துப் பையன் அது கழுதையின் பண்பு நலன்களுக்கான கட்டுரை என்று நினைத்து, அப்படியே



காப்பியடித்து தலைப்பை "கழுதையின் பண்பு நலன்கள்" என்று எழுதி விட்டான். தேர்வுத்தாள் தரும் போது, ஆசிரியர் அதைக் கூறிப் படிக்க வகுப்பே சிரிப்பில் அதிர்ந்தது.

ந. துரை, விழுப்புரம்.

சாப்பிட முடியாத காய்!

அறிவியல் ஆசிரியர் காய் என்ற தலைப்பில் பாடம் நடத்தினார். விதம்வித மான காய்கள், அவைகளின் மருத்துவ குணங்கள், சிறப்புகள் போன்றவற்றை விளக்கினார் ஆசிரியர். பிறகு அவரே காயைப் பற்றி எங்களிடம் பல வினாக்களைக் கேட்டார். பதிலளித் தோம். ஒரு மாணவனை எழுப்பி, "சாப் பிட முடியாத காய் எது?" என்று கேட் டார். அவன், "எட்டிக்காய்" என்றான்.



ஏனெனில் அது மிகவும் கசப்புடையது அல்லவா? உடனே புகழேந்தி என்ற மாணவன் எழுந்து, "சாப்பிட முடியாத இன்னொரு காய் சொக்காய்" என்றான். வகுப்பே சிரிப்பலை யால் வெடித்தது.

இர. சிவராஜ், செஞ்சி.

குழந்தை மாதிரி...

எங்கள் சித்தியின் திருமணம் சமீபத் தில் நடைபெற்றது. திருமணம் முடிந்து



சித்தி, மாப்பிள்ளை வீட்டிற்குச் செல்லும் போது எங்கள் பாட்டி (சித்தியின் அம்மா) பாசம் தாங்காது அழுது கொண்டே, புதுச் சித்தப்பாவிடம், "என் பொண்ணு குழந்தை மாதிரி. அவளை நீங்க நல்லா பார்த்துக் கணும்" என்று வழக்கமான வசனத்தைக் கூறினார். எங்கள் சித்தப்பா, ஜாலி டைப். ஆகையால், "கவலைப்படாதீங்க. உங்க பொண்ணுக்கு ஜனவரி 20-ஆம் தேதி போலியோ சொட்டு மருந்து கூடக் கொடுத்துடறேன்" என்று கூறியதுதான் தாமதம், பிரியும் சோகத்தையும் மீறி எங்கள் சித்தி, பாட்டி உட்பட அனைவரும் கொல்லென்று சிரித்தனர்.

நா. ப. ஷோபனா, சிதம்பரம்.

வணக்கம் குட்மார்னிங்!

சுட்டிப் பையன், ஹரிகணேஷுக்கு இரண்டரை வயது ஆகிறது. அவனுக்கு இப்பொழுதிலிருந்தே பள்ளிப் பாடங்களையும் பக்திப் பாடல்களையும் சொல்லிக் கொடுக்கிறோம். அவன் வீட்டுக்கு வருகிறவர்களுக்கு எல்லாம் "வாங்க... வாங்க..." என்று வரவேற்புக் கூறுவான். ஒரு நாள் அவனிடம் வீட்டிற்கு சிறியவர்களாக வந்தால் 'குட்மார்னிங்' சொல்ல வேண்டும். வயதானவர்கள் வந்தால் 'வணக்கம்' சொல்ல வேண்டும் என்று கூறினேன். ஒருநாள் வீட்டுக்கு நடுத்தர வயதுடைய ஒருவர் வந்திருந்தார். அவன் உடனே அவரை எப்படி அழைப்பது என்று தெரியாமல், "வாங்க குட்மார்னிங் வணக்கம்"



என்று எல்லாம் சேர்த்து கூப்பிட்டானே பார்க்கலாம்!

ராஜி. எஸ். ராஜலெட்சுமி, தரங்கம்பாடி.

"ஃபுட்பால் ஆடினா பசி எடுக்காது."
"எப்படி?"
"அதுதான் ஃபுட் பால் ஆச்சே."
— பா. ஜெயக்குமார்



கோடரிக் கூழ்!



வயது முதிர்ந்த படையாள் ஒருவன் விடுமுறைக்காக சொந்த ஊருக்குப் போய்க் கொண்டிருந்தான். நடந்து நடந்து அவன் களைத்துப் போய்விட்டான். வயிறு பசித்தது. வழியில் ஒரு கிராமத்துக்கு வந்ததும் முதலாவது குடிசையின் கதவைத் தட்டினான்.

"வழிப்போக்கன், இராப் பொழுதைக் கழிக்க இடம் தாருங்கள்" என்று கேட்டான்.

கதவைத் திறந்த கிழவி, "படையாளே, வா அப்பா" என்று வரவேற்றாள்.

"அம்மணி, பசியால் வாடுகிறவனுக்குச் சாப்பிட ஏதாவது கிடைக்குமா?" என்று கேட்டான் படையாள்.

கிழவியிடம் எல்லாமே நிறைய இருந்தன. ஆனால் அவள் ஒரு கருமி. பரம ஏழை மாதிரி பாசாங்கு செய்தாள்.

"அட பாவமே! என்னிடம் எதுவுமே இல்லையே? விடிந்தது முதல் நானும் உணவின்றிப் பட்டினியாய் இருக்கிறேன் என்ன செய்வேன்?" என்று புலம்பினாள் கிழவி.

"ஒன்றும் இல்லையானால், ஏன் வருத்தப் படறே? என்ன செய்வது?" என்று அவளைத் தேற்றிய படையாள், காம்பு இல்லாத கோடரி ஒன்று பெஞ்சுக்கு அடியில் இருந்ததைக் கவனித்தான். "வேறு எதுவும் இல்லையானால், அதோ அந்தக் கோடரியை வைத்துக் கூழ் செய்யலாமே பாட்டி?" என்றான்.


இரு கைகளையும் உயர்த்திக் கிழவி ஆச்சரியப்பட்டுக் கொண்டாள்.

"கோடரிக் கூழா? கேட்டறியாத அதிசயமாய் இருக்கிறதே!"

"ஒரேயொரு சட்டி மட்டும் கொண்டு வந்து கொடு. நான் செய்து காட்டுகிறேன்."

கிழவி சட்டியைக் கொண்டு வந்து கொடுத்தாள். படையாள் கோடரியைக் கழுவிச் சட்டியில் வைத்தான். பிறகு சட்டியில் நீரை நிரப்பி அடுப்பில் வைத்துக் காய்ச்சினான்.

எல். ரஞ்சித்



கிழவி வைத்த கண் வாங்காமல் படையாளைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

படையாள் ஒரு கரண்டியை எடுத்துக் கொதிக்கும் நீரை நன்றாய்க் கலக்கிச் சிறிதளவு வாயில் விட்டு ருசி பார்த்தான்.

"இன்னும் சிறிது நேரத்தில் தயாராகிவிடும். ஆனால் உப்பு தான் இல்லை. என்ன பண்ணுவது?"

"உப்புதானே? என்னிடம் வேண்டியது இருக்கிறதே? இந்தா கொஞ்சம் எடுத்துக் கொள்."

படையாள் சிறிதளவு உப்புப் போட்டு, மீண்டும் கொதி நீரை வாயில் விட்டு ருசி பார்த்தான்.

"ஒரு கையளவு கேப்பைமாவையும் போட்டோமானால், எவ்வளவு நன்றாய் இருக்கும் தெரியுமா?" என்றான்.

உக்கிராணத்தில் ஒரு சிறுபையிலிருந்த கேப்பைமாவைக் கிழவி கொண்டு வந்தாள்.

"இந்தா, வேண்டிய அளவு எடுத்துப் போடு" என்றாள்

படையாள் மும்முரமாய் வேலை செய்தான். அவ்வப்பொழுது கூழைக் கிண்டிச் சிறிதளவு வாயி விட்டு ருசி பார்த்தான். கிழவி அவன் செய்வதைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றாள். கணப்பொழுது கூட அவளால் பார்வையை வேறு எங்கும் திருப்ப முடியவில்லை.

கூழ் தயாரானதும் படையாள் அதில் ஒரு கரண்டி அளவு சாப்பிட்டுப் பார்த்துவிட்டு, "நன்றாய் அமைந்து விட்டது" என்றான். உடனே, "கொஞ்சம் வெண்ணையையும் சேர்த்தோமானால், இந்தக் கூழைக் காட்டிலும் சுவையானது உலகில் வேறு எதுவும் இருக்காது" என்றான்.

கிழவி வெண்ணெயும் கொண்டு வந்து விட்டாள். எந்தக் குறையும் இல்லாதபடி கூழுடன் வெண்ணெயும் சேர்த்துக் கொண்டனர்.

"நல்லது, ஒரு கரண்டி எடுத்து வா, இருவரும் உட்கார்ந்து சாப்பிடுவோம்!"என்றான் படையாள்.

இருவருமாகக் கூழைச் சாப்பிட ஆரம்பித்தனர். 'பிரமாதமாய் இருக்கிறதே!' என்று புகழ்ந்து கொண்டான் கிழவி.

"கோடரிக் கூழ் இவ்வளவு நன்றாய் இருக்குமென நான் நினைக்கவே இல்லை!"என்று கிழவி வியந்து வியந்து கூறினாள்.

படையாள் உள்ளுக்குள் சிரித்தவாறு சாப்பிட்டான்.

ருஷ்யக் கதை.

கேட்கட்டுமா டாக்டர்?

● எஸ். விக்னேஷ், சோழவந்தான்.

? 'நாக்கு வழிப்பான்' (TONGUE CLEANER) உபயோகிப்பதால் நாக்கிலுள்ள சுவை அரும்புகள் அழிந்து விடும் என்று கூறுகிறார்களே! இது உண்மையா, டாக்டர்?

! உண்மையில்லை, தம்பி! நாக்கு வழிப்பான் உபயோகிப்பதால் நாக்கில் உள்ள சுவை அரும்புகளுக்கு அழிவில்லை! ஆபத்தில்லை! இன்னும் சொல்லப் போனால், அதைக் கொண்டு நாக்கை சுத்தப்படுத்தும் போது நாக்கின் மேல் படர்ந்திருக்கும் அழுக்குப் படலம் நீங்கி, சுத்தமாகி விடுவதால், சுவை அரும்புகள் உற்சாகமடைந்து விடுகின்றன. நாம் சாப்பிடும் போது உணவின் சுவையை உடனடியாக உணர்த்தி விடுகின்றன. இந்த இடத்தில் ஒரு



முக்கியத் தகவலைத் தர விரும்புகிறேன். தமிழ் நாட்டில் கிராமவாசிகள் வேப்பங்குச்சிகளை இரண்டாகப் பிளந்து அவற்றை நாக்கு வழிப்பான்களாக உபயோகிப்பார்கள்; கேரளாவில் தென்னம்பாளைகளை இவ்வாறு உபயோகிப்பதுண்டு. நகர்ப்புறங்களில் பிளாஸ்டிக் மற்றும் உலோகத்தில் செய்யப்பட்ட நாக்கு வழிப்பான்கள் பழக்கத்தில் உள்ளன. பண்டைக் காலத்தில் அரசர்கள் தங்கத்தால் செய்யப்பட்ட நாக்கு வழிப்பான்களை உபயோகித்திருக்கிறார்கள். என்றாலும் மருத்துவர்களைப் பொறுத்தவரையில் 'நாக்கு வழிப்பான்' என்று தனியாக எதுவும் தேவையில்லை என்றே கருதுகிறார்கள். பதிலாக, பல் துலக்கியே போதும்! பல் துலக்கியால் நாக்கின் மேல் பரப்பை முன்னும் பின்னும் தேய்த்து விட்டாலே நாக்கு சுத்தமடைந்து விடும்.

● எஸ். செந்தில் குமார், திருப்பரங்குன்றம்.

? என் வயது 16. எனக்குப் புழுங்கல் அரிசியை வாயில் மென்று கொண்டிருக்கும் பழக்கம் உண்டு. இப்படி சதா அரிசியை மென்று கொண்டிருந்தால் 'மஞ்சள் காமாலை' வரும் என்கிறார்கள், என் வீட்டில்! இது உண்மையா, டாக்டர்?

! சதா அரிசியைத் தின்று கொண்டிருந்தால் மஞ்சள் காமாலை வரும் என்பது உண்மையில்லை. அதே சமயம் இந்தப் பழக்கம் உன் ஆரோக்கியத்திற்கு நல்லதில்லை. பல சத்துக் குறைவு நோய்களுக்கு வழி அமைக்கும். எப்படியெனில் அரிசியை மட்டும் சாப்பிட்டுக்



கொண்டிருந்தால் பசி குறைந்து விடும். வேறு உணவுகளைச் சாப்பிடப் பிடிக்காது. அரிசியில் எல்லா சத்துக்களும் இல்லையே! மாவுச் சத்து ஒன்றுதான் அரிசியில் பிரதானம். இது மட்டும் உன் உடல் வளர்ச்சிக்குப் போதாது! புரதச் சத்து, கொழுப்புச் சத்து, வைட்டமின்கள், தாதுக்கள் போன்ற பிற சத்துக்களும் உனக்குத் தேவை. இவை பருப்பு, பிற தானியங்கள், பால், பழங்கள், காய்கறிகள் போன்றவற்றில் உள்ளன. இவற்றை அதிகம் சேர்க்காமல், வெறுமனே அரிசியை மட்டும் அதிகமாகச் சேர்த்து வந்தால், பிற சத்துக்களின் அளவு குறைந்து ரத்த சோகை, பார்வைக் குறைபாடு, தோல் நோய்கள், புரதச் சத்துக் குறைவு நோய்கள், வைட்டமின் பற்றாக்குறை நோய்கள் என்று பல நோய்கள்

அரிசி தின்றால் காமாலை வருமா?

உன்னைத் தாக்கப் படை எடுக்கும். எச்சரிக்கை!

● **எல். பாரதி கண்ணம்மா, காட்டுப்பாக்கம்.**

? என் அப்பா அடிக்கடி பீடி, சிகரெட் பிடிக்கிறார். இதை மறக்க வழி உண்டா?

! 'நிகோட்டின் பட்டை' என்ற பெயரில் கைக் கடிகாரப் பட்டையில் பாதி அளவிற்கு ஒரு பட்டை இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் நிகோட்டின் அடைக்கப்பட்டுள்ளது. இதைக் கையில் கட்டிக் கொண்டால் அல்லது ஒட்டிக் கொண்டால் அதிலுள்ள நிகோட்டின் தோல் வழியாக சிறிது சிறிதாக உடம்புக்குள் நுழைந்து ரத்தத்தில் கலக்கிறது; இதனால் நிகோட்டின் மோகம் குறைகிறது; புகைப் பழக்கம் மறந்து போகிறது என்று சமீபத்திய ஆராய்ச்சிக் குறிப்பு ஒன்று விளக்கம் கொடுத்துள்ளது. இதைப் பயன்படுத்திப் பார்க்கலாம். என்றாலும்



என்னுடைய தனிப்பட்ட ஆலோசனை என்னவென்றால், புகைப்பிடிக்கும் பழக்கத்தை நிறுத்துவதற்கு மிகச் சிறந்த வழி, மனக்கட்டுப்பாடு தான்! மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. இன்றிலிருந்து புகை பிடிப்பதில்லை என்று மிகுந்த மனக்கட்டுப்பாடுடன் செயல்பட்டால் மட்டுமே, இந்தத் தீய பழக்கத்திற்கு மூடு விழா நடத்த முடியும்.

● **பிரேமலதா, ஆட்டையாம்பட்டி.**

? வெங்காயத்தின் சாறு கண்ணில் பட்டால் கண் எரிகிறதே, ஏன்?

! வெங்காயத்தின் சாற்றில் புரோமுன் சல்பீனிக் அமிலம் உள்ளது. இது அமில நைட்ரஜன் வகையைச் சேர்ந்தது. மிக எளிதில் ஆவியாகக் கூடியது. அப்படி ஆவியாகும் போது புரோலென்சைல் ஆக்சைடைத் தோற்றுவிக்கிறது. இந்த ஆவி கண்களில் படும்போது கண்கள் எரிகின்றன. கண்ணீர் தாரை தாரையாக வருகிறது.

● **பி. கீதா, புதுதில்லி.**

? 'நீலக் குழந்தைகள்' (BLUE BABIES) என்று கூறுகிறார்களே, இதைப் பற்றி விரிவாகக் கூறுங்கள், டாக்டர்!

! குழந்தைகள் பிறக்கும்போதே உடம்பில் நீலம் பூத்துப் பிறப்பதை 'நீலக் குழந்தைகள்' என்கிறோம். இது ஒருவகைக் குறைபாடு. பிறவியிலேயே ஏற்படுவது. உடம்பில் உள்ள திசுக்களுக்குத் தேவையான ஆக்ஸிஜன் கிடைக்காத காரணத்தால் குழந்தையின் உடல் நீலம் பூக்கிறது. இது எப்படி ஏற்படுகிறது என்பதை இப்போது பார்ப்போம். நம் இதயத்தில் நான்கு அறைகள் உள்ளன. வலப்பக்கம் இரண்டு. இடப்பக்கம் இரண்டு. வலப்பக்கம் உள்ள மேல் அறைக்கு வலது ஆரிக்கிள் என்று பெயர். கீழ் அறைக்கு வலது வெண்ட்ரிக்கிள் எனப் பெயர். இடது பக்கம் உள்ள மேல் அறை இடது ஆரிக்கிள்; கீழ் அறை இடது வெண்ட்ரிக்கிள். இதயத்தை வலது, இடது எனப் பிரிப்பது ஒரு தசைச் சுவர். குழந்தை சிசுவாகத் தாயின் கருப்பையில் வளரும் போதே இது உருவாகி விடுகிறது. இதயத்தின் வலப்பக்கம் உள்ள மேல், கீழ் அறைகளில் அசுத்த ரத்தம் உள்ளது. இடப்பக்கம் உள்ள இரண்டு அறைகளில் சுத்த ரத்தம் உள்ளது. அசுத்த ரத்தமும் சுத்த ரத்தமும் இரண்டறக் கலந்து விடாமல் தடுப்பது இந்தத் தசைச்சுவரின் பணி. என்றாலும், இதயத்தின் மேல் பக்கம் உள்ள வலது ஆரிக்கிள், இடது ஆரிக்கிள் என்ற அறைகளுக்கு இடையில் உள்ள தசைச் சுவரில் மட்டும் மிகச் சிறிய துளை ஒன்று இருக்கும். இதற்கு 'ஓவேல் துளை' (FORAMEN OVALE) என்று பெயர்! வழக்கமாக, குழந்தை பிறக்கும் போது இந்தத் துளை மூடிக் கொள்ளும். இதனால் அசுத்த ரத்தமும் சுத்த ரத்தமும் கலக்காது. சில சமயங்களில் குழந்தை பிறக்கின்ற போது இந்தத் துளை மூடுவதில்லை. இதன் விளைவாக அசுத்த ரத்தமும் சுத்த ரத்தமும் இரண்டறக் கலந்து விடுகின்றன. இப்போது குழந்தையின் தேவைக்கேற்ப இந்த கலப்பு ரத்தத்தில் ஆக்ஸிஜன் கிடைப்பதில்லை! விளைவு, குழந்தையின் உடல் நீல நிறத்திற்கு மாறுகிறது. இந்த நிலைமை நீடித்தால் குழந்தையின் உயிருக்கு ஆபத்து ஏற்படும். ஆகையால், அறுவை சிகிச்சை மூலம் இருதயத் தசைச் சுவரில் ஏற்பட்டிருக்கும் துளையை மருத்துவர்கள் அடைத்து விடுவார்கள். இதன் மூலம் நீலநிறக் குழந்தைகளின் உயிரைக் காப்பாற்ற முடியும்.

மறக்க முடியாதது



முழித்தால் என்ன பொருள்?

நான் டேனிஷ் மிஷன் உயர்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்புப் படிக்கிறேன். எங்கள் பள்ளிக்கு புதிதாக தலைமை ஆசிரியை வந்திருக்கிறார். நடுநிலைப் பள்ளியாக இருந்த எங்கள் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றிய பெருமை அவருக்கே உண்டு.

அவர் எங்கள் வகுப்பிற்கு ஆங்கிலப் பாடம் நடத்த வருவார். எங்கள் வகுப்பில் ஆங்கிலத்தில் நிறைய பேர் மண்டு. பாடம் நடத்தும் போது இடையில் நிறுத்தி, "புரிகிறதா?" என்று கேட்பார். புரியவில்லை என்று சொன்னால் எங்கே அடித்து விடுவாரோ என்று பயந்து நாங்களும் (புரியாமலேயே) புரிகிறது என்று கூறி விடுவோம். அடுத்த நாள், தான் நடத்திய பாடத்திலிருந்து அவர் கேள்வி கேட்பார். நாங்கள் திருதிருவென்று முழிப்போம். உடனே ஆசிரியை கூறுவார். "நேற்று பாடம் நடத்தினப்போ புரிகிறதா என கேட்டேனா இல்லையா? புரிகிறது என்று அப்பச் சொல்லி விட்டு இப்போ இப்படி முழிச்சா என்ன அர்த்தம்? புரியவில்லை என்றால் பயப்படாமல் புரியவில்லை என்று கூறுங்கள். விளக்குகிறேன்" என்பார்.

என்னதான் எழுத்து வேலை இருந்தாலும் மற்ற வகுப்புகளில் ஆசிரியர்கள் எப்படிப் பாடம் நடத்துகிறார்கள் என்பதைப் பார்க்க பள்ளியை அடிக்கடி வலம் வருவார்.

"மாணவர்கள் அனைவரும் நன்கு கற்று அறிவில் சிறந்து விளங்கி நம் பள்ளியின் மதிப்பை உயர்த்த வேண்டும்" என்று அடிக்கடி கூறுவார். பள்ளிக்காகவும் மாணவர்களின் நன்மைக்காகவும் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் எங்கள் தலைமை ஆசிரியை மிஸஸ் வயலட் என்றுமே எங்களால் மறக்க முடியாதவர்.

– மா. மாலதி, சந்தப்பேட்டை.




குரு தெய்வம்!

என் பெயர் வித்யாலக்ஷ்மி. நான் '96 ஏப்ரலில் பத்தாம் வகுப்பு எழுதியிருக்கிறேன். இதற்கு முக்கிய காரணம் என் பள்ளியின் தலைமை ஆசிரியர், திரு. வெங்கடாஜலபதி ஆவார்.

எங்களை அவருடைய சொந்தக் குழந்தைகளாக நினைத்து, தினமும் ஆறு மணி வரையில் கிளாஸ் வைத்து, எங்களுக்கு ஐந்து வருட தேர்வுத் தாள்களை (Lotus - Question Bank) தந்து, ஞாயிற்றுக் கிழமைகளிலும் எங்களுக்காக ஸ்பெஷலாக வருவார். கிளாஸ் எடுத்து, அவருடைய அசௌகர்யத்தைப் பார்க்காமல் சிரமப்பட்டு தேர்வை எழுத வைப்பார்.

இவரே என்னைக் கவர்ந்த தலைமை


தலைமை ஆசிரியர்!



ஆசிரியர். மற்றவர்களைப் பொருத்தவரை, மாதா, பிதா, குரு, தெய்வம். ஆனால் எங்களைப் பொருத்தவரை குரு, மாதா, பிதா, தெய்வம்!

– வை. வித்யாலக்ஷ்மி, திருச்சி – 18.

நண்பனாக



என்னால் மறக்க முடியாத தலைமை யாசிரியர் கடந்த வருடம் எங்கள் பள்ளி யில் பணியாற்றிய உயர்திரு. எஸ். கணேச சண்முக சுந்தரம் அவர்கள்தான். இவர் இவ்வருடம் மாற்றிப் போய் விட்டார். அவரை என்னால் என்றுமே மறக்க முடி யாது.

அவர் பாடம் நடத்தும் முறையும், அவர் தரும் விளக்கங்களும் அருமையாக இருக்கும். இடையிடையே நகைச்சுவையா கவும் நடத்துவார். ஆனால் கண்டிப்பு மிக வும் உள்ளவர். வகுப்பு நேரத்தைத் தவிர பிற நேரங்களில் ஒரு நண்பனாகவே பழகு வார். துன்பம் வரும் போது கைகொடுத்து உதவுவார். இவரை எங்கள் பள்ளியில் படித்த யாராலுமே மறக்க முடியாது. இவரே என் மனதைக் கவர்ந்த தலைமை யாசிரியர்.

– எஸ். ஆரோக்கியரீகன், பாம்பன்.

பாடத்திற்கு முன்...

நான் ஐந்தாம் வகுப்பை, தொடக்கப் பள்ளி தமிழ் மீடியத்தில்தான் படித்தேன். ஐந்தாம் வகுப்பில் ஆங்கிலப் பாடம் எடுத்த தலைமை ஆசிரியையை என்னால் மறக்கவே முடியாது. அவர் பெயர் பத்மா வதி தம்பிரான். ஒவ்வொரு நாளும், ஆங் கில வகுப்பைத் துவக்குமுன், வந்தவுடன் மறக்காமல் படிக்க வேண்டிய 'Memory poem'ஐ மாணவ, மாணவிகளை எழுந்து நின்று சொல்லச் சொல்வார்கள். அதன் பிறகு 'What day is today?' என்று கேள்வி கேட்டு நாங்கள் அனைவரும் பதில் சொன்ன பிறகுதான் ஆங்கிலப் பாடத்தை நடத்துவார்கள். எத்தனை நேரமானாலும் இதை மட்டும் முடிக்காது பாடத்தை நடத் தவே மாட்டார். இன்றும் அவர் வகுப்பை நடத்திய முறை கண்முன் நிற்கிறது. அதை என்றுமே என்னால் மறக்க முடியாது. இப்பொழுது நான் 10-ஆம் வகுப்பு. வேறு பள்ளியில் படிக்கிறேன்.

– ரா. தீபா, தென்காசி.



பூக்கள்

வண்ண வண்ணப் பூக்களாம்!
வாசம் கமழும் புக்களாம்!
கண்ணைக் கவரும் பூக்களாம்!
காற்றில் அசையும் பூக்களாம்!

கொல்லை முழுதும் பூத்துமே
குலுங்கிச் சிரிக்கும் பூக்களாம்!
இல்லம் மிகவும் நேர்த்தியாய்
இலங்கும் அழகைத் தேக்குமாம்!


பள்ளிச் சிறுவர் கூட்டம் போல்
பாடி வண்டு ஆர்க்குமாம்!
அள்ளி மதுவை ஊட்டியே
அவற்றின் பசியைத் தீர்க்குமாம்!

சின்னச் சின்னப் பூக்களைச்
சேர்த்து ஆரம் கோக்கலாம்!
பின்னித் திலகம் தீட்டியே
பெண்கள் குழலில் சூட்டலாம்!

எங்கள் வீட்டுத் தோட்டத்தில்
ஏரா ளமாய்ப் பூக்களாம்!
தங்கை, தம்பி யாவரும்
தாரா ளமாய்ப் பார்க்கலாம்!

உங்கள் வீட்டில் தோட்டத்தை
உண்டு பண்ண நாட்டமா?
இங்கி ருந்து நாற்றுக்கள்
எடுத்துச் சென்று நாட்டலாம்!

— **தளவை இளங்குமரன்**



1941 ஆம் வருஷம். உலகப் புகழ் பெற்ற சர்வாதிகாரி ஹிட்லர் ரஷ்யா மீது படையெடுத்த காலம்.

ரஷ்யாவிலுள்ள ஒரு கிராமத்தில் தள்ளாத கிழவி ஒருத்தி வாசலில் உட்கார்ந்து கடலை உடைத்துக் கொண்டிருந்தாள்.

மதிய நேரம் -

கிராமத்தவர்கள் எல்லோரும் விவசாய வேலைக்குப் போய் விட்டதால் கிழவி மட்டுமே தனியாக கிராமத்திலிருந்தாள். அந்த நேரம் பார்த்து....

ஹிட்லருக்குச் சொந்தமான ஜெர்மானிய பீரங்கிப் படைகள் அணி வகுத்து வந்தது. அந்த கிராமத்தின் வழியாக ரஷ்யாவினுள் புகுந்தது படை.

கிழவிக்கு திகிரென்றது.

ஆபத்து வந்துவிட்டதைத் தனது நாட்டு இராணுவதிற்குச் சொல்ல வேண்டுமென்று தேசப் பற்றால் துடித்தாள்.

என்ன செய்யலாம்? எப்படிச் செய்யலாம்?

"எத்தனை பீரங்கிகள் வந்தன என்பதை எண்ணி, நமது ராணுவத்திற்குச் சொல்லலாமே" என்று நினைத்தாள். ஆனால், கிழவிக்குப் பள்ளிப் படிப்புக் கூடக் கிடையாது. அதனால் எண்ணவும் தெரியாது. புத்திசாலியான கிழவிக்கு ஒரு யோசனை தோன்றியது.

உடனே......

சிறிய பீரங்கிகள் செல்லும் போது ஒரு கடலைப் பருப்பையும் பெரிய பீரங்கி செல்லும் போது உடைக்காத முழுப்பருப்பையும் எடுத்து தனித்தனியாக வைத்தாள்.

பீரங்கியில் சென்ற ஜெர்மானிய வீரர்கள் கிழவி கடலை உடைப்பதாக நினைத்துக் கொண்டு சென்றனர்.

இரவு வந்தது.

அண்ணா அன்பழகன்



புத்திசாலிக் கிழவி!

வேலைக்குச் சென்ற ஆண்கள் கிராமத்துக்குத் திரும்பினர். கிழவி தனது மகனை அழைத்து தனித் தனியாக வைத்திருந்த கடலைகளை எண்ணச் சொன்னாள்.

மொத்தம் எத்தனை பீரங்கிகள் ரஷ்யாவில் நுழைந்தன என்பதைக் கணக்குப் பண்ணி, உடனே மகனைத் தனது நாட்டு இராணுவத் திடம் சொல்லுமாறு அனுப்பினாள்.

ஜெர்மானியப் படை புகுந்த அன்றே எதிரியின் பலம் தெரிந்து விட்டதால் ரஷ்யாவால் எளிதாக வெற்றி பெற முடிந்தது.

சார் தபால்!



✉ சேரநம்பி குறிப்பிட்டுள்ள (Siafu) சிப்பாய் தீ எறும்பு பற்றிய விவரங்கள் எதில் உள்ளன? ஆலமரம் தேசிய மரமாக அறிவிக்கப்பட்டுள்ள செய்தி. எதில் உள்ளது? இவை எங்கு கிடைக்கும்? – சென்னை - 14, சிதை. வயிரவன், புதுகை சா. குணசேகரன்.

(Siafu குறிப்புகள் GRZIMEKS ANIMAL LIFE - ENCYCLOPEDIA, COLLIN'S GEN INSECTS, தொகுதிகளில் உள்ளன. இவை சென்னை கன்னிமரா பொது நூலகத்தில் (காண மட்டும்) கிடைக்கும். புஸ்தக மஹால் வெளியிட்டுள்ள BIRDS & ANIMALS QUIZ BOOK-ல் கூட இது தரப்பட்டுள்ளது. ஆலமரம் தேசியமரம் என்பது மத்திய அரசின் தகவல் களஞ்சியம் (INDIA INFORMATION) தொகுதியில் உள்ளது. 1995 மனோரமா இயர் புத்தகத்தில் கூட இது தரப்பட்டுள்ளது. – சேரநம்பி)

✉ சட்டத்தை மதித்து நடக்க வேண்டிய அவசியத்தை 'பவளம் தந்த பரிசு' உணர்த்தியது! படங்கள் கண்களை ஈர்த்தன! – வாணியம்பாடி அப்துல் முத்தலீப், செஞ்சி வா. பலராமன், வேலக்குறிச்சி சா. கணேசன், கருமத்தம்பட்டி இரா. அருண் பிரகாஷ், மேலப்பாதி எஸ். நாகராஜன், திருச்சி – 14. வி. ஆர். கிருத்திகா, ப்ரங்கிப்பேட்டை காசி நடராஜன், வடமாதிமங்கலம் வே. தாமரைச் செல்வன், தேத்தாங்குடி தெற்கு என். அருண்குமார், பவித்திர மாணிக்கம் டி. முருகேசன், விருத்தாசலம் வி. பிரபாகர், வெள்ளிக்கிடங்கு ஆர். முருகானந்தம். கபிஸ் தலம் எஸ். வினோத்பாபு, செல்லபுரம் கே. புவனேஸ்வரி.

✉ 'பூச்சிகளின் விந்தைகள்!' வியப்பில் ஆழ்த்தியது! அறிவியல் பணியில் கோகுலத்தின் பங்கு மகத்தானது! – புதுகை வா. சிவனேசன், காரை. வி. துரைமாணிக்கம், நாகலாபுரம் வா. சுபமணி, திருவான்மியூர் புனிதா, பவித்ரமாணிக்கம் தி. மனோகரன், குடந்தை ஆர். எஸ். நாதன், சோழன்மாளிகை கோ. ஆனந்தன்.

✉ "கரடிக் கோப்பை கிரிக்கெட் போட்டி!" – இது வரை யாருமே பண்ணாத முயற்சி சார்! வரிவரியா ரசிச்சோம்! எழுதினவர் பெயரை இருட்டடிப்பு பண்றீங்களே சார்! – பேராவூரணி வா. சபாநாயகம், துவரங்குறிச்சி வா. சின்னத்தம்பி, மயிலை கா. வேதாசலம், கபிஸ்தலம் ஆர். ரவிவர்மன், மேலப்பாதி எஸ். நாக ராஜன், குமாரமங்கலம் கே. எஸ். கவிதா, பவித்ர மாணிக்கம் டி. முருகேசன், விருத்தாசலம் வி. பிரபாகர், வெள்ளிக்கிடங்கு ஆர். முருகானந்தம், திருச்செங்கோடு இரா. அ. தென்றல் நி[illegible]ன், கபிஸ் தலம் எஸ். வினோத்பாபு.

✉ 'எங்கள் ஊரில் நடந்தது' பகுதி, சுவையாக இருந்தது. "ஆமையா" சிரிக்க வைத்தது! ஆனால், உள்ளடக்கம் பகுதியில் உள்ள பக்க எண்படி, இது இல்லையே! – திருத்தணி சா. விஜயகுமார், திண்டிவனம் க. மாணிக்கவல்லி, சிதம்பரம் வா. பெரியநாயகி, மேல்கபிஸ்தலம் ஆர். ரவிவர்மன், ஓமலூர் ஏ. கணேசன், குடந்தை ஆர். எஸ். நாதன்.

✉ 'புவனா தேடிய புதையல்' ஆங்கிலக் கதைகள் மாதிரி சஸ்பென்ஸாகவே ஓடுகிறதே! படங்கள் சூப்பர்! - மதுரவாயில் சா. சுப்ரமேயன், திருமலைப் பட்டி வா. சொக்கலிங்கம், உடையார்குடி மோ. ஜானகி, சின்னசேலம் இரா. பிரசன்னகுமார், வெள்ளிக்கிடங்கு ஆர். முருகானந்தம்.

✉ 'சாட் பீட் கித்'தை வைத்து முழுத் தொடர் கதை பண்ணக் கூடாதா? – வேங்கைவாசல் க. பால்ராஜ், வழுத்தூர் பா. மணிவாசகன், சாத்தூர் கி. சின்னராஜாத்தி, கபிஸ்தலம் ஆர். ரவிவர்மன்.

✉ போன இதழ் கோகுலத்தில் 24 கவிதைகள் சார்! அத்தனையும் பலாச்சுளைதான்! படிக்கும் போதே எங்களுக்கும் எழுத வேண்டும் என்ற துடிப்பு ஏற்படுகிறது! – திருமங்கலம் வா. சுதா, குடந்தை எஸ். மாலி, அச்சிறுபாக்கம் மா. சுக்கூர், காட்டுமன்னார் கோவில் தின. அன்புதேவன், விருத்தாசலம் வி. பிரபாகர் பிரசன்னா.

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 100/-; விமானத் தபால் ரூ. 200/-.

பசுமை விதைத்து, வளமை பெருக்கும் ஈஸ்வர்



ஈஸ்வர் குரோடெக் லிட்., மதுரைக்கு அருகில் மிகப் பெரிய பசுமையான சோலையை (சுமார் 5000 ஏக்கர் நிலப்பரப்பு) உருவாக்கி வரும் முன்னணி தொழில் நிறுவனம்.

இந்த சோலையில் உருவாகும் தேக்கு, காய்கறி மற்றும் பழத் தோட்டங்கள் பசுமை பெருக்கி வளமை பெருக்க வழி வகுப்பவை.

சிறந்த வேளாண் நிபுணர்கள் மற்றும் தொழில் நுட்ப வல்லுனர்கள் இந்த ஈஸ்வர் சோலையை மிகச் சிறந்த லாபத்திற்கு இயக்குவார்கள்.

மேலும், தரிசு நிலங்களை பொன் விளையும் பூமியாக்கும் டீ-சல், உரங்கள், பூச்சி மருந்துகள் மற்றும் விதைகளை ஈஸ்வர் தயாரிக்கிறது.

ஈஸ்வர்-இன் பொன் விளையும் திட்டங்கள்:

உங்கள் முதலீடு	நீங்கள் பெறுவது	20 ஆண்டுகளில் மதிப்பு
ரூ. 25,000/- அல்லது ரூ. 250/- வீதம் 100 சுலப தவணைகள்	10,000 ச. அடி நிலம்	ரூ. 10 லட்சம்
	24 தேக்கு மரங்கள்	ரூ. 24 லட்சம்
	2 ஒட்டு மா	ரூ. 50,000
	2 வீரிய தென்னை	
	காய்கறி தோட்டம்	ரூ. 50,000

20 ஆண்டுகளில் ரூ. 35 லட்சம் மதிப்பு சொத்துக்கள்

• 10,000 ச. அடி நிலம் உடன் உங்கள் பெயரில் பதிவு செய்யப்படுகிறது. • அற்புத தொழில்நுட்ப விந்தை • சிறந்த நீர்வளம், மண்வளம், பயிர் வளம் • சில ஆண்டுகளில் உங்கள் நிலம் மதுரை நகரின் மையமாகி விடும். • பண்ணை வீடுகளும் கட்டிக்கொள்ளலாம்.

ரூ. 100/- வீதம் 15 மாதங்கள் செலுத்தி லட்சம் பெறும் திட்டங்களும் உள்ளன.

ESWAR GROW-TEK LTD AGRI

287, West Masi Street, Madurai 625 001. Phone: 540305, 540843.
Fax : 0452-540305. Telex : 0445-478-AGRI-IN.

பசுமை வளம் நிறைந்த இந்தியாவை உருவாக்குவோம்.

எங்கள் கம்பெனி (ஈஸ்வர்), சென்னையைச் சார்ந்த ஈஸ்வரி குரூப் ஆப் கம்பெனிகளுக்கு எந்த விதத்திலும் தொடர்பு இல்லையென்று தெரிவித்துக்கொள்கிறோம்.

FIN-HANS R K SWAMY/BBDO 15493 A EGTL

GOKULAM (Tamil) July '96 REGISTERED NO. TN MS (S) 281 Registered as Newspaper is Sri Lanka

